பாரதியாரின்

கண்ணன் பாட்டு

வித்துவான்

வேலன் எழுதிய விளக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

R-Chandran

பாரதியின் கண்ணன் பாட்டு

(மாணவர் பதிப்பு)

விளக்கம்:

சித்தாந்தப் புலவன்

வித்துவான் க. ந. வேலன் B. O. L.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு ஆனி 1974

உரிமை பதிப்பு

மாதினி பிரசுரம்

வெளியீடு - 2

அச்சுப்பதிவு: கூட்டுறவு அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது அன்பான மாணவர்க்கு

பாரதி பாடலால் தமிழ் மொழி ஒருபடி உயர்ந்தது. தமிழரும் உயர்ந்தனர். அவர் பாடலுள் ஒரு பகுதியாம் கண்ணன் பாட்டு. ஒரு பெரும் தத்துவம். பாரதி நின்ற தத்துவத் தளம் அது. எல்லாம் அழியும். தத்துவம் அழியாது.

அதனை அறியும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்துள்ளது. உங்கள் பிரச்சினைகள் எத்தனையோ? இதனைப் படித்து என்ன பயன்? என்று கேட்கின்றீர்கள். அந்தக் கேள்விக்கு விடை கண்ணன் பாட்டுத்தான், 'படித்து என்ன பயன்? என்ற வீறுவோடு படிக்கத் தொடங்குங்கள். படித்தபின் அந்தக் கேள்வியால் என்ன பயன்? என்று நீங்களே கேட்பீர்கள்.

ஏன்? நீங்கள் ஒரு புதிய உலகுக்கு அழைத்துச் செல்லப்படுகிறீர்கள். அங்கு தோழர்களையும், பெற்றோரையும், ஆசிரியரையும் உங்கள் ஏவலரையும் உங்கள் காதலரையுங்கூடச் சந்திக்கிறீர்கள். பெயரளவில் இவர்கள் எல்லாம் உங்களுக்கு அறிமுகமானவர்கள்தான்,

ஆனால், இப்படி ஒரு தோழனை உங்களில் எத்தனை பேர் சந்தித்திருக்கிறீர்கள்? இத்தகைய தாயை, தந்தையைப் பெரும்பேறு உங்களில் எத்தனை பேருக்குக் கிடைத்திருக்கின்றது? இந்தக் கண்ணம்மா மாதிரி ஒரு காதலி இருந்தால் என்று காளையர்களே! நீங்கள் ஏங்கக் கூடும். இந்தக் கண்ணன் மாதிரி... என்று கன்னியரே நீங்கள் கனவு காணக் கூடும்.

இலட்சியத்தைக் காட்டுவது இலக்கியம். ஆம்; தமிழர், இலட்சிய நண்பர்களாய், இலட்சியத் தாயராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையராய், காதலராய், காதலியராய், அரசராய், ஆசிரியராய் வாழவேண்டுமென்பது பாரதியின் இலட்சியம்; அவர்காண விரும்பிய உலகு அது. அந்த உலகை என் அன்பான மாணவர்களே காண வாருங்கள்.

என் விளக்கம் ஒரு அகல்; அந்தச் சிற்றொளியால் உங்கள் பேரொளியைத் தீண்டுகின்றேன். வகுப்பறையில் என்முன் வீற்றிருக்கும் மாணவப் பேரொளிகளைக் கற்பனை செய்கின்றேன். திரிபுனைந்தேன், நெய் நிறைத்தேன்; தீக்குச்சி போன்ற என் சிற்றொளியால் விளக்கேற்றினேன்: நீங்கள் கொத்து விளக்குகள்! சர விளக்குகள்! அறிவுக் கோவிலின் ஒளிவிளக்குகள்! உங்களால் அறிவுப் பாரம்பரியம் பிரகாசிக்கின்றது.

கருத்தூன்றிக் கற்றுக்கொள்க! ஆசிரியரை அணுகுங்கள்! முடிந்தால் என்னிடம் வாருங்கள்!

அன்புள்ள,
ஆசிரியன்,
வேலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியார் வாழ்க்கைச் சுருக்கம்

சித்திரபானு ஆண்டு கார்த்திகைத் திங்கள் 27-ம் தேதி மூல நட்சத்திரத்தில் (11-12-1882) திரு. சின்னச்சாமிக்கும் திருமதி லக்குமி அம்மாளுக்கும் சுப்பிரமணிய பாரதியார் பிறந்தார். அவருக்குச் செல்லப்பா, சுப்பையா என்ற அன்புப் பெயர்களும் உண்டு.

பாரதியாருக்குச் சுமார் 2-வது வயது நிரம்பும் சமயம் தாயார் லக்குமி அம்மாள் காலமானார், பின்பு 1889-ம் ஆண்டு பாரதியாரின் தந்தை மறுமணம் செய்துகொண்டார். அன்றே பாரதியாருக்கு உபநயனமும் செய்வித்தார்கள், பாரதியாருக்குப் பதினொரு வயதாகும் சமயம் (1893) எட்டயபுரம் சமஸ்தானப் புலவர்கள் அவருக்குப் 'பாரதி' என்னும் பட்டத்தை வழங்கினர். பாரதியார் திருநெல்வேலி இந்துக்கல்லூரியில் ஐந்தாம் படிவம் வரை படித்தார்.

1897-ஆம் ஆண்டு பாரதியாருக்கும் செல்லம்மாளுக்கும் திருமணம் நடந்தது.

1898-ஆம் ஆண்டு பாரதியாரின் தந்தை காலமானார். அதே ஆண்டு பாரதியார் காசிக்குச் சென்று சுமார் நான்கு ஆண்டுகள்வரை அங்கு தங்கிச் சமஸ்கிருதம், இந்தி முதலிய மொழிகளைப் பயின்றார். பிறகு எட்டயபுரம் வந்து, எட்டயபுர மன்னரின் நண்பராக இருந்துவந்தார். அச்சமயத்தில் தான் மதுரையில் இருந்து வெளிவரும் 'விவேகபானு' என்ற பத்திரிகையில் 'தனிமை இரக்கம்' என்ற பாரதியாரின் முதல் பாடல் பிரசுரமாயிற்று. மதுரை சேதுபதிபள்ளியில் சிலகாலம் தமிழாசிரியராகவும் பணியாற்றினார்.

1908-ம் ஆண்டில் இந்தியா பத்திரிகையில் பாரதியார் பணியாற்றி வரும் சமயம், அரசாங்கம் அவரைக் கைது செய்ய உத்தரவு பிறப்பித்தது. அச்சமயம் அவர் சென்னையிலிருந்து தப்பிச் சென்று புதுச்சேரியில் இருந்து இந்தியா பத்திரிகையை மீண்டும் வெளியிட்டு வந்தார். அதுமுதல் சென்னையிலேயே இருந்து இலக்கியப் பணியும் தேசப் பணியும் செய்து வந்தார்.

1921-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ஆம் தேதி இரவு ஒன்றரை மணிக்குப் பாரதியார் தமது முப்பத்தொன்பதாம் வயதில் அமரரானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணன் பாட்டு - ஒரு நோக்கு

பாரத தேசத்து இலக்கியங்களிலெல்லாம் பரந்து நிற்கும் ஒரு சக்தியாகத் திகழ்பவன் கண்ணன். எல்லா மொழி இலக்கியங்களிலும் அவன் பெயர் ஒலிக்கும். இராமாயண, பாரத காலத்தில் இருந்து அவன் தெய்வமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றான்

இந்து சமயத்தில் காத்தல் கடவுளாகச் சொல்லப்படும் திருமாலின் அவதாரமே இக்கண்ணன். அவன் உலகில் உள்ள தீமையை அழித்து உலகைக் காக்கவே அவதாரஞ் செய்கிறான். அஃது அவதாரத் தோற்றங்கள் பத்து என நூல்கள் கூறுகின்றன.

இங்கே கூறப்படும் கண்ணன், பாரத காவியத்தில் வரும் கண்ணனைப் பற்றியே பெரும்பாலும் குறிப்பதாகும். பாரத கண்ணனையே மனதிற்கொண்டு பாரதியார் இப் பாடல்களைப் பாடியுள்ளார்.

கண்ணன் பாட்டுத் தமிழிலக்கியத்திலே பழைய மரபைத் தழுவிய புதிய முயற்சியாகும். இறைவனை அன்பு செய்யும் பல்வேறு உருவங்கள் நம் இலக்கியங்களில் - பக்தி இலக்கியங்களில் உள்ளன. நாயன்மார்களும் ஆழ்வார்களும் இத்துறையின் முன்னோடிகள். பிள்ளைத் தமிழ் எனப்படும் பிரபந்தம், இறைவனைப் பிள்ளையாகக் கற்பனை செய்துள்ளது.

அரைத்தமாவை அரைக்காது, செக்குமாடு மாதிரிச் சென்ற தடத்திலேயே செல்லாது, எதிலும் புதுமை கண்ட பெரும் புலவன் பாரதி. உலகியல் வாழ்வில் ஒருவனுக்குத் தேவையான உருவங்களிலெல்லாம் கண்ணனைக் கற்பனை செய்து பாடியுள்ளார். இறைவனைக் காதலனாக, காதலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக, தோழனாகக் கற்பனை செய்வதோடமையாது, அவனைத் தன் சீடனாக, சேவகனாகவும் கற்பனை செய்துள்ளார் பாரதியார்.

"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுசனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகிறான்" என்று கூறிய பாரதியின் உரை கண்ணன் பாட்டுக்கும் மிகப் பொருத்தமாகவே அமைந்துள்ளது.

இலக்கியங்கள் தத்துவமாக நின்று உயிரை வளஞ்செய்வது ஒருபுறமிருக்க உணவின் சத்துக்காக அன்றிச், சுவைக்கும் நறுமணத்துக்காகவும் உணவு விரும்பப்படுவதுபோல உண்ட வாய் மணக்கத் தொட்ட கைமணக்க இலக்கியங்களும் எளிய பதங்களால், எளிய நடையால், சந்தத்தால், மெட்டால் சுவைதல்கி, மணம் கமழ்ந்து நிற்கின்றன. இவ்வுண்மைக்குப் பாரதி பாடல் தக்க சான்றாகும். கண்ணன் பாட்டு முழுக்க முழுக்க இவ்வுண்மையில் மூழ்கிக் கிடக்கின்றது.

கண்ணன் - என் தோழன்

தெய்வத்தை எங்கேயோ, வானத்தான், கைலாசத்தான் என்று எட்டாத் தூரத்தில் வைத்து ஏங்குவர்; பாரதியார் அவனைத் தன் தோழனாகக் கண்டு, அந்த அரிய நண்பனிடம் உள்ள உயர் தோழமைப் பாங்கினையெல்லாம் கற்பனை செய்துள்ளார்.

இங்கு கூறப்படும் தோழன், பாரதக் கதையில் பார்த்தனுக்குத் தோழனாக வந்த கண்ணனேயாவான்; சுபத்திரை மாதைப் புறங்கொண்டு போகப் பார்த்தனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிய கண்ணனிடம் தோழமையின் ஒரு பாங்கினையறிகின்றோம். ஏழிசையாய், இசைப்பயனாய் நின்ற இறைவன் யான் (சுந்தரர்) செய்யும் துரிசுகளுக்கு உடனாகி, மாழை ஒண் கண் பரவையைத் தந்தாண்டான்'' என்பார் சுந்தரர். உதவிகள் பல செய்யும் தோழன் உள்ளத்திலே கருவங் கொண்ட போதினில் ஓங்கியடித்திடுவான். என்னும் போது தோழமையின் மற்றொரு பாங்கினையுணருகின்றோம். கண்ணனின் தெய்வீக இயல்புக்கு இழுக்கு வராத வகையில் அவன் தோழனாகப் படைக்கப்பட்டுள்ளான். இதற்கும் ஏனையவற்றிற்கும் உரிய ஆதாரங்களை மாணவர் தொகுத்துப் படிக்கவேண்டும்.

கண்ணன் - என் தாய்

ஒரு நல்ல தாய்மைக்குரிய பண்புகள் எவை எவையோ அவையெல்லாம் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன இங்கு. தாய் தந்தபால், வெறும் சத்துப்பால் அல்ல, அது உணர்வென்னும் பால். வீரம் சேர்ப்பது தாய் முலைப்பால்'' அது வீரப்பால். ரின்பால் அல்ல. வீரமே எல்லாம்.

இயற்கைத் தாயாக விரிந்து நிற்கும் கண்ணன் என்னும் தாயின் தாய்மையை இயற்கையிலேயே வைத்துக் காட்டுகிறார். சந்திரன், சூரியன் எனும் பொம்மைகளை வைத்து விளையாட இயற்கைத்தாய் எனக்கு அருளினாள். இடம் விட்டு இடம் நகராமல் நின்று மௌன பாஷையில் பேசாமல் பேசும்மலை, என் தாய் எனக்குத் தந்த விளையாட்டுத் தோழன். அந்த நண்பனோடு மகிழ்ந்து நான் பேசிய பேச்சுக்களும் ஆடிய ஆட்டங்களும் எத்தனை? மலையோடு பேச, விளையாட நம்மால் முடியாது. பாரதிக்கு முடியும். ஆம் அவன் ஒரு புலவனல்லவா? அந்தக் கற்பனைப் பேச்சும் கற்பனை விளையாட்டும் நமக்கு வருமா? இப்படியே ஏனையவற்றையும் மாணவர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணன் - என் தந்தை

அன்பின் உருவமாகப் படைக்கப்பட்ட தாயின்பின் அறிவின் உருவமாகிய தந்தையைக் காண்கின்ருேம். அவனது பல்வகை மாண்புகளைக் காண்கின்ருேம். கல்விச் சிறப்பும், கவிதை மாண்பும் உடைய அவன், வர்ணபேதமின்றிப் பழகும் அறிவு நிலையுடைய அவன் சூனியப்பொய்ச் சாத்திரங்கண்டு நகைப்பான். அறிவின் எழுச்சியும் ஆற்றலு மொருங்குடைய தந்தையின் இயல்புகளாகக் கூறப்பட்டுள்ள செயல்களை மாணவர் உணர்ந்து மனதிற் பதித்துக் கொள்ளவேண்டும்.

கண்ணன் - என் சேவகன்

வேலைக்காரர்களிடம் காணப்படும் பொதுவான குறைகளையெல்லாம் விளக்கிவிட்டு சேவகனுக வந்துள்ள கண்ணனின் இயல்புகளை விளக்குகிருர்.

எங்கிருந்தோ வந்தான் என்னும் உணர்வை எழுப்பி விடுகிருர். அவன் தன் இயல்பாகச் சொன்னவையும் அவனுடைய செயல்களாகச் சொல்லப்பட்டவையும் அவனது அற்புதத் தெய்வீக இயல்பை விளக்குகின்றன

கூலி மிகக்கேட்கும் சாதாரண சேவகனை காட்டி கூலி என்ன கேட்கின்ருய்? என்றபொழுது, அடியேனை ஆதரித்தால் போதும்; காசு பெரிதில்லை, காதல் பெரிதெனக்கு என்று சொல்லும் கண்ணனைக் காட்டும்போது, தெய்வீகத்தையுணர்கின்ருேம். பாரதியாரின் அற்புதப் படைப்புகளில் ஒன்ருன இப்பகுதியை மாணவர் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

கண்ணன் - என் அரசன்

அரசனுகிய கண்ணனது இயல்புகள் மிகமிக அற்புதமானவை; கவலையின்றிக் களித்துத் திரிந்தும், நாண

மற்றவனின் பயந்தவன் என இழிசொல் ஏற்றும் இருந்தவன். காலம் வந்து கைகூடும்போது எதிர்மாறான இயல்புகளோடு விளங்குவதையும் பாரதியார் அற்புதமாகச் சித்திரித்துள்ளார். தெய்வீகத்தின் வெளிப்பாடு மானுடத்தின் அளவுக்கு உட்படாதது. அந்த விஸ்வரூபத்தை இக்கவிதைகளில் காண்கின்றோம் அதனை மாணவர் படித்து உணர்ந்துகொள்ள வேண்டும்.

கண்ணன் - என் சீடன்

அதியற்புதப் படைப்புக்களில் ஒன்று கண்ணனைச் சீடனாய்க் காண்பது. சீடர்களை, மாணவர்களை முன்னேற்றுவதாக எண்ணும் குருமார், ஆசிரியர் பலர் அவர்களால் குருமார் ஆசிரியர் பயன்பெறும் உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும் என் பிழைக்குத் தண்டனை புரிந்திடக் கண்ணனைக் கள்வன். சீடனாய் வந்தெனைச் சேர்ந்தனன் என்கிறார். இதுவே உண்மையான குருவின் கூற்று;

சீடனைத் திருத்த எண்ணிய பேதமையும் எண்ணத்தின் தோல்வியும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. ஒன்றை ஆக்குதல் மாற்றுதல் அழித்திடல் நம் செயல் அல்ல என்பதும் ஆசையும் தாபமும் அகற்றிப் பணிபுரிதல் நம்கடன் என்பதும் தத்துவமாய் மிளிர்கின்றன.

கண்ணன் - என் சற்குரு

குருவின் தோற்றம்பற்றி இன்றைய உலகினர் கொண்ட கருத்தைச் சாடுவார்போன்று, பாடலில் குரு வர்ணிக்கப் பெற்றுள்ளார். காமனைப்போன்ற வடிவமும், இளங்காளையர் நட்பும் பழக்கமும், எந்நேரமும் ஆடலும் பாடலும் என அவர் தோற்றமும் செயலும் கூறப்படுகின்றன. சகமாயம் உணர்த்துபவன் சகமாயத்துள் மூழ்கித் திளைப்பவன்போல் காட்சி தருகின்றான்.

ஆனல் அந்தத் தோற்றத்தில் இருந்து வந்த தெளிந்த உரை. சீடனின் அகக்கண்ணைத் திறந்துவிட்டது இறை,

உயிர், உலகு என்னும் மூப் பொருள்களின் இயல்பு இந்து சமயத்தின் வேதாந்தப் பிரிவினர் கூறும் முறையில் விளக்கப்பட்டுள்ளது.

உண்மையுணர்ந்தோர் சித்தத்திலே சிவம் நாடுவார் எனக் கூறப்பட்டது. அவர்களிதுன்னும் உள்ளமும் களிற்று நடையும் உடையவர் அவற்றின் உருவமாகவே குரு வர்ணிக்கப் பெற்றுள்ளார்.

சுருங்கக் கூறின் தோற்றத்திலும் செயலிலும் உலகியல் இன்பங்களின் மிகுதியும் ஈடுபட்டோயிருப்பர். இவையே ஞானியர் தம்மியல். வேதாந்தக் கருத்துடைய பாரதியார்

சித்தர்கள் தோற்றத்திலும் சைவசித்தாந்தக் கருத்திலும் உள்ளம் ஈடுபட்டோர்க்கு முரண்படுபவராகவே காட்சியளிப்பர் மாணவர் உள் முரணகற்றி உண்மை யுணர்ந்து கொள்ள வேண்டும்.

கண்ணம்மா - என் குழந்தை

பொருள்களைச் சுவைப்பதற்குத் தனியாற்றல் வேண்டும். பிள்ளைத்தமிழ் பாடிக் குழந்தைகளைச் சுவைத்தவர் நாம். மழலை மொழியை யாழ், குழல், எனச் சுவைப்பார் வள்ளுவர். கண்ணம்மாவைக் குழந்தையாகக் கண்டு அதன்பல் வேறு தோற்றங்களையும் செயல்களையும் கற்பனை செய்து இசைத்து இசைத்து அனுபவிக்கும் உணர்ச்சியனுபவம் பாடலாக உருவெடுத்துள்ளது.

கண்ணன் - என் விளையாட்டுப்பிள்ளை

பெண் குழந்தையின் சிறப்புக்களைப் பரவிய பாரதியார் ஆண்குழந்தையின் குறும்புகளை இங்கே படம்பிடித்துள்ளார். பெண் பெண்தான் ஆண் ஆண்தான் என்னும் முடிவுக்கு வருகின்றோம் அன்பின் உருவாக மென்மை கனிந்து நிற்கும் பெண்மையைச் சுவைத்தகையோடு. இந்தத் தீராத விளையாட்டுப் பிள்ளையைப் பார்க்கின்றோம். அவனின் சொல்லும் செயலும் குறும்பும், இவன் சிறுவன் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலன் அல்ல என்று எண்ணத் தோன்றுகின்றது பெரியவர்கள் என்ற போர்வையில் இருக்கும் நாம் எமது கள்ளத்தை அதன்மீது சார்த்திப் பார்க்கிறோம். மானொத்த பெண்ணடி! என்று அழைப்பான். மலர் கொண்டு வருவான். பின்னலைப் பின்னின்று இழுப்பான். ஆகிய கண்ணனைச் சிறுவனைக் காமச் சிறுவனாகக் காண்கின்றோம்.

சேர்ந்து விளையாடிவிட்டுப் பிரிந்துபோய் வீட்டில் சொல்பவன், எம்மைத் துயர்செய்து யாவர்க்கும் நல்லவன்போல் நடப்பவன், கோளுக்குச் சமர்த்தன், பொய், சூத்திரம், பழி சொல்லக் கூசாதவன் ஆகிய கண்ணனைச் செல்வனை வஞ்சகனாகக் காண்கின்றோம்.

ஆனால் திரும்பத் திரும்பப் பாரதியார். அவன் ஒரு தீராத விளையாட்டுப் பிள்ளை, தீராத விளையாட்டுப் பிள்ளை என்று பல்லவி பாடுகிறார்: இதன் பொருளையும் மாணவர் உய்த்துணர்ந்து கொள்ள வேண்டும்.

கண்ணன் - என் காதலன்

இது பழைய தடம்தான். இதற்குமுன்பும் பலர் நடந்த வழிதான் தலைவன் தலைவி உணர்வை வெளிப்படுத்துவது கத்திமுனையில் நடப்பதுபோல் கடினமானது என்று கூறுவர் பாரதியார் வெற்றிகரமாகச் செய்துமுடித்துள்ளார் இதனை

பிரிவின் ஏக்கத்தைத் தலைவியின் வாயிலாகத் தமக்கே யுரியவகையில் பாரதியார் வெளிப்படுத்தியுள்ளார். நோயின் கூறுகளும் வெளிப்பாடும் நம் அனுபவத்தோடு இணைந்து நம்மைப் பெரிதும் கவர்கின்றன.

இப்பகுதி ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியும் தன்னளவில் சிறப்புற்று விளங்குகின்றன. ஒவ்வொரு பகுதியின் தனித்தன்மையையும் மாணவர் இனங்கண்டு உணர்ந்து ரசிக்க வேண்டும். அவற்றையெல்லாம் இங்கு விரித்துரைக்க விரும்பினும் வசதியின்மை பற்றி விடுகின்றோம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணம்மா - என் காதலி

இப்பகுதி தலைவனின் காதல் உணர்வை வெளிப்படுத்துகின்றது. ஒரே உணர்வு பெண்மை தழுவி வரும்போதும் அது ஆண்மை கலந்து வரும்போது ஊடு பொருளுக்கேற்ப வெவ்வேறு கோலங் கொள்வதைக் காண்கின்றோம். துணிச்சலோடு தன் உணர்வை வெளிப்படுத்துவதும், மூத்தவர் சம்மதியில் வதுவை முறைகள் பின்பு செய்வோம் என்று கூறி, இதோபார்! என்று முத்தமிடுவதும் துணிச்சலின் விளைவுகள். தலைவியின் நாண நிலையும், தலைவனின் துணிச்சலும் நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளன. விரசமில்லாமல் ரசம் குறையாமல் கத்தி முனையில் பாரதியார் நடந்துசெல்வதை மாணவர் படித்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்;

கண்ணன் - என் ஆண்டான்

ஆண்டான் அடிமை முறையில் அமைந்துள்ள இப்பகுதி அடிமைத்திறன் நன்கு வெளிப்படப் பாடப்பட்டுள்ளது. ஆண்டான் பண்ணையில் வேலைசெய்யும் அடிமை, தன் ஆண்டானின் திருப்தியைப்பெற உழைக்கும் பாங்கும் தன் வயம் இழந்த நிலையும் தனக்காக அன்றித் தன் குடும்பத்துக்காக, தன் இனத்துக்காகப் பாடுபடும் தன்னலமற்ற தன்மையும் விளக்கப்பட்டுள்ளன.

கண்ணம்மா - என் குலதெய்வம்

இறுதியாகக் குலதெய்வத்திடம் தன்னை முற்றுச் சரண் கொடுத்த பக்தன். தன் வேண்டுகோளை விடுக்கின்றான். கவலை தின்றாத வாழ்வு, மிடியும் அச்சமும் போக்கிய வாழ்வு, எல்லாம் நின்செயலென நினைவு கொள்ளும் வாழ்வு என வேண்டி நல்லது தீயது நாமறியோம். ஆனால் அறிந்தவர்போல் ஆணவம் கொள்வோம். நல்லது நாட்டுக, தீமையை ஓட்டுக என முடிக்கின்றான். இவற்றின் ஊடு பொருளாக விளங்கும் தத்துவ உணர்வினை மாணவர் பெறுவார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கண்ணன் பாட்டு

கண்ணன் என் தோழன்

1. பொன்னவிர் மேனிச் சுபத்திரை மாதைப்
புறங்கொண்டு போவதற்கே — இனி
என்ன வழியென்று கேட்கில், உபாயம்
இருகணத் தேயுரைப்பான் — அந்தக்
கன்னன் வில்லாளர் தலைவனைக் கொன்றிடக்
காணும் வழியொன் றில்லேன் — வந்திங்கு
உன்னை யடைந்தனன் என்னில் உபாயம்
ஒருகணத் தேயுரைப் பான்.

பொருள் :- பொன்போல விளங்கும் மேனியினையுடைய சுபத்திரையை யாருக்கும் தெரியாமல் அழைத்துச் செல்வதற்கு என்ன உபாயம் என்று கேட்டால், அதற்குரிய உபாயத்தை இரண்டு நொடிக்குள் உரைத்துவிடுவான். வில் வீரருக்கெல்லாம் தலைவனாக விளங்கும் கன்னனைப் போர்க்களத்திலே கொன்றிட வழியொன்றும் தெரியவில்லையே; அதற்குரிய வழியை அறிய உன்னையடைந்தனன் என்று சொன்னால் அதற்குரிய உபாயத்தை ஒரு நொடிக்குள்ளே உரைத்திடுவான்.

விளக்கம் :- சுபத்திரையிடம் மையல் கொண்ட அருச்சுனன், அவளை அழைத்துச் செல்ல வழிதெரியாது வருந்தினான். தன் நண்பனாகிய கண்ணனிடம் அதற்குரிய வழியினைக் கேட்டான். பாங்கனாகிய கண்ணன் வழியுரைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 கானகத்தே சுற்று நாளிலும் நெஞ்சிற்
கலக்க மிலாதுசெய் வான் — பெருஞ்
சேனைத் தலைநின்று போர்செய்யும் போதினில்
தேர்நடத் திக்கொடுப் பான் — என்றன்
ஊனை வருத்திடு நோய்வரும் போதினில்
உற்ற மருந்து சொல்வான் — நெஞ்சம்
ஈனக் கவலைக ளெய்திடும் போதில்
இதஞ் சொல்லி மாற்றிடு வான்

பொருள் :- திக்குத் தெரியாத காட்டில் சுற்றித் திரிந்தபோதும் நெஞ்சில் எவ்வித கலக்கமும் இல்லாது செய்வான். மிகப்பெரிய படையின் முன் நின்று போர் செய்கின்றபோது தேரின் சாரதியாக அமர்ந்து அதனைச் செலுத்துவான்: என் உடலை வருத்தும் நோய் வரும்போது அதற்கேற்ற மருந்து இது எனச் சொல்வான். உள்ளம் மிக்க கவலைகளால் வருந்தும்போது ஆறுதல் சொல்லி அதனை மாற்றிடுவான்.

விளக்கம் :- பாண்டவர்கள் வனவாசம் செய்த காலத்தில் கண்ணன் புரிந்த பேருதவிகளையும் பாரதப் போரில் அருச்சுனனுக்குத் தேர் செலுத்தியதையும் முதலிரண்டடிகளும் குறிப்பிடுகின்றன. தோழனாக நின்ற கண்ணன் உடல் நோயும் உள்ள நோயாகிய கவலைகளையும் தீர்த்து வைப்பான் என்பது பின்னிரண்டடிகளின் கருத்தாகும்.

3. பிழைக்கும் வழிசொல்ல வேண்டுமென் றாலொரு
பேச்சினி லேசொல்லு வான் [ரு
உழைக்கும் வழிவினை யாளும் வழிபயன்
உண்ணும் வழியுரைப் பான்
அழைக்கும் பொழுதினிற் போக்குச் சொல்லா
அரைநொடிக் குள்வரு வான் [மல்
மழைக்குக் குடை பசிநேரத் துணவென்றன்
வாழ்விற்கெங்கள் கண்ணன்

பொருள் :- நாம் பிழைப்பதற்குரிய வழியினை ஒரு வார்த்தையிலே, விரைவாகச் சொல்லிவிடுவான். உழைப்பதற்குரிய வழியினையும் செயல் புரிவதற்குரிய செயல்திறனையும் செயலின்பயனை அனுபவிக்கும் வழியினையும் சொல்லித் தருவான். நாம் அழைத்தவுடன் வீண் காரணம் காட்டித் தட்டிக் கழிக்காமல் அரைநொடியில் வந்துவிடுவான். மழைக்குக் குடையாகவும் பசிக்கு உணவாகவும் இருப்பவன் கண்ணனே. சுருங்கச் சொன்னால் எங்கள் வாழ்வு முழுவதும் கண்ணனிலேயே தங்கியிருக்கிறது.

விளக்கம் :- நண்பன் என்ற வகையில் தன் வாழ்வெல்லாம் கண்ணன் எங்ஙனம் கலந்து நிற்கின்றான் என்று பாரதியார் கூறுகின்றார். பிழைக்கத் தெரியாமல் உழைக்கத் தெரியாமல், வினையாளத் தெரியாமல் வினைப்பயனை உண்ணவும் தெரியாமல் திகைத்து நின்றபோது கண்ணனே வழிகாட்டியாக நின்றான்; தான் மிகப் பெரியோனாயிருந்தும் சிறியோனாகிய நான் அழைத்தவுடன் ஓடிவந்தான். கஜேந்திரன் என்ற யானை முதலை வாயகப்பட்டு ஆதிமூலமே என அலறியபோது ஓடிவந்து காத்த கண்ணனையும், சபை நடுவே துகிலுரிந்த போது! கோவிந்தா! கோவிந்தா! என அரற்றிய பாஞ்சாலியின் மானங்காத்த கண்ணனையும் கருத்தில் கொண்டு கூறியது. மழைக்குக் குடை என்றது கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்து ஆனிரைகளைக் காத்த செய்தியினைக் குறிப்பதாகும். இங்ஙனம் கண்ணன், என்பெருமான் எம் வாழ்வெல்லாம் கலந்து நிற்பதால் அவனின்றி எமக்கு வாழ்வு இன்மையால் எங்கள் வாழ்வினுக்கு எங்கள் கண்ணன் என்றார். எங்கள் கண்ணன் என்று உரிமையோடு குறிப்பிடும் நயம் உணரத்தக்கது.

4, கேட்ட பொழுதில் பொருள் கொடுப்பான் சொ
கேலி பொறுத்திடுவான் — எனை [ல்லுங்
ஆட்டங்கள் காட்டியும் பாட்டுக்கள் பாடியும்
ஆறுதல் செய்திடுவான் — என்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டத்திற் கொண்ட குறிப்பினை இஃதென்று
நான் சொல்லும் முன் உணர்வான் — அன்பர்
கூட்டத்தி லேயிந்தக் கண்ணனைப் போலன்பு
கொண்டவர் வேறுள ரோ ?

பொருள் : நான் கேட்டவுடன் வேண்டிய பொருள் தருவான். அதே நேரத்தில் நான் சொல்லும் பரிகாசங் களைக் கூடப் பொறுத்துக் கொள்வான். மேலும் தன் குறும்புச் செய்கைகளாலும் பாட்டுக்கள் பாடியும் ஆறுதல் தருவான். என் குறிப்புணர்ந்து நடப்பான். என்னிடம் அன்பு கொண்டவர்களில் இந்தக் கண்ணனைப்போலப் பேரன்பு கொண்டவர் யாராவது உளரோ ? ஒருவரும் இலர்.

விளக்கம் : உதவி செய்வதோடு மாத்திரம் தன் கடமை முடிந்தது என்று இவன் நினைப்பதில்லை. நான் அமைதியிழந்து தவிக்கும் போது தன் குறும்பாலும் பாட்டுக்களாலும் எனக்கு ஆறுதல் தருவான்; என் உள்ளக் குறிப்புணர்ந்து நடக்க இவனிடம் எத்தகைய ஆழ்ந்த அன்பு இருக்க வேண்டும். இவன் செயல்களையெல்லாம் நினைக்கும்போது இவனைப் போன்ற அன்புடையார் வேறுயாருமிலர் என்பது முடிபு.

5. உள்ளத்தி லேகரு வங்கொண்ட போதினில்
ஓங்கி யடித்திடு வான் — நெஞ்சில்
கள்ளத்தைக் கொண்டொரு வார்த்தை சொன்
கா றி யுமிழ்ந்திடுவான் — சிறு [னலங்கு
பள்ளத்தி லேநெடு நாளழு குங்கெட்ட
பாசியை யெற்றி விடும் — பெரு
வெள்ளத்தைப் போலருள் வார்த்தைகள் சொல்லி
மெலிவு தவிர்த்திடு வான்.

பொருள் : நெஞ்சில் கர்வம் கொண்டபோது அதை நீக்க வருந்துமாறு மிகக் கடுமையாக வருத்துவான். நெஞ்சத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையின்றிப் பேசினுல் மிகவெறுத்துக் காறித் துப்பி விடுவான். சிறிய குட்டையிலே நீண்ட நாளாகக் கிடந்து அழுகிக் கிடக்கும் பாசியினைப் பெரு வெள்ளமானது எற்றிவிடுவதுபோல அருள் உரைகளால் என் துன்பம் தீர்ப்பான்.

விளக்கம்: அன்பனுக நின்று பேருதவிகள் பல புரியும் கண்ணன் கர்வங் கொண்டபோதும் கள்ளம் கொண்ட போதும் அவற்றைச் சகிக்கமாட்டான். வன்முறைகளால் திருத்த முயல்வான், "நகுதல் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண் மேற் சென்று இடித்தல் பொருட்டு" என்ற திருக்குறள் இங்கே நினைவு கூரத் தக்கது. கண்ணன் ஓங்கியடிப்பதும் காறியுமிழ்வதும் வெறுப்பினுலல்ல. அருளினுலே தான். அவன் அருள் வெள்ளம் போன்றது. நெஞ்சப்பள்ளத்திலே கிடந்து நெடுநாள் அழுகும் கர்வம் கள்ளம் ஆகிய பாசிகளை யெல்லாம் அவன் அருள் வெள்ளம் எற்றித் தூய்மை செய்யும்.

6. சின்னக் குழந்தைகள் போல் விளையாடிச்
சிரித்துக் களித்திடுவான் – நல்ல
வன்ன மகளிர் வசப்படவே பல
மாயங்கள் சூழ்ந்திடுவான் – அவன்
சொன்ன படி நடவாவிடி லோமிகத்
தொல்லை யிழைத்திடுவான் – கண்ணன்
தன்னை யிழந்து விடில் ஐயகோ பின்
சகத்தினில் வாழ்வதிலேன்.

விளக்கம்: கண்ணன் மாபெரும் ஞானி. இருப்பினும் சின்னக் குழந்தைகள் போலச் சிரித்து விளையாடுவான். அவன் சின்னக் குழந்தையல்ல. அவன் தீராத விளையாட்டுப் பிள்ளை. அருச்சுனன் பன்முறை மகளிர் வசப்பட மாயங்கள் சூழ்ந்தவன் கண்ணன். தன்தோழன் நலன் கருதி எதுவும் செய்யும் கண்ணனது சொற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி நடவாதொழியின் அதனைப் பொறுக்க மாட்டான். இத்தகைய பேரன்புத் தோழனை இழந்து விட்டால், அந்தோ! இவ்வுலகில் நான் வாழேன்.

7. கோபத்திலேயொரு சொல்லிற் சிரித்துக்
குலுங்கிடச் செய்திடுவான் — மனஸ்
தாபத்திலே யொன்று செய்து மகிழ்ச்சி
தளிர்த்திடச் செய்திடுவான் — பெரும்
ஆபத்தினில் வந்து பக்கத்திலே நின்று
அதனை விலக்கிடுவான் — சுடர்த்
தீபத்திலே விழும் பூச்சிகள் போல்வரும்
தீமைகள் கொன்றிடுவான்.

பொருள்: நான் கோபமுற்றபோது ஏதாவதொரு குறும்புபேசி என் கோபமெல்லாம் தணித்துக் குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கச் செய்வான்; மனவருத்தத்தில் நான் மூழ்கியிருக்கும் போதும் ஆறுதல் வார்த்தை யொன்று சொல்லி மகிழ்ச்சியூட்டுவான். எனக்கேதும் ஆபத்து வந்த போதும் என்னைவிட்டு நீங்காது கூடவே நின்று அதனை விலக்குவான். ஒளிவிளக்கிலே விழும் பூச்சிகள் போல வரும் தீமைகளையெல்லாம் அழித்து விடுவான்.

விளக்கம்: கோபத்தை மாற்ற ஒரு குறும்பு. மனத் தாபத்தை நீக்க மற்றொன்று. ஆபத்திலோ என்னை அகலாது நின்று அது தீர்ப்பான். துன்பங்கள் ஒன்று இரண்டா மிகப்பல ஒன்றன்பின் ஒன்றாக, கும்பல் கும்பலாக விளக்கில் விழும் பூச்சிகள் போல என்னைத் தின்ன வரும்போது அவற்றை யெல்லாம் என் கண்ணன் கொன்றொழித்தான்.

8. உண்மை தவறி நடப்பவர் தம்மை
உதைத்து நசுக்கிடுவான் — அருள்
வண்மையினாலவன் மாத்திரம் பொய்கள்
மலை மலையாவுரைப்பான் — நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்மைக் குணமுடையான் - சில நேரத்தில்
பித்தர் குணமுடையான் - மிகத்
தண்மைக் குணமுடையான் சில நேரம்
தழலின் குணமுடையான்

பொருள்: நேர்மை தவறுபவர்களை அவர் யாராயினும் உதைத்து நசுக்கிடுவான். அருளின் பெருக்கால் அவன் மாத்திரம் மலைமலையாகப்பல பொய்கள் சொல்வான். நல்ல பெண்மைக் குணமும் சில நேரத்தில் பித்தர் குணமும் உடையவன். சில நேரத்தில் தண்ணீர் போல பொறுமையுடையவனாயிருப்பான் சில நேரத்தில் தழல்போலக் கொதித் தெழுவான்.

விளக்கம்: பொய்மையை ஒருபோதும் சகியான்.
"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"
"யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்
தொன்றும் வாய்மையினல்ல பிற" இவை வள்ளுவம்.
மேலோர் எதையும் சகிப்பர். பொய்மையைச் சகியார். ஆனால் அருள் கருதி மலைமலையாகப் பொய்கள் உரைப்பான். 'பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்' என்பது திருக்குறள் புரை தீர்ந்த, நன்மைக்காகப் பல பொய்கள் உரைப்பான் கண்ணன். நல்ல பெண்மைக்குரிய அத்தனை குணங்களும் அவனிடம் சிலவேளை தோன்றும். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய பெண்மைக் குணங்கள் இத்தகைய பெரியோனாகிய கண்ணனிடம் சிற் சில வேளைகளில் தோன்றும். பெண்மையின்றி ஆண்மை நிறைவு பெறுவதில்லையல்லவா? "பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை" (சிவன்) இருந்த தத்துவம் இது அல்லவா? இவற்றை விளங்காமல் கண்ணனை ஒரு பேடி என்பர் சிலர். சில நேரம் அவன் செய்கைகள் பயித்தியக்காரத் தனமாகக் காணப்படும் நம்பார்வையில். ஞானிகளும் பித்தர்களும் தோற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றத்தில் ஒத்த தன்மையர். அளவுகடந்த பொறுமையும், எளிமையுமுடையவனாகச் சில நேரம் காணப்படுவான். அவனது பொறுமை அதிசயிக்கத்தக்கதாயமையும். பொறுமை காண்பிக்கக் கூடாத இடங்களில் கூட மிகப் பொறுமையாயிருக்கும் அவன் சில சிறிய விஷயங்களில் கூடச் சீறிச் சினப்பான். அவன் சினம் தீபோலத் தகிக்கும்; இவ்வித அசாதாரண குண இயல்புகள் சாதாரண மனிதர்களிடம் அமையா. இவை ஞானிகளின் இயல்புகளாகும். தோழன் கண்ணன் ஒரு ஞானி.

9. கொல்லுங் கொலைக்கஞ்சிடாத மறவர்
   குணமிகத் தானுடையான் – கண்ணன்
சொல்லு மொழிகள் குழந்தைகள் போலொரு
   சூதறியாது சொல்வான் – என்றும்
நல்லவருக் கொரு தீங்கு நண்ணாது
   நய முறக் காத்திடுவான் – கண்ணன்
அல்லவருக்கு விடத்தினில் நோயில்
   அழலினி லுங் கொடி யான்.

பொருள்: கொலைத் தொழிலுக்கு அஞ்சாத வீரக் குணமுடையவன்; சூதறியாத குழந்தைகள் போன்ற குணமுடையவன்; நல்லவர்களுக்கு என்றும் எவ்வித தீமையும் வராது காப்பான், ஆனால் தீயவர்க்கு விடம் போல நோய்போல நெருப்பைவிடக் கொடியவனாவான்.

விளக்கம்; மென்மைக் குணமுடையன், பித்தர் குணமுடையன் தன்மைக் குணமுடையன் ஆனாலும் அநீதியை எதிர்க்கும்போது கொலைக்கஞ்சாத மறவன் கண்ணன். பாரதப்போரில் அநீதியை எதிர்த்துத் தேர் செலுத்திய வீரனல்லவா கண்ணன். கொலைக்கஞ்சிய பார்த்தனுக்கு அஞ்சாமை தந்த மறவன் அல்லவா கண்ணன். சூழலையும் விளைவுகளையும் அறியாது நெஞ்சிற் பட்டதைப் பட்பட்டென்று பேசும் குழந்தையுள்ளம் கண்ணன் உள்ளம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவர்க்கு அவரழையாமுன்னே, தானே வலியச் சென்று காக்கும் கண்ணன் அல்லவர்க்கு விடம்போல விரைந்தும் நோய் போல உள்நின்று நலிந்தும் தீபோல வெம்மையுறச் சூழ்ந்தும் துன்புறுத்துவான்.

10. காதல் விளைய மயக்கிடும் பாட்டினில்
கண்மகிழ் சித்திரத்தில் – பகை
மோதும் படைத் தொழில் யாவினு மேதிறம்
முற்றிய பண்டிதன் காண் – உயர்
வேத முணர்ந்த முனிவருணர் வினில்
மேவு பரம்பொருள் காண் – நல்ல
கீதையுரைத்தெனை இன்புறச் செய்தவன்
கீர்த்திகள் வாழ்த்திடுவேன்.

பொருள்: காதல் உணர்வு தோன்ற மயக்கும் பாட்டுக்கள் பாடுவதிலும் கண்ணுற் கண்டு மகிழும் ஓவியத்திலும் பகைவரையழிக்கும் போர்க்கலை முதலிய எல்லாவற்றிலும் கண்ணன் வல்லவன். மேலாம் வேதம் வல்ல முனிவர்களின் உணர்விலே பரம் பொருளாக இருப்பவன் கண்ணனே. பாரதப்போரில் கீதை உபதேசம் செய்து எம்மையெல்லாம் இன்புறச் செய்தவனாகிய கண்ணனின் பெருமையை வாழ்த்துவோம்.

விளக்கம்: எல்லாவற்றிலும் சிறந்த பண்டிதனாகிய கண்ணன், உலகியலில் காதல் பாட்டும் கண்மகிழ் சித்திரமும் தந்து கொல்லும் போரிலும் வல்லவன், அவனே ஞானியர் உள்ளத்தில் பரம்பொருளாயும் நிற்பான் இதனை உணர்ந்து காண்க கீதை அருச்சுனனை மாத்திரம் தெருட்டி நிற்கவில்லை. ஆன்மாக்கள் எல்லாவற்றையும் என்றும் தெருட்டி நிற்கிறது. அதனைத் தந்த கண்ணன் புகழ் வாழ்க.

—o—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கண்ணன் - என் தாய்

(நொண்டிச்சிந்து)

1. உண்ண உண்ணத் தெவிட்டாதே - அம்மை
   உயிரெனும் முலையினில் உணர்வெனும்பால்
வண்ணமுற வைத்தெனக்கே — என்றன்
   வாயினிற் கொண்டூட்டுமோர் வண்மையுடையாள்.
கண்ணனெனும் பெயருடையான் - என்னைக்
   கட்டிநிறை வானெனுந்தன் கையிலணைத்து
மண்ணெனுந்தன் மடியில் வைத்தே — பல
   மாயமுறுங் கதை சொல்லி மனங்களிப்பான்

பொருள் : உயிர்போன்ற மார்பிலே உணர்வென்று சொல்லத்தகுவதும் உண்ண உண்ணத் தெவிட்டாததுமான பாலை அழகுறவைத்து என்வாயிற் கொண்டுவந்து ஊட்டும் வள்ளல் தன்மையுடையவள் தாய். அவன் பெயர் கண்ணன் என்பதாகும். அவன் என்னைக் கட்டியணைத்து வானம் என்னும் தன் கையால் அணைத்து பூமி என்னும் தன்மடியில் வைத்து இன்பம்தரும் பலகதைகள் சொல்லி மனம் மகிழ்வான், மகிழ்விப்பான்.

விளக்கம் : குழந்தை பிறந்தவுடன் உண்ணத்தாயின் முலையில் பால் தயாராக வைக்கப்பட்டுள்ளது. அந்தத் தாய்மையின் பால் தெவிட்டாதது. அது வெறும் கலைப் பால் அன்று. உடல் மாத்திரம் வளர்ப்பதன்று. பாலூறும் முலை உயிர். அப்பால் உணர்வுப்பால். உணர்வே மனிதன். உணர்வின் சிறப்பாலேயே மனிதன் ஏனையவற்றில் நின்று உயர்வடைகின்றான். "மானம் சேர்ப்பது தாய் முலைப் பாலடா" என்றார் இன்னுமோரிடத்தில். அவ்வுணர்வுப் பாலை என் வருகைக்காகக் காத்துவைத்திருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை அறியாத என்வாயில் வைத்து ஊட்டினான். இந்த வள்ளல் தன்மைக்கு ஈடுண்டோ? இயற்கையே இறைவனின் திருக்கோலம். கண்ணனின் மடி எது? மண்ணே மடி. அவன் கரங்கள் எவை? வானமே அன்புக்கரங்கள். வானக் கரங்கள் அணைக்க மண்ணக மடியில் தவழ்ந்து இயற்கையின் எழிலைப்பருகி அதுகூறும் இன்பக்கதைகளைக்கேட்டு மயங்கியவன் புலவன் பாரதி. பாரதி வளர்ந்தது கற்றது எல்லாம் இயற்கையோடு இயைந்து. அவன் தாயாகக் கண்டது இவ்வியற்கை. இவ்வியற்கையே கண்ணன்.

2. இன்பமெனச் சில கதைகள் – எனக்
 கேற்றமென்றும் வெற்றியென்றும் சில கதைகள்
துன்பமெனச் சில கதைகள் — கெட்ட
 தோல்வியென்றும் வீழ்ச்சியென்றும் சில கதைகள்
என் பருவம் என்றன் விருப்பம் – எனும்
 இவற்றினுக் கிணங்கவென் னுளமறிந்தே
அன் போடவள் சொல்லி வருவாள் – அதில்
 அற்புத முண்டாய்ப் பரவசமடைவேன்.

பொருள்: நான் இன்பம் அடையச் சில கதைகளும் நான் உயர்வடையவும் வெற்றிபெறவும் சில கதைகளும் கூறுவாள். சில கதைகள் என்னைத் துன்புறுத்தும் வேறு சில கதைகள் தோல்வியினையும் வீழ்ச்சியினையும் தரும். இவற்றையெல்லாம் என்பருவம் என்விருப்பம் இவற்றிற் கேற்ப என் மனப்பாங்கு அறிந்து அன்போடு சொல்வாள். அவற்றைக்கேட்டு அதனால் அற்புத உணர்வடைந்து நான் பரவசமடைவேன்.

விளக்கம்: என்பருவம் என்விருப்பம் இவற்றிற்கு இணங்க என் தாயாகிய கண்ணன், இன்ப துன்ப நிகழ்ச்சிகளை ஏற்படுத்தினான். நான் ஏற்றம்பெறவும் வெற்றிபெறவும் என் வாழ்வில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தோல்வியும் வீழ்ச்சியும் என்னைத் தழுவின. இன்பம்போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பங்களையும் ஏற்றுக்கொண்டேன். இவையெல்லாம் அற்புதக் கதைகள். இவை என்னைப் பரவசமடையச் செய்தன.

3. விந்தை விந்தை யாக எனக்கே — பல
விதவிதத் தோற்றங்கள் காட்டுவிப்பாள்;
சந்திரனென் றொரு பொம்மை — அதில்
தண்ணமுதம் போலவொளி பரந்தொழுகும்;
மந்தை மந்தையா மேகம் — பல
வண்ணமுறும் பொம்மையது மழைபொழி
முந்தஒரு சூரியனுண்டு — அதன் [யும்;
முகத்தொளி கூறுதற்கோர் மொழியில்லையே.

பொருள்: விந்தை விந்தையான இயற்கையின் பல வித தோற்றங்களை எனக்கு காட்டுவிப்பாள். சந்திரன் என்ற பெயரில் ஒரு பொம்மை. அந்தப் பொம்மையில் குளிர்ந்த அமுதம் போல ஒளி பொங்கி வழியும். மந்தை மந்தையாக மேகக் கூட்டங்கள் பற்பல வண்ணங்களில் பொம்மைகள் போலத் தோன்றும். இவை மழை பொழியும் பொம்மைகள். எல்லாவற்றிற்கும் மேலாக சூரியன் இருக்கிறான். அவனின் முகத்தில் விளங்கும் ஒளிச் சிறப்பைக் கூற எம்மிடம் வார்த்தையில்லை.

விளக்கம்: இயற்கை வடிவாக விளங்கும் கண்ணன் என்னும் பெயர் கொண்ட தாயானவள் இயற்கையின் விந்தைத் தோற்றங்களைப் பல்வேறு கோணங்களில் படம் பிடித்துக் காட்டுகிறாள். விந்தைகளுள் எல்லாம் ஒரு சிறந்த விந்தை சந்திரன். இந்தப் பொம்மை அமுத ஒளி பாய்ச்சுகின்றது. மற்றொரு பொம்மை மேகக் கூட்டங்கள். அதனை மழை பொழியும் பொம்மை என்கிறார். இவை எல்லாவற்றையும் விட விந்தையானது சூரியன். அதன் சிறப்பை விவரிக்க மொழியில்லையே என்று ஏங்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வானத்து மீன்க ளுண்டு — சிறு
மணிகளைப் போல்மின்னி நிறைந்திருக்கும்;
நானத்தைக் கணக்கிடவே - மனம்
நாடிமிக முயல்கினும் கூடுவதில்லை;
கானத்து மலைக ளுண்டு — எந்தக்
காலமுமொ ரிடம்விட்டு நகர்வதில்லை;
மோனத்தி லேயிருக்கும் - ஒரு
மொழியுரை யாதுவிளை யாடவருங் காண்.

பொருள்: வானம் நிறைய நட்சத்திரங்கள் உண்டு. அவை சிறு மணிகளைப் போல மின்னி மின்னி நிறைந்திருக்கும். நான் அவற்றை எண்ணிக் கணக்கிடலாம் என்று முயற்சி செய்த போதும் அது கைகூடுவதில்லை காடுகளிலெல்லாம் மலைகள் நிறைந்திருக்கின்றன. அவை எந்தக் காலத்திலும் இடம் விட்டு இடம்பெயர்வதில்லை. மௌனமாக நிலைத்து நிற்கும்- ஒரு வார்த்தைகூட பேசாமல் என்னோடு விளையாடவரும்.

விளக்கம்: வானத்தின் மீன்களின் தோற்றம் சிறு மணிகளை எங்கும் பரப்பியது போலிருக்கும். அவற்றை எண்ணிட மனிதனுக்கு ஆசை. அந்த ஆசை என்றும் நிறைவேறுவதில்லை; மலைகள் இருக்கின்றனவே அவை என்றும் இடம்விட்டுப் பெயர்வதில்லை. பேசாமல் பேசுகின்றன. எம்முணர்வோடு கலந்து விளையாடுகின்றன. அவை தந்த எழுச்சியினால் எத்தனையோ கவிதைகள் பிறந்துள்ளன.

5. நல்லநல்ல நதிகளுண்டு — அவை
நாடெங்கும் ஓடிவிளை யாடி வருங்காண்;
மெல்ல மெல்லப் போயவை தாம் - விழும்
விரிகடற் பொம்மையது மிகப் பெரியதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையதிற் காணுவதில்லை; — அலை
எற்றி நுரை கக்கியொரு பாட்டிசைக்கும்;
ஒல்லெனுமப் பாட்டினிலே — அம்மை
ஓமெனும் பெயரென்றும் ஒலித்திடுங் காண்.

பொருள்: நல்ல நதிகள் பல நாடு முழுவதும் ஓடி விளையாடி வருகின்றன. அவை போய் வீழும் கடலோ மிகப் பெரிய பொம்மை. எல்லையற்ற மிகப் பெரியது. அது அலையெறிந்து நுரை கக்கிப் பாடும் அந்தப் பாட்டிலே என் தாயின் ஒரு பெயராகிய ஓம் என்பது ஒலித்துக் கொண்டே இருக்கும்.

விளக்கம்: நதிகள் பாய்ந்து செல்வது புலவன் கண்களுக்கு விளையாடிச் செல்வது போல் தோற்றமளிக்கின்றது. வளைந்து வளைந்து இரைந்து இரைந்து துள்ளித் துள்ளி மெல்லனவும் விரைந்தும் செல்லும் நதியின் விளையாட்டு இங்கே படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. அவை வீழ்கின்ற கடல் மிகப் பெரிய பொம்மை அதன் பாட்டு ஓம் என்னும் ஒலிப்பாட்டு. அதுவே அன்னையின் திருநாமங்களில் ஒன்று.

6. சோலைகள் காவினங் கள் — அங்கு
சூழ்தரும் பலநிற மணிமலர் கள்
சாலவும் இனியன வாய் — அங்கு
தருக்களில் தூங்கிடும் கனிவகை கள்
ஞால முற்றி லும் நிறைந் தே — மிக
நயந்தரு பொம்மைகள் எனக்கென வே
கோலமுஞ் சுவையு முற — அவள்
கோடிபல கோடிகள் குவித்துவைத் தாள்.

பொருள்:- சோலைகளும் பெருமரக் காடுகளும் அங்கு நிறைந்து விளங்கும் பல்நிற அழகு மலர்களும் மிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமை உடையனவாய் அங்கு மரங்களில் தூங்கும் கனி வகைகளும் எனக்காக அமைக்கப்பட்ட விளையாட்டுப் பொம்மைகளாகும். அழகும் சுவையுமுள்ள இவ்விதம் ஒன்று இரண்டா பலகோடி எனக்காக அமைத்து வைத்தாள் பொம்மைகள்.

விளக்கம் :- கண்ணன் என்னும் அன்னை தன் காதல் மைந்தனுக்காகப் பல்வேறு நிறமுடைய மலர்ப் பொம்மைகளையும் இன்சுவைக் கனி வகைகளையும் குவித்து வைத்தாள் என்று கூறி அன்னையின் அருள் உடைமையை விளக்குகின்றார்.

7. தின்றிடப் பண்டங்களும் — செவி
தெவிட்டறக் கேட்கநற் பாட்டுக்க ளும்,
ஒன்றுறப் பழகுதற் கே — அறி
வுடையமெய்த் தோழரும் அவள்கொடுத் [தாள்;
கொன்றிடு மென இனிதாய் — இன்பக்
கொடுநெருப் பாய், அனற் சுவையமு தாய்,
நன்றியல் காதலுக் கே — இந்த
நாரியர் தமையெனைச் சூழவைத் தாள்.

பொருள் :- தின்று சுவைக்கப் பல்வேறு உணவுப் பண்டங்களும் செவியாரக் கேட்க இசைப் பாட்டுக்களும் மனங் கலந்து பழகுதற்கு அறிவுமிக்க நல்ல நண்பர்களும் எல்லாம் அந்த அன்னை கொடுத்தாள். இவை மட்டுமா? காதல் உணர்வு இனிமையுடையது போலவும் இன்பம் செறிந்த நெருப்புப் போலவும் அனற் சுவை சேர்ந்த அமுதம் போலவும் வந்து என்னைக் கொன்றிடும் என நினைத்து என் தாயானவள் காதல் உணர்வைச் சுவைப்பதற்கு பெண்கள் பலரை என்னை சூழ்ந்திருக்கச் செய்தாள்.

விளக்கம்:- உலக வாழ்வு சுவைப்பதற்கு உணவும் பாட்டும் அறிவுத் தோழரும் தந்த அவள் தன் காதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தன் காதல் உணர்வால் வருந்தாதிருக்க கன்னியர் பலரையும் தந்தாள் என்று தாயின் கருணையைப் புகழ்ந்தார்.

8. இறகுடைப் பறவைகளும் — நிலந்
திரிந்திடும் விலங்குகள் ஊர்வன கள்
அறை கடல் நிறைந்திடவே — எண்ணில்
அமைந்திடற் கரியபல் வகைப்படவே
சுறவுகள் மீன்வகை கள் — எனத்
தோழர்கள் பலருமிங் கெனக்களித் தாள்;
நிறைவுற இன்பம்வைத் தாள்; — அதை
நினைக்கவும் முழுதிலுங் கூடுதில்லை.

பொருள் :- இறகு உள்ள பறவைகளும் நிலம் திரிகின்ற விலங்குகளும் ஊர்வனவும் படைத்திட்ட அவன் கடல் நிறைய சுறவுகளும் மீன்வகைகளுமென தோழர்கள் பலரை எனக்கு தந்தாள். இங்ஙனம் எத்தனையோ இன்பங்கள் வைத்தாள். அதை எண்ணி நிறைவு செய்யக் கூடுவதில்லை.

விளக்கம் :- பறவைகளும் விலங்குகளும் ஊர்வனவும் அன்றி; கடலில் வாழும் மீனும் சுறவும் கூட மனிதர்களின் தோழர் என்பது பாரதியின் கருத்து. காக்கை குருவி எங்கள் யாதி நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம் என்று பிறிதோர் இடத்தில் கூறியுள்ளார்.

9. சாத்திரம் கோடி வைத்தாள்; — அவை
தம்மினும் உயர்ந்ததோர் ஞானம் வைத்
மீத்திடும் பொழுதினி லே — நான் [தாள்;
வேடிக்கை யுறக்கண்டு நகைப்பதற் கே

கோத்த பொய் வேதங்களும் — மதக்
கொலைகளும் அரசர்தம் கூத்துக்க ளும்
மூத்தவர் பொய்ந் நடையும் — இள
மூடர்தம் கவலையும் அவள் புனைந் தாள்;

பொருள் :- கோடிக் கணக்கான சாத்திரங்களை நான் கற்பதற்கு இயற்றி வைத்தாள் அவற்றை யெல்லாம் விட உயர்ந்து விளங்கும் ஞானத்தை என் உள்ளே வைத்தாள். கற்ற பின் ஓய்வாக இருக்கும் நேரங்களில் நான் வேடிக்கை செய்து நகைப்பதற்காகக் கட்டுக் கதைகள் நிறைந்த வேதங்களும் மதப் போர்களும் அரசர்களின் இன்பக் கூத்துக்களும் பெரியோர் புனைந்த பொய்களும் மூடர்கள் இயற்றிய கவலை தரும் கதைகளும் ஆகிய எல்லாவற்றை யும் என் அன்னை எனக்காகவே புனைந்தாள்.

விளக்கம் :- நான் அறிவு பெற சாத்திரங்களைத் தந்த அவள் அவற்றிற்கு மேலான ஞானத்தை தன்னுள் வைத் தாள் என்று கூறும்போது பாரதியாரிடம் ஒளி விட்டுச் சுடரும் திமிர்ந்த ஞானச் செருக்குப் புலனாகின்றது: நூல் அறிவைவிட இயல்பாய் அமைந்த நுண் அறிவு சிறந்தது என் பது கருத்து. பொய் வேதங்களும் மதப் போர்களும் பண்டைய அரசர்களின் பொழுது போக்கு வாழ்வுபற்றிய நூல்களும் மூத்தவர் புனைந்த பொய் கதைகளும் மூடர் தம் கவலையும் எல்லாம் பாரதியார் பார்வையில் நல்ல நகை சுவைகளாகும். சாத்திரங்களை ஏற்றுக் கொள் ளும் பாரதியார் நகைச் சுவையென இங்கு குறிப்பிட்ட நூல்களை ஏற்றுக் கொள்வது போலக் கூறி எள்ளி நகை யாடுகின்றார். எல்லாவற்றிற்கும் மேலாக தம் அறிவின் சிறப்பில் அதிக நம்பிக்கை உடையவர் என்பது புலனா கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10\. வேண்டிய கொடுத்திடுவாள்; — அவை
விரும்புமுன் கொடுத்திட விரைந்திடுவாள்;
ஆண்டருள் புரிந்திடுவாள் — அண்ணன்
அருச்சுனன் போலெனை ஆக்கிடுவாள்;
யாண்டுமெக் காலத்தி லும் — அவள்
இன்னருள் பாடுதற் றொழில்புரி வேன்;
நீண்டதொர் புகழ்வாழ் வும் — பிற
நிகரறு பெருமையும் அவள்கொடுப் பாள்.

பொருள் :- நான் விரும்பியவற்றை யெல்லாம் தரும் அவள் நான் கேட்பதற்கு முன்னேயே விரைந்து தருவாள். என்னை தனக்கு அடிமையாக்கி அருள் செய்யும் அவள் அண்ணன் அருச்சுனனைப் போல என்னையும் சிறந்தவன் ஆக்குவாள். எங்கும் எல்லாக் காலத்திலும் அவள் அருளைப் பாடுகின்ற தொழிலே என் தொழிலாகும். அதனுல் நீண்ட புகழ் சேர் பெருவாழ்வும் ஏனைய பெருமைகளையும் அவள் தருவாள்.

விளக்கம் :- தாய்மை அன்பின் பெருக்கத்தினுல் எனக்கு வேண்டியவற்றை நான் விரும்பு முன்னே எனக்கு தந்து விடுகிருள் வரலாற்றில் சிறந்து விளங்கும் அருச்சுனனைப் போல ஆக்கி விடுவாள். என் தொழில் அவள் புகழ் பாடுவதே; நமக்கு தொழில் கவிதை என்று மற்றோர் இடத்தில் கூறியுள்ளார். தாயைப் பாடும் தனயனைத் தாய் காப்பாள்.

—0—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கண்ணன் என் தந்தை

நொண்டிச்சிந்து

பிரதானரஸம் – அற்புதம்

1. பூமிக் கெனையனுப்பினான்; — அந்தப்
புதுமண்டலத்தி லென் தம்பிகளுண்டு;
நேமித்த நெறிப்படியே — இந்த
நெடுவெளி யெங்கணும் நித்தம் உருண்டே
போமித் தரைகளி லெல்லாம் — மனம்
போல விருந் தாளுபவர் எங்களினத்தார்,
சாமி இவற்றினுக் கெல்லாம் — எங்கள்
தந்தையவன் சரிதைகள் சிறி துரைப்பேன்.

பொருள் :- பூமியில் என்னைப் பிறக்க வைத்தான். அங்கு எனக்கு உதவியாக என் தம்பியர் உளர். நியமித்த விதியின் படியே வானவீதியில் இப்பூமி உருண்டு செல்லும். அங்கெல்லாம் எங்கள் இனத்தார் தம் மன விருப்பம் போல இருந்து அரசாண்டு கொண்டிருப்பர். இவற்றிற் கெல்லாம் சாமியானை (தலைவனை) எங்கள் தந்தை. கண்ணனின் வரலாற்றைக் கொஞ்சம் சொல்லுவேன்.

விளக்கம் :- "பிறப்புக்குத் தந்தையே காரணன். அவன் உயிர்களைப் படைத்தான். என்னைத் தனியாக அவன் விட்டுவிடவில்லை. உதவியாகத் தம்பியரையும் படைத்தான். உலக இயக்கம் ஒரு நியதிக்குட்பட்டது. நியதிக்கு உட்பட்ட உலகில் நியதிக்கு உட்படாது தம் மனம்போல இருந்து வாழ்வார் மனிதர். இவற்றிற்கெல்லாம் பொறுப்பானவன் என் தந்தை - கண்ணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. செல்வத்திற் கோர் குறையில்லை; — எந்தை
சேமித்து வைத்த பொன்னுக் களவொன்றில்லை;
கல்வியில் மிகச் சிறந்தோன் — அவன்
கவிதையின் இனிமை யொர் கணக்கிலில்லை;
பல் வகை மாண்பினிடையே — கொஞ்சம்
பயித்தியம் அடிக்கடி தோன்றுவ துண்டு;
நல்வழி செல்லு பவரை — மனம்
வெதும்பும் வரை சோதனை செய் நடத்தையுண்டு.

பொருள்:- குறைவற்ற செல்வமுடையவன், அவன் சேர்த்து வைத்த செல்வமோ அளவற்றது: கல்வியிற் சிறந்தவன். கவிதையின் இனிய ரசிகன். இத்தகைய பல்வகைச் சிறப்புகளிருந்தாலும் அவனுக்கு இடைக் கிடையே பயித்தியம் தோன்றுவதுண்டு: அது எதுவெனில், நல்லவர்களை. அந்த நல்ல உள்ளங்கள் வருந்தும் வரை சோதனை செய்வான்.

விளக்கம் :- அறிவுச் செல்வமும் பொருட் செல்வமும் குறைவறப் பொருந்தியுள்ளான்: அவன் கல்விச் சிறப்பு அவனது கவிதையின இனிமையில் தங்கியுள்ளது. அவன் செய்யும் செயல் அவனுக்கு என்ன பயித்தியமா என்று எண்ணத் தோன்றும். ஏனெனில் அவன் நல்லவர் களையே சோதிக்கிறான். துன்பம் சுடச்சுட அடுத்தடுத்து வருத்துகிறான். நல்லவர் நெஞ்சு நையும்வரை வருத்து கின்றான். இச்செயலைப் பயித்தியக்காரத்தனம் என்று தானே சொல்லவேண்டும்; செல்வக் குறையும் கல்விக் குறையும் அற்றபின் இப்படிச் செய்யலாமா?

3. நாவு துணிகுவதில்லை — உண்மை
நாமத்தை வெளிப்பட உரைப்பதற்கே;
யாவருந் தெரிந்திடவே — எங்கள்
ஈசனென்றும் கண்ணனென்றும் சொல்லுவதுண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவகைப் பெயர் புனைந்தே — அவன்
மூலமறியாதவர் சண்டைகள் செய்வார்;
தேவர் குலத்தவன் என்றே அவன்
செய்தி தெரியாதவர் சிலருரைப்பார்;

பொருள் :- அப்பெருமானின் உண்மைப் பெயரைச் சொல்ல என் நா. துணியவில்லை; எல்லாரும் தெரிந்திட அவன் பெயரை ஈசன் என்றும் கண்ணன் என்றும் கூறுவதுண்டு. அரி, அயன், உருத்திரன் என்று கூறி அவனின் உண்மை நிலையறியாதவர்கள் தம்முள் போரிடுவர். தேவர் குலத்தைச் சேர்ந்தவனென்று வேறுசிலர் அவன் உயர்வு அறியாது கூறுவர்.

விளக்கம் :- பெரியரிற் பெரியனாகிய தந்தையின் பெயரைச் சொல்லத் தனயனுக்கு நா கூசுகிறது. சொல்லுவதற்கு ஒரு தகுதி வேண்டாமா? ஈசன், கண்ணன் என்பன அவன் பொதுப் பெயர்கள். யாவரும் தெரிந்த பெயர்கள். பிரமாவா, விஷ்ணுவா, உருத்திரனா பெரியவனென்று புனைந்த கதைகளும் நடந்த போர்களும் இறையுண்மை யுணராதார் செயல்கள் ஆகும். அவனை உயர்த்துவதாக நினைத்துக் கொண்டு அவன் தேவர் குலத்தவர் என்று சிலர் கதைபுனைந்தனர். உண்மையில் கண்ணன் பிறந்தது:

4. பிறந்தது மறக் குலத்தில்; — அவன்
பேதமற வளர்ந்ததும் இடைக் குலத்தில்;
சிறந்தது பார்ப் பன ருள்ளே; — சில
செட்டி மக்களோடு மிகப் பழக்க முண்டு;
நிறந்தனிற் கருமை கொண்டான்; — அவன்
நேயமுறக் களிப்பது பொன்னிறப் பெண்கள்;
துறந்த நடைகளுடையான்; — உங்கள்
சூனியப் பொய்ச் சாத்திரங்கள் கண்டு நகைப்பான்.

பொருள் :- வீரர் குலத்தில் பிறந்த அவன், இடைக்குலத்தில் வளர்ந்தான். பார்ப்பனரோடும் செட்டி மக்களோடும் பழகிச் சிறப்புற்றான். கருமை நிறக் கண்ணன், பொன்னிற மேனிப் பூவையரோடு களிப்புற்றான். நாம் கட்டி வைத்துள்ள பொருளற்ற பொய்ச் சாத்திரங்களைக் கண்டு நகைப்பான்.

விளக்கம் :- நால்வகை வருணத்தாரோடும் நட்புறப் பழகியவன் கண்ணன்; அரசகுலத் தோன்றல், வருண பேதமற இடையர்களோடு கலந்து வளர்ந்தவன், பார்ப்பனர், செட்டிமார் எனப்படும் வணிகர் ஆகியோருடனெல்லாம் கலந்து பழகியவன். பாரத வரலாறு இதனைக் காட்டும். வருணபேதம் அறியாதவன். பொன்னிறப் பெண்கள் பலரோடு களித்தவன். ஆயினும் அவன் ஒரு துறவி. கண்ணனைப்பற்றி எழுந்துள்ள கதைகள் பலகோடி. அவற்றின் பொய்மை கண்டு எள்ளி நகைப்பான்.

5. ஏழைகளைத் தோழமை கொள்வான்;-செல்வம்
ஏறியார் தமைக் கண்டு சீறி விழுவான்;
தாழ வருந் துன்ப மதிலும் — நெஞ்சத்
தளர்ச்சி கொள்ளாதவர்க்குச் செல்வ மளிப்பான்;
நாழிகைக் கொர் புத்தி யுடையான்; — ஒரு
நாளிருந்த படி மற்றொர் நாளினிலில்லை
பாழிடத்தை நாடி யிருப்பான்; — பல
பாட்டினிலும் கதையிலும் நேர மழிப்பான்.

பொருள் :- கண்ணன் ஏழைகளின் தோழன்; செல்வம் மிக்கவரைக் கண்டு கோபிப்பான். மிக்க துன்பத்திலும் உள்ளம் தளராதவர்க்குச் செல்வம் கொடுப்பான். ஒரு நொடிக்கு ஒரு புத்தி. ஒரு நாளைப்போல மறுநாள் இரான். எதுவுமற்ற சூனியத்தில் இருப்பான். பாடல் பாடுவதிலும் கதைகளிலும் தன் நேரத்தைக் கழிப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் :- "செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு
இல்லாரை எல்லாரும் எள்ளுவர்"

இவ்வழக்குக்கு மாறாகக் கண்ணன் ஏழைகளின் தோழனாகவும் செல்வரின் பகைவனாகவும் விளங்குகின்றான். செல்வத்தின் சேர்க்கை அநீதியின் இருப்பிடமாக உள்ளது. ஏழ்மை இரங்கத்தக்கது. கருணையுடையோர் ஏழைக்கு உதவுவர். துன்பத்தில் தளர்வது சாதாரண மனித இயல்பு. "இன்னாமை "இன்பம் எனக் கொளின் ஆகுந்தன் ஒன்னார் விழையும் சிறப்பு" துன்பம் கண்டு துவளாதார்க்குச் சிறப்பு அளிப்பான். தன்வசமழிந்த நிலையில் கவலையற்றிருக்கும் கண்ணன் — தந்தையானாலும் குழந்தையுள்ளம் கொண்டவன். சணம் பித்தம், சணம் வாதம் என்பர்; இதுவே நாழிகைக்கு ஒரு புத்தி. இராப் பகல் அற்ற இடத்தே, நினைப்பற நினைந்து மோனத்தில் மூழ்கியிருக்கும் ஞானி அவன். கண்ணன் குழந்தை. கண்ணன் ஞானி. குழந்தையின் சலன புத்தியும் ஞானியின் ஸ்திர புத்தியும் கொண்டான் அவன்.

6. இன்பத்தை இனிதெனவும் — துன்பம்
இனிதில்லை யென்று மவன் எண்ணுவதில்லை;
அன்பு மிகவு முடையான்; — தெளிந்
தறிவினில் உயிர்க் குலம் ஏற்ற முறவே,
வன்புகள் பல புரிவான், — ஒரு
மந்திரி யுண்டெந்தைக்கு விதியென்பவன்;
முன்பு விதித்த தனையே — பின்பு
முறைப்படி அறிந்துண்ண மூட்டி விடுவான்.

பொருள் :- இன்பமே இனியதென்றும் துன்பம் இனிமையற்றதென்றும் அவன் எண்ணுவதில்லை. மிக்க அன்புடையவன், தெளிந்த அறிவோடு உயிர்கள் உயர்வு பெற பலவன் செயல்களைச் செய்வான். என் தந்தை கண்ணனுக்கு விதி என்னும் மந்திரி ஒருவன் உளான். விதிப்படி அமைந்ததனையே அதை உண்ணும் காலம் வந்தவுடன் ஆன்மாக்கள் உண்ணுமாறு கூட்டிவிடுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் :- இன்றைமை இன்பம் எனக் கொண்டும் இயல்பு. இடும்பை இயல்பெனக் கொள்ளும் பக்குவம் மிகவும் உடையவன். வன்புகள் பல புரியும் கண்ணன் அன்பன் மறத்திற்கும் அன்பே காரணம். சாதாரண மனிதர் புரியும் மறத்திற்கு, வன்பு காரணம். ஞானிகளின் உள்ளத்தில் வன்புக்கு இடம் இல்லை. விதியென்னும் மந்திரி அரசன் ஆணைப்படி செயல் புரிவான்.

7. வேதங்கள் கோத்து வைத்தான் — அந்த
வேதங்கள் மனிதர் தம் மொழியிலில்லை;
வேதங்களென்று புவியோர் — சொல்லும்
வெறுங் கதைத் திரளிலவ் வேதமில்லை;
வேதங்க ளென்றவற்றுள்ளே — அவன்
வேதத்தின் சில சில கலந்த துண்டு:
வேதங்களன்றி யொன்றில்லை — இந்த
மேதினி மாந்தர் சொலும் வார்த்தைகளெல்
[லாம்.

பொருள் :- நம் வாழ்வுக்குத் தேவையான ஞானங்களை யெல்லாம் தந்தை கண்ணன் கோத்து வைத்துள்ளான். ஆனால் அவ்வேதங்கள் மனிதர் பேசும் மொழியில் அமையவில்லை இன்று உலகினர் வேதங்கள் என்று கூறும் வெறும் கதைகளிலே கண்ணன் கோத்த வேதங்கள் இல்லை, ஆனால் இன்றைய வேதத்திலே அவன் வேதத்தின் சிற் சில கூறுகள் கலந்துள்ளன; வேதங்களன்றி வேறொன்றும் இவ்வுலகில் இல்லை. உலகினர் கூறும் வார்த்தைகளெல்லாம் வேதங்களே.

விளக்கம் :- வேதங்கள் இவை இவை என்றும் அவற்றைப் பின்பற்றி நடக்கவேண்டுமென்றும் கட்டிவிட்ட வேதங்கள் நம்மைத் தாழ்த்தியுள்ளன. அவன் கோத்த வேதஞானம் மனித மொழியுள் அகப்படாதது. ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நால் வேதங்கள் என்று கூறப்படும் வேதத்திலுள் வேதக் கருத்துக்கள் சிற்சில உள்ளன. முழுமையாக வல்ல, மனித வார்த்தைகள் கூட வேதங்களே. ஆனால் வார்த்தைகள் வேதத்தை முழுமையாக வெளிப்படுத்தி விட்டன என்று பொருளல்ல; மனித மொழியுள் அகப் பட்டுவிடக்கூடிய சிறிய பொருளல்ல ஞானம். வேத மன்றி இவ்வுலகில் ஏதும் இல்லை. எனவே வேதத்துள் எல் லாம் அடக்கம். வார்த்தைகளும் அதற்குள் அடக்கம். மொழிகளால் ஞான சொரூபத்தின் முழுமையை யுணர முடியாது.

8. நாலு குலங்கள் அமைத்தான்; — அதை
 நாசமுறப் புரிந்தனர் மூட மனிதர்;
சீலம் அறிவு கருமம் — இவை
 சிறந்தவர் குலத்தினில் சிறந்தவராம்;
மேலவர் கீழவ ரென்றே — வெறும்
 வேடத்திற் பிறப்பினில் விதிப்பனவாம்
போலிச் சுவடியை யெல்லாம் — இன்று
 பொசுக்கி விட்டாலெவர்க்கும் நன்மையுண்
 [டென்பான்.

பொருள் - நால்வகைக் குலங்களை அமைத்துக் கொடுத் தான். அறிவற்ற மனித இனம் அதனை அழித்துத் தீமைப் படுத்திற்று. ஒழுக்கம், அறிவு, செயல்திறன் இவை சிறந் தவரே குலத்திலும் சிறந்தவராவர். இவற்றால் அன்றி வேறுவகையில் வெறும் தோற்றத்தையும் பிறப்பையும் வைத்து மேலோர் கீழோர் என விதிவகுக்கும் பொய்ச் சாத்திர நூல்களையெல்லாம் சுட்டுப் பொசுக்கி விட்டால் எல்லார்க்கும் நன்மையுண்டாகும், என்று கண்ணன் கூறு வான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் :- அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகைப் பிரிவும் உலகியல் வளர்ச்சிக்கு நன்னோக்கோடு வகுக்கப்பட்டனவாகும். ஆனால் நாளடைவில் இவற்றால் உயர்வு தாழ்வுகளைப் புகுத்தி நாசம் செய்து விட்டோம். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்னும் உண்மை தெரிந்தும் பிறப்பால் உயர்வு தாழ்வு கண்டோம். வெளித்தோற்றத்தை அளவாக வைத்து உயர்ந்தோர் தாழ்ந்தோர் எனப் பிரித்து நாசஞ் செய்தோம். சீலம், அறிவு, கருமம் இவற்றைப் புறக்கணித்தோம். இவை யுடையாரை வாழத் தெரியாத அப்பாவிகள் என இகழ்ந்தோம். அதனால் தாழ்ந்தோம். இவற்றை வற்புறுத்தும் நூல்கள் படைத்தோம். எனவே அத்தகைய நூல்களை எரித்துவிட வேண்டுமென்னும் அளவுக்கு அவை தீமை புரிந்துள்ளன என்பது கருத்து.

9. வயது முதிர்ந்து விடினும் — எந்தை
வாலிபக் களையென்றும் மாறுவதில்லை;
துயரில்லை, மூப்பு மில்லை, — என்றும்
சோர்வில்லை; நோயொன்றும் தொடுவதில்லை
பயமில்லை, பரிவொன்றில்லை, — எவர்
பக்கமும் நின்றெதிர்பக்கம் வாட்டுவதில்லை.
நயமிகத் தெரிந்தவன் காண்; — தனி
நடு நின்று விதிச் செயல் கண்டு மகிழ்வான்

பொருள்: வயோதிபத்தால் அவனின் வாலிபக்களை மாறுவதில்லை; துன்பம், மூப்பு, சோர்வு, நோய் இவை அவனைத்தொட்டுக்கூடப் பார்ப்பதில்லை. எதைக்கண்டும் அஞ்சுவதில்லை. கழிந்ததை எண்ணி இரங்கும் பரிவு—பச்சாத்தாபமும் அவனிடம் இல்லை. ஒரு பக்கம் சார்ந்து நின்று எதிர்ப்பக்கத்தினை வருத்துவதில்லை. நீதி உணர்ந்தவன். தான் தனியனாகவே நடுநிலையில் நின்று அவரவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிப்படி நடப்பதைக் கண்டு துன்புறாது இன்புறாது நீதி நடக்கிறது என ஏற்று மகிழ்வான்.

விளக்கம்: வயோதிபத்தால் வாலிபம் களை இழக்கும். அவ்வித மாற்றம் எங்கள் தந்தை கண்ணனுக்கு இல்லை. துயரும் மூப்பும் சோர்வும் நோயும் மானிடக் குறைகள். அவைகள் எங்கள் கண்ணனைத் தொடுவதில்லை. அச்சமும் பிழை செய்வதும், செய்துவிட்டு இரங்குவதுமாகிய நிலைகள் அவனுக்கு இல்லை. நடு நிலைமை அறங்களுக்கெல்லாம் சிறந்த அறமாகும். கண்ணன் நீதியின் பக்கல் அன்றி வேறு எவர் பக்கமும் நின்று அறியாதவன். நயம் என்பது இங்கே நடுநிலைமையாகும். கண்ணன் பாரதப் போரிலும் நடு நின்றவனே அன்றி பாண்டவர் பக்கம் நின்றவன் அல்லன். விருப்பு வெறுப்புக்களில் நின்று நீங்கினவனாகிய அவன் விதிப்படி ஒவ்வொருவரும் பெறும் விதி முறைகளைக் கண்டு நீதியின் வெற்றியை நினைந்து மகிழும் உள்ளம் படைத்தவன்.

10. துன்பத்தில் நொந்து வருவோர்—தம்மைத்
தூவென்றிகழ்ந்து சொல்லி வன்பு கனிவான்
அன்பினைக் கைக்கொள் என்பான்; — துன்பம்
அத்தனையும் அப்பொழுது தீர்ந்திடும்
என்பான்;
என்புடைபட்ட பொழுதும்—நெஞ்சில்
ஏக்கமுறப் பொறுப்பவர் தம்மை உவப்பான்;
இன்பத்தை எண்ணுபவர்க்கே என்றும்
இன்பமிகத் தருவதில் இன்பமுடையான்

பொருள்: துன்பத்தால் மனமிக நொந்து வருபவர்களைத் தூ என்று சொல்லித் துன்பத்தினை இகழ்ந்து அவர்களிடம் அன்பு காட்டுவான் அன்பினை கைக்கொள்ளச் சொல்வான். அதனால் வந்த துன்பங்கள் அத்தனையும் அப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதே தீர்ந்து விடும் என்பான். எலும்பு உடைபடுமாறு எதிரிகள் தாக்கியபோதும் மன ஏக்கத்தையும் பொறுப்பவர்களை மிக விரும்புவான். இன்பத்தை எண்ணி இருப்பவர்க்கு மேலும் மேலும் இன்பம் வழங்குவதில் இன்பம் கொள்வான்.

விளக்கம்; அறிவுத்தந்தைபோல துன்பம் நீக்கி அன்பு தருவான். துன்பம் மிக்க காலத்து அன்பு செய்வது அரிய செயலாகும். வன்பு செய்யவே மனம் ஏவும். அதனை விடுத்து அன்பு செய் என்பான். துன்பம் நீங்க அதுவே வழி. அடுத்த சிறப்பியல்பு பொறுமையாகும். துன்பம் செய்தவரிடத்தும் காட்டும் பொறுமை சிறந்த பொறுமையாக கருதப்படும். எண்ணமே வாழ்வு. ஆதலால் இன்ப எண்ணம் இன்பத்தைப் பெருக்கும். துன்ப எண்ணம் துன்பத்தைப் பெருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கண்ணன் - என் சேவகன்

1. கூலிமிகக் கேட்பார் கொடுத்ததெலாம்
    தாம் மறப்பார்
வேலைமிக வைத்திருந்தால்
    வீட்டிலே தங்கிடுவார்
ஏனடா நீ நேற்றைக் கிங்கு
    வரவில்லை யென்றால்
பானையிலே தேளிருந்து
    பல்லால் கடித்த தென்பார்
வீட்டிலே பெண்டாட்டி
    மேற்பூதம் வந்ததென்பார்

விளக்கம் :— வேலைக்காரர் தாம் செய்த நன்மைகளை யெல்லாம் மறந்து விட்டு செய்ய வேண்டிய வேலைகளை யும் மறந்து விட்டு கூலியிலே குறியாய் இருப்பர். அதுவும் மிகமிக அதிகமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்புவர். அதிக வேலை செய்ய வேண்டிய நேரத்தில் அவற்றைச் செய்யாது விட்டு விடுவதற்காக வேலைக்கு வராமல் தம் வீட்டிலே தங்கி விடுவர். நேற்று வரா மைக்கு காரணம் கேட்டால் பானைத்தேள் பல்லால் கடித் தது என்பான். தேளுக்கு ஏது பல்லு ? அவன் பொய் சொல்லுகிருன் என்று அவன் விடையிலிருந்து தெளிவா கிறது. மேலும் தேள் கொட்டிய சிறிய விஷயத்தை பெரிது படுத்திச் சொல்லும் வேலைக்காரர் இயல்பும் புலனுகிறது. இதைவிட வேடிக்கையானது அவன் கூறும் மற்ெருரு காரணம். அது பெண்டாட்டியை பூதம் பிடித்துவிட்டது என்பது. இதுவும் மற்ெருரு பொய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பாட்டியார் செத்துவிட்ட பன்னி
　　　　ரெண்டாம் நாளென்பார்
ஓயாமல் பொய்யுரைப்பார்
　　　　ஒன்றுரைக்க வேறுசெய்வார்
தாயாதி யோடு தனியிடத்தே
　　　　பேசிடுவார்
உள்வீட்டுச் செய்தியெல்லாம்
　　　　ஊரம்பலத் துரைப்பார்
என் வீட்டில் இல்லை யென்றால்
　　　　எங்கும் முரசறைவார்

தாயாதி - தம் உறவினர்

விளக்கம் :- தாம் வரசமைக்கு காரணம் பாட்டியா ருடைய மரணம்; அவள் இறந்து பன்னிரண்டாம் நாள் சடங்கு ஆதலால் வேலைசெய்யக் கூடாது என்பன போன்று எதற்கு எடுத்தாலும் பொய் சொல்வர். நாம் ஒன்று சொன்னால் அவர் வேறொன்று செய்வார். தாயாதி என் பது இங்கே அவர்களது உறவினரை. அவர்களைக் கண்டால் தனித்து நின்று இரகசியம் பேசுவர். வேலைக்காரர் இட முள்ள மற்றொரு பெரிய குறை உள் வீட்டுச் செய்திகளை யெல்லாம் ஊரவர் பலருமறிய சொல்வதாகும். என் என் பது இங்கே சிறியது என்னும் கருத்தில் வந்துள்ளது. வீட் டில் சிறிய பொருள் ஏதும் தட்டுப்பட்டால் அது கூட இல்லையென்று ஊரெல்லாம் பறை அறைந்து விடுவர்;

3. சேவகரால் பட்ட சிரமமிக
　　　　வுண்டு கண்டீர்
சேவகரில் லாவிடிலோ செய்கை
　　　　நடக் கவில்லை
இங்கிதனால் யானும் இடர்
　　　　மிகுந்து வாடுகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி
நான் என்றான்
மாடுகன்று மேய்த்திடுவேன்
மக்களை நான் காத்திடுவேன்

விளக்கம் :- இவ்வாறு வேலைக்காரர்களால் பட்ட துன்பம் மிகப்பல. அவர்கள் இல்லாவிடிலோ வீட்டில் ஒரு வேலையும் நடப்பதில்லை. இருப்பினும் துன்பம் மிகுந்து சோர்ந்து இருக்கையில் என்ன அதிசயம்! ஒருவன் வந்தான். எங்கு இருந்து வந்தானோ தெரியவில்லை. வந்தவனை நீயார் என்றேன். அவன் பெயர் சொல்வதை விட்டு விட்டு இடைச் சாதி நான் என்றான். மேலும் தொடர்ந்து, நான் கேளா திருக்கவே மாடு கன்றுகளை மேய்ப்பேன் பிள்ளை குட்டிகளைக் காப்பேன் என்றான்.

4. வீடு பெருக்கி விளக்கேற்றி
வைத்திடுவேன்
சொன்னபடி கேட்பேன்
துணிமணிகள் காத்திடுவேன்
சின்னக் குழந்தைக்குச் சிங்காரப்
பாட்டிசைத்தே
ஆட்டங்கள் காட்டி
அழாதபடி பார்த்திடுவேன்
காட்டுவழி யானாலும்
கள்ளர்பயமானாலும்

விளக்கம் :- வேலை செய்வதில் மிக விருப்பமுடைய வனை அவன் வீட்டினைக் கூட்டி விளக்கேற்றி வைப்பேன் என்றும் சொல்வழி கேட்பேன் என்றும் துணிமணிகளைத் தூய்மை செய்து காப்பேன் என்றும் இவைகளே அன்றி வீட்டிலுள்ள சின்னக் குழந்தைகள் மகிழுமாறு அழகிய பாடல்களை இசைத்தும் விளையாட்டுக்கள் காட்டியும் அழா தபடி பார்த்துக் கொள்வேன் என்றும் சொன்னான்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இரவிற் பகலில் எந்நேர
மானாலும்
சிரமத்தைப் பார்ப்பதில்லை தேவரீர்
தம்முடனே
சுற்றுவேன் தங்களுக்கோர் துன்பமுறாமற்
காப்பேன்
கற்றவித்தை யேதுமில்லை; காட்டு
மனிதன் ஐயே!
ஆன பொழுதுங் கோலடி குத்துப்போர்
மற்போர்
நானறிவேன்; சற்றும் நயவஞ்
சனைபுரியேன்.

விளக்கம் :— பயங்கரமான காட்டுப் பாதையானாலும் திருடர் பயம் உள்ள வழியானாலும் இரவானாலும் பகலானாலும் அவற்றால் உண்டாகும் சிரமங்களை யெல்லாம் பார்பதில்லை என்று சொன்னான். தேவரீர் என்று என்னை அழைத்து என்னை விட்டுப் பிரியாமல் கூடவே சுற்றுவேன் என்றும் எனக்கு எவ்வித துன்பமும் வராமல் காப்பாற்றுவேன் என்றும் கூறினான். ஐயா நான் கற்றது எதுவுமில்லை காட்டு மனிதன் என்றும் வேறு சொன்னான். இத்தைய பண்பு உடையவன் கல்லாதவன் என்றும் காட்டு மனிதன் என்று தன்னைச் சொன்னானே. இருப்பினும் சிலம்பு குத்துப் போர் மற்போர் ஆகியவெல்லாம் தான் அறிவேன் என்று சொன்னான். ஈற்றிலே சற்றும் நய வஞ்சனை புரியேன் என்று கூறி முடித்தான்.

6. என்றுபல சொல்லி நின்றான் ஏதுபெயர்?
சொல் என்றேன்.
ஒன்றுமில்லை, கண்ணனென்பார் ஊரிலுள்
ளோர் என்னை என்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுறுதி யுள்ளவுடல் கண்ணிலே
நல்லகுணம்
ஒட்டுறவே நன்றாக உரைத்திடுஞ்
சொல் — ஈங்கிவற்றால்.

விளக்கம்:- பெயர் என்ன என்று கேட்டபோது அதனைச் சொல்லத் தயங்கியவாறு ஒன்றுமில்லை என்றான். ஒன்றுமில்லாமையே சூனியமே, இறைமை என்ற மாபெரும் தத்துவத்தையே ஒன்றுமில்லை என்று சொன்னான். ஆனால் அந்தத் தத்துவத்திற்குப் பெயர் ஆயிரம் சொல்லிப் பரவுவர். ஊரிலுள்ளோர் என்னைக் கண்ணன் என்று அழைப்பர் என்று சொன்னான். உறுதி கொண்ட கட்டுடல். அவன் கண்களிலே அவன் நல்ல குணங்கள் தெரிந்தன. உறவு கொள்ளும் இயல்பினன் என்பதை அவன் சொல்உரைத்தது.

7. தக்கவனென் றுள்ளத்தே சார்ந்த
மகிழ்ச்சியுடன்
மிக்கவுரை பலசொல்லி விருதுபல
சாற்றுகிறாய்
கூலியென்ன கேட்கிறாய் கூறு
''கென்றேன்'' ஐயனே!
தாலிகட்டும் பெண்டாட்டி சந்ததிக
ளேது மில்லை
நானோர் தனியாள் நரைதிரை
தோன்று விடினும்

விளக்கம்:- மேலே காட்டிய இயல்புகளால் இவன் சிறந்தவன் என்று கருதி மகிழ்ச்சியோடு அதுசரி மிக அதிகமாகப் பேசுகிறாய்; உன்னைப் பற்றிப் புகழ்ந்து பேசுகிறாய் கூலி என்ன வேண்டும்? அதற்கு அவன் கூறிய பதில் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இத்தகைய மேம்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய ஒருவன் வேலைக்காரனாக வருவதே அரிது; வந்தாலும் சாதாரண கூலியா கேட்பான். அவன் சொன்னான் தேவரீர் ஆதரித்தால் போதும் அடியேனை. நெஞ்சிலுள்ள காதல் பெரிதெனக்கு காசுபெரிதில்லை என்று சொன்னான். ஐயா நான் தாலி கட்டிய பெண்டாட்டியோ பிள்ளைகளோ யாரும் எனக்கில்லை; நான் தனியாள்; தோற்றத்தில் நரைதிரை தோன்றவில்லைத்தான்; ஆனாலும் நான் வயோதிபன்.

8. ஆன வயதிற் களவில்லை
 தேவரீர்
 ஆதரித்தாற் போதும் அடியேனை.
 நெஞ்சிலுள்ள
 காதல் பெரிதெனக்குக்கா சுபெரிதில்லை
 யென்றான்
 பண்டைக் காலத்துப் பயித்தியத்தில்
 ஒன்றெனவே
 கண்டுமிகவும் களிப்புடனே
 நானவனை

விளக்கம் :- பொருளைப் பெரிதாக மதிக்கும் இவ்வுலகில் காசு பெரிதில்லை என்கிறானே இவன். காதலை விலை பேசும் இவ்வுலகில் காதல் பெரிது என்கிறானே இவன். கூலி அதிகம் கேட்பானோ என்று நினைத்தால் கூலி என்று ஒன்றும் வேண்டாம் ஆதரித்தால் போதும் என்கிறான். உண்மையிலே இவன் ஒரு பைத்தியன் தான். அதிலும் இது ஒரு பண்டைக்காலப் பைத்தியம். ஏனெனில் இந்தக்காலத்தில் இப்படிப்பட்டவர்களைக் காணவே முடியாது. பொருள் செல்வத்தைத் தவிர வேறு எதையும் மதியாத காலம். பண்டைக் காலத்தில் நல்லியல்புகளைப் போற்றி வந்தார்கள் என்று கேள்விப்படுகிறோம். ஆகவே இது ஒரு பண்டைக்காலப் பைத்தியம் தான். அது கிடைத்தது மிக களிப்புத்தரும் ஒரு செய்தியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஆளாகக் கொண்டு விட்டேன் அன்று
முதற் கொண்டு
நாளாக நாளாக நம்மிடத்தே
கண்ணனுக்குப்
பற்று மிகுந்து வரல்
பார்க்கின்றேன் கண்ணனால்
பெற்று வரும் நன்மை யெலாம்
பேசி முடியாது
கண்ணை இமையிரண்டும் காப்பது
போல் என்குடும்பம்

விளக்கம் :- பழகப் பழக பாலும் புளிக்கும் இவ்வுலகில் கண்ணனுடன் பழகப் பழக கண்ணனுக்கு பற்று மிகுந்து வருகின்றது. அவனால் என் குடும்பம் அடைந்து வரும் நன்மை சொல்லி முடியாது கண்ணையிமை காப்பது போல என்று சொல்லலாம். (நான் அவனை ஆளாகக் கொண்டு விட்டேன் என்பதற்கு எனது வேலையாள் என்று உரைப்பதிலும் பார்க்க என்னை ஆளாக்கும் ஒருவனாக அவனை ஏற்றுக்கொண்டேன் என்று கூறுவதே பொருத்தமாகும்.)

10. வண்ணமுறக் காக்கின்றான்
வாய்முணுத்தல் கண்டறியேன்
வீதி பெருக்குகிறான் வீடு
சுத்த மாக்குகிறான்
தாதியர் செய் குற்றமெலாம்
தட்டி யடக்குகிறான்
மக்களுக்கு வாத்தி, வளர்ப்புத்தாய்,
வைத்தியனாய்
ஒக்க நயங் காட்டுகிறான்.
ஒன்றுங் குறைவின்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் :- அவன் வந்த பின்பு எனக்கு ஒரு குறையுமில்லை. வேலைக்காரர் தம் குறைகளை வாய் விட்டுச் சொல்லாது மனத்தில் அழுத்தி வாயால் முணுமுணுப்பர். இவன் அங்ஙனம் செய்வதில்லை. ஏனெனில் மனக்குறையெதுவும் அற்றவன் கண்ணன். காத்தல் தெய்வமாகிய கண்ணன் வேலைகளில் பெரியது சிறியது என்று பெருமை சிறுமை பார்ப்பதில்லை. வீதி பெருக்குவதும் வீடு சுத்தமாக்குவதும் சிறிய வேலைகள் அல்ல; சீரிய வேலைகளே. பெயரளவில் அவன் வேலைக்காரன் தான். ஆனால் பிள்ளைகளுக்கு நல்ல ஆசிரியனாயும் வளர்ப்புத் தாயாயும் அவர்க்குநோயுற்ற காலத்து வைத்தியனாகவும் கடமைபுரிந்து வருகின்றான்.

11. பண்டமெலாம் சேர்த்து வைத்துப்பால் வாங்கி
[மோர் வாங்கிப்
பெண்டுகளைத் தாய்போற் பிரியமுற ஆதரித்து
நண்பனாய் மந்திரியாய் நல்லா சிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்
எங்கிருந்தோ வந்தான் இடைச் சாதி யென்று
[சொன்னான்;
இங்கிவனை யான்பெறவே என்ன தவஞ் செய்து
[விட்டேன்,
கண்ணன் எனதகத்தேகால்வைத்த நாள் முத
[லாய்
எண்ணம் விசாரம் எதுவுமவன் பொறுப்பாய்ச்
செல்வம், இளமாண்பு, சீர், சிறப்பு, நற்கீர்த்தி
கல்வி, அறிவு, கவிதை, சிவயோகம்
தெளிவே வடிவாம் சிவஞானம் என்றும்.
ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கிவருகின்றன காண்!
கண்ணனை நான் ஆட்கொண்டேன்! கண்
[கொண்டேன்! கண்கொண்டேன்!
கண்ணனையான் யாட்கொள்ளக் காரணமும்
[உள்ளனவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்: பொருட் சிதைவும் பொருட் புறக்கணிப்பும் வேலைக்காரர்களால் ஏற்படும் பெருந் தீங்குகளில் சில. இவனோ அவற்றிற்கு மாறாக பண்டம் எல்லாம் சேர்த்து வைக்கின்றான். பால் வாங்கி வைக்கின்றான். மோர் வாங்கி வைக்கின்றான் வீட்டிலுள்ள பெண்களோடு பெரும் பாலும் வேலைக்காரருக்கு ஒத்துப்போவதில்லை. இவனோ வீட்டிலுள்ள பெண்களைத் தாயாகக் கருதிவருகிறான். பார்வையிலே சேவகன், உற்றுழி உதவுவதில் நண்பன், யோசனை கூறுவதில் மந்திரி, அறிவுரை நல்குவதில் ஆசிரியன், பண்பின் உயர்வால் இவன் ஒரு தெய்வம். இவன் எங்கிருந்து வந்தான் இவ்வுலகத்தனைத் தெரியவில்லையே, இடைச்சாதி என்று சொன்னானே நம்ப முடியவில்லையே, இத்தகைய அருங்குணங்கள் எப்படி வந்தன.

நான் சேவகனைப் பெற என்ன தவம் செய்தேன் தவம் இன்றி இது கைகூடி இருக்க முடியாது, அவன் என்று என் வீட்டில் கால் வைத்தானோ அன்றிலிருந்து என் வீட்டுக் கவலைகளை எல்லாம் அவனே பொறுப்பு எடுத்தான். செல்வம், இளமை, சீர், சிறப்பு, புகழ், கல்வி, அறிவு, கவிதை, சிவயோகம், தெளிவின் உருவாம் சிவ ஞானம் எல்லாம் எல்லாவித நலன்களெல்லாம் என் வீட்டில் ஓங்கி வருகின்றன. கண்ணனை நான் ஆட்கொண்டேன். அவனால் ஆளப்பட்டேன் அவனை நான் கண்டுகொண்டேன் என் கண்ணுள் கொண்டேன் கண்ணனைப்போன்ற மாபெரும் சேவகனை நான் கொள்ளக் காரணமும் உள்ளனவே. அதாவது, இத்தகைய பெரியோன் எங்கிருந்தோ வந்தான் வந்த இடத்தை சொல்லாமல். சொன்னால் அவன் தகுதி நோக்கி நான் ஏற்றுக் கொள்ளாமல் விடுதலும் கூடும் என்று கருதி தன்னிடம் இது எனக் குறியாது விட்டான். தன் குலம் தேவர் குலம் என்று கூறின் நான் அவன் உயர்குலம் கருதிப் பணியாளனாக ஏற்றுக் கொள்ளாது விடுதலும் கூடும் என்று எண்ணிப் போலும் தன் சாதி இடைச் சாதி என்றான், தன் தகுதியெல்லாம் கூறிய அவன் கூலி இன்னது என்று கேட்பின் தன்னைத் தள்ளி விடவும் கூடும் எனக் கருதிப் போலும் ஆதரித்தால் போதும் அடியேனை என்றான். இத்தகைய பெரியோனைச் சேவகனாகப் பெறும் பேறு என்னிடமும் உள்ளது என்பதனைக் கூறாமல் கூறி காரணமும் உள்ளனவே என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கண்ணன் என் அரசன்

பகைமைமுற்றி முதிர்ந்திடு மட்டிலும்
பார்த்திருப்ப தல்லா லொன்றுஞ்செய்திடான்
நகைபுரிந்து பொறுத்துப் பொறுத்தையோ
நாட்கள் மாதங்கள் ஆண்டுகள் போக்குவான்

பொருள்: பகைமையானது முற்றி முதிரும் மட்டும் பார்த்திருப்பான்; வேறொன்றும் செய்யான். பகையைக் கண்டு நகைத்துப் பொறுத்துப் பொறுத்து நாட்களும் வாரங்களும் மாதங்களும் ஆண்டுகளையும் கழிப்பான்

விளக்கம்: பகையை முளையிலே அழித்துவிட வேண்டுமென்ற கருத்தின்றி அது முற்றி முதிரும் வரை காத்திருப்பான்; அதனை வேறு வகையில் தீர்த்து வைக்க முயற்சியும் செய்யான். பகை கண்டு மனம் பதைக்காமல் நகை புரிவான். பொறுமை அழிய வேண்டிய இடத்தும் பொறுத்துப் பொறுத்து நாளல்ல மாதங்களல்ல ஆண்டுகள் பலவற்றைப் போக்குவான். பகையை உடனேயே தீர்த்து; பழி வாங்கி விட வேண்டும் என்ற மனித மனம் வேறு; விதியின் நியதியை உணர்ந்த கண்ணன் நகை புரிந்து பொறுத்துக் கொள்வதும் நாட்கள் மாதங்கள் ஆண்டுகள் போக்குவதும் அவனது ஞான முதிர்ச்சியை காட்டும் செயல்களாகும்.

கண்ணன் வென்று பகைமை யழிந்து நாம்
கண்ணிற் காண்ப தரிதெனத் தோன்றுமே
எண்ண மிட்டெண்ண மிட்டுச் சலித்து நாம்
இழந்த நாட்கள் யுகமெனப் போகுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : கண்ணன் பகையை வென்று அது அழிந்து வெற்றியைக் கண்ணுறக் காண்பது நடவாத செயல் என்று தோன்றும் அதனை எண்ணி எண்ணி நடவாமையால் சலிப்புற்றுக் கழிந்த நாட்கள் ஒன்று இரண்டா யுகமாகும்.

விளக்கம் : வெற்றியைக் காணத் துடிக்கும் மக்களுக்கு கண்ணனின் பொறுமை, வெற்றியை இனி எப்போதுமே காண முடியாது என்னும் அளவிற்கு நினைக்கத் தூண்டும். மானிட இயல்பில் எண்ணமிடுதலும் அது நிறைவேறாத போது சலிப்படைதலும் இயல்பு. ஆனால் கண்ணனோ விதியின் நியதியை விளங்கியவன். ஆதலால் பொறுமை இழவாது சலிப்படையாது நகை புரிந்து நிற்கின்றான். சலிப்படைந்த மக்களுக்கு நாட்கள் யுகமாகத் தோன்றுகின்றன.

படைகள் சேர்த்தல் பரிசனம் சேர்த்திடல்
பணமுண் டாக்கல் எதுவும் புரிந்திடான்
இடையர் வீரமி லாதவன், அஞ்சினேன்
என்றவர் சொலும் ஏச்சிற்கு நாணிலான்

பொருள் : போருக்குரிய படைகளைச் சேர்த்தல், உதவியாட்களைச் சேர்த்தல், போர்ச் செலவுக்காகும் செல்வம் சேர்த்தல் ஆகிய எதுவும் செய்யான், இடையன் என்றும் வீரமில்லாதவன் என்றும் பயந்தவனென்றும் பலர் சொல்லும் இழிவுக்கும் நாணமடையாதிருப்பான்.

விளக்கம் : போராயத்தங்கள் எதுவுமே செய்யாதிருப்பான். போர் நெருங்கிவரும் போதும் எவ்வித பதற்றமுமின்றி இருப்பான். அது இருந்தாலல்லவோ படை முதலியனவற்றைச் சேர்க்க முயற்சிப்பான். குலத்தைச் சொல்லி இழித்துப் பேசினாலும் வீரமற்றவன், கோழை எனப் பழித்தாலும் நாணம் சிறிதுமின்றி இருக்கிறானே, மானிடப் பார்வையில் இந்நிலை எத்தனைய இழிநிலை ! கண்ணன் ஞானி ஆதலால் அவனிடம் எல்லாம் உணர்ந்த நிதானம் குடிகொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லப் பூத மனுப்பிடு மாமனே
  கோலு யர்த்துல காண்டு களித்திட
முல்லை மென்னகை மாதர்க்கும் பாட்டிற்கும்
  மோக முற்றுப் பொழுதுகள் போக்குவான்

பொருள் : கண்ணனைக் கொல்லப் பூதமனுப்பிய கம்சன் என்னும் பெயர் கொண்ட மாமன் அரசாண்டு களித்து வாழ்ந்திடக் கண்டும் அவனை எதிர்க்கத் துணியாது முல்லை மலர் போல் நகை யுதிர்க்கும் மாதர்க்கும் அவர் பாடும் இன்னிசைக்கும் மோகங்கொண்டு அவற்றிலேயே பொழுது போக்குவான்.

விளக்கம் : கண்ணன் கம்சனின் மருமகன். கண்ணன் பிறப்பால் தன் அரசுக்கு நாசம் வரும் என்று கருதி அவனைக் கொல்லப் பூதமனுப்பியவன் கம்சன், பூதத்தைக் கொன்றவன் கண்ணன். ஆனால் தன்னைக் கொல்லக் கருதியுள்ள மாமனை அழிக்காது அவனால் வரும் ஆபத்தை யுணர்ந்தும் உணராதவன் போலப் பெண்களோடு கூடிப் பாடித் திரிகிறான், இந்த விந்தைச் செயல் மானிடப் பார்வையில் மதியீனமாகத் தெரிகிறது.

வான நீர்க்கு வருந்தும் பயிரென
  மாந்தர் மற்றிவண் போர்க்குத் தவிக்கவும்
தானம் கீர்த்தனை தாளங்கள் கூத்துக்கள்
  தனிமைவேய்ங்குழல் என்றிவை போற்றுவான்

பொருள் : மழையைப் பெற வருந்தி நிற்கும் பயிர் போல மக்களெல்லாம் போருக்காகத் தவித்து நிற்கவும், கண்ணன் இவற்றையெல்லாம் மறந்து தானம் செய்வதிலும் கீர்த்தனைகள் பாடி தாளங்கள் போட்டுக் கூத்துக்கள் ஆடியும் தனியேயிருந்து வேய்ங்குழல் ஊதியும் பொழுது போக்குவான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் ; போருக்காகக் காத்து நிற்கும் மக்கள் மனநிலை மழைக்காகக் காத்து நிற்கும் பயிருக்கு உவமிக்கப்பட்டுள்ளது. மழையால் பயிர்வளர்வது போல போரால் மக்கள் துன்பம்நீங்கி வாழலாம் என்பது கருத்து; எப்போது போர் என மக்கள் தவித்து நிற்கவும் கண்ணன் அவற்றை மறந்தவனாய் இன்பப் பொழுது போக்குகின்றான்.

காலினைக் கையினால் பற்றிக் கொண்டு நாம்
கதியெமக் கொன்று காட்டுவை
யென்றிட்டால்
நாலி லொன்று பலித்திடுங் காணென் பான்
நாமச் சொல்லின் பொருளெங் ஙுணர்வதே

பொருள் : கண்ணன் கால்களைக் கையினாற் பிடித்துக் கொண்டு நாமுய்ய வழிகாட்டுக என வேண்டினால் நாலில் ஒன்று பலிக்கும் என்பான்; அச் சொல்லின் பொருளை நாம் எப்படி விளங்கிக் கொள்வது?

விளக்கம் : எப்படியாவது எமக்குக் கதி அருள் வேண்டும் என்று அவனை விடாது பற்றிக் கொண்டால் எமது அன்புத் தொந்தரவு தாளாது நாலில் ஒன்று பலிக்கும் என்பான். இதற்கு என்ன பொருள்? நான்கு பகுதியில் ஒருபகுதி என்று பொருளா? நான்கு என்பதற்குப் பொருள் என்ன? ஒன்று என்பது எதனைக் குறிக்கின்றது என்பதெல்லாம் மயக்கமாயுள்ளது. எனவே அவன் கூற்றை விளங்க முடியாது என்பது பொருள்.

நாம வன்வலி நம்பி யிருக்கவும்
நாணமின்றிப் பதுங்கி வளருவான்;
தீமை தன்னை விலக்கவுஞ் செய்குவான்;
சிறுமை கொண்டொளித் தோடவுஞ்
செய்குவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : அவனைத் தவிர வேறு வழியில்லையென அவனையே நம்பியிருக்கவும் அவனோ சிறிதும் நாணமின்றிப் பதுங்கி வாழ்வான். சில வேளைகளில் தீமையை விலக்குவான், சிறுமைத் தனத்தோடு ஒளித்து ஓடவும் செய்வான்.

விளக்கம் : தம்மை நம்பினோரைக் காப்பது கடனாயிருக்கவும், அதனைச் செய்யாது அவர் கண்ணிலும் படாது பதுங்குவான். தீமையை விலக்குவான்; பயந்தவன் போல ஒளித்தும் ஓடுவான்.

தந்தி ரங்கள் பயிலவுஞ் செய்குவான்;
  சவுரி யங்கள் பழகவுஞ் செய்குவான்;
மந்தி ரத்திற னும்பல காட்டுவான்
  வலிமை யின்றிச் சிறுமையில் வாழ்குவான்.

பொருள்; போர்க் கலைகள் பல பயின்று கொள்வான். சௌகரியங்கள், வாழ்க்கை வசதிகள் பல பழகியுமுள்ளான். ஆலோசனைகளை ஆற்றலோடு வெளிப்படுத்துவான். எவ்வித வலிமையுமற்றவன்போலச் சிறுமைப் பட்டும் வாழ்வான்.

விளக்கம் : கண்ணனின் ஆற்றல்கள் மிகப்பல. கடினமான போரை மேற்கொள்ளவும் வாழ்க்கையின் சுக போகங்களைச் சுகிக்கவும் அவனால் முடியும். வன்மையும் மென்மையும் ஒருங்கமைந்தவன். வேண்டிய நேரத்தில் வேண்டிய ஆலோசனைகளை அள்ளிவழங்கும் ஆற்றலுடைய அவன், ஆற்றல் அற்றவன் போல சிறுமைப்பட்டும் வாழ்வான்.

காலம் வந்துகை கூடுமப் போதிலோர்
  கணத்தி லேபுதி தாக விளங்குவான்
ஆல கால விடத்தினைப் போலவே
  அகில முற்றும் அசைந்திடச் சீறுவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் ; வினை செய்வதற்குரிய நேரம் வந்தவுடன், அவனது பழைய கோலங்கள் எல்லாம் மாறிப் புதியவன் போலப் பொலிந்து தோற்றுவான். ஆலகால விடம் போல உலகெலாம் நடுங்கச் சீறுவான்.

விளக்கம்: வினை செய் காலம் வருமுன் மேற்காட்டியவாறு இன்பப் பொழுது போக்கியும் பயந்தவன் போலவும் வீரமற்றவன் போலவும், விளங்கிய கண்ணன் உற்ற நேரத்தில் அவனு இவன் என்று அதிசயிக்குமாறு புதுக் கோலத்தில் பொலிவான். நாணிலான் போல நின்றவன் ஆலகால விடமெனச் சீறுவான்.

வேரும் வேரடி மண்ணு மிலாமலே
வெந்து போகப் பகைமை பொசுக்குவான்
பாரும் வானமும் ஆயிர மாண்டுகள்
பட்ட துன்பங் கணத்திடை மாற்றுவான்

பொருள் : வேருமற்று வேரோடு கிடந்த மண்ணும் அற்று அழிந்துபோகுமாறு பகையினைச் சுட்டெரிப்பான். மண்ணும் விண்ணும் பல்லாயிரமாண்டுகளாகப் பட்ட துன்பத்தினை ஒரு கணத்தில் நீக்குவான்.

விளக்கம்: இத்தனை காலமும் பொறுத்து வினையாடிய கண்ணன் காலம் வந்துற்றபோது பகைமையினை முற்றாக அழிப்பான். பகைமையின் கிளைகளை மாத்திரமன்றி அதன் அடிமரத்தை மாத்திரமன்றி வேரைக் கல்லி எறிவது மாத்திரமன்றி, வேரடி மண்ணிலிருந்தும் பகைமை துளிர்க்கக் கூடுமெனக் கருதி வேரடிமண்ணையும் பொசுக்குவான். துன்ப நாட்கள் யுகங்களாக இருந்தன. அவற்றைக் கணணித்தில் போக்கினன்.

சக்கரத்தை யெடுப்ப தொருகணம்
தருமம் பாரில் தழைத்தல் மறுகணம்
இக்கணத்தில் இடைக்கண மொன்றுண்டோ ?
இதனுள்ளேபகை மாய்த்திட வல்லன்காண் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : சக்கர ஆயுதத்தைக் கண்ணன் கையில் எடுத்த மறுகணமே தருமம் பாரில் தழைத்து விட்டது சக்கரத்தை எடுத்த கணத்துக்கும் தருமம் தழைத்த கணத்துக்கும் இடையில் ஒரு நொடிப் பொழுதுதானும் உண்டோ ? அப்படியானால் எப்போ, எக்காலத்தில் பகை மாய்த்தான். அவ்விடைவெளிப் பொழுதிலே பகையை மாய்த்துவிட்டான்

விளக்கம் : பொழுது போக்கிய கண்ணன் போர் ஆற்றல் இது. சக்கரத்தை எடுத்த மறுகணம் தருமம் தழைத்தது. அப்படியானால் போர் செய்தது எப்போது ? எந்நேரத்தில் ? இடைக்கணம் என ஒன்று உண்டோ? என்னே அதிசயம் பகையினைக் காணவில்லையே ? எங்ஙனம் பகை மாய்த்தான்?

கண்ணனெங்கள் அரசன் புகழினைக்
கவிதை கொண்டெந்தக் காலமும்
போற்றுவேன்
தின்னை வாயில் பெருக்கவந் தேனெனைத்
தேசம் போற்றத்தன் மந்திரி யாக்கினான்
நித்தச் சோற்றினுக் கேவல் செயவந்தேன்
நிகரி லாப்பெருஞ் செல்வம் உதவினான்
வித்தை நன்குகல் லாதவன் என்னுள்ளே
வேத நுட்பம் விளங்கிடச் செய்திட்டான்
கண்ணனெம்பெரு மானருள் வாழ்கவே
கலியழிந்து புவித்தலம் வாழ்கவே
அன்னவன்னருள் நாடிய நாடுதான்
அவலம் நீங்கிப் புகழில் உயர்கவே.

பொருள் : கண்ணனாகிய எம் அரசன் புகழைக் கவிதையால் எக்காலமும் போற்றுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ணை பெருக்க, வாயில் பெருக்க வந்த என்னை உலகம் புகழும் தன் மந்திரியாக்கிப் பெருமை செய்தான். தினக் கூலிக்கு—சோற்றுக்கு ஏவல் செய்து பிழைக்க வந்த ஏழையாகிய எனக்கு நிகரற்ற பெருஞ் செல்வம் வழங்கினான். வித்தை எதுவும் கல்லாதவனாகிய என்னுள்ளே வேதங்களின் நுண்ணுணர்வு விளங்கச் செய்தான். இத்தகைய பேரருள் புரிந்த கண்ணனின், என் தலைவனின் அருள் வாழ்க! துன்பம் நீங்கி இவ்வுலகம் வாழ்க! பெரியோனாகிய கண்ணனின் அருளை விரும்பிய நம்நாடு துன்பம் நீங்கிப் புகழ்பெற்று உயர்வதாக.

விளக்கம்: கண்ணன் புகழ் பாடக் கவிதையே தக்கது. நான் எவ்வளவு சிறியேன். சிற்றூழியம் செய்யவே தகுதியுடையவன், எனக்குத் தன்னாணை மேற்கொள்ளும் மந்திரிப் பதவியைத் தந்தானே. கண்ணனின் அருளாணையினாலேயே தான் கவி பாடியதாகப் பாரதியார் சொல்கிறார். தகுதியற்ற தன்னை தகுதியாக்கிப் பதவி தந்து உயர்த்தினான். அன்றாடம் சோற்றுக்கு வழியின்றியிருந்த என்னைச் செல்வனாக்கினான். வேத நுட்பமும் விளங்கக் கூடிய ஞானி ஆக்கினான். இவையெல்லாம் என்னாற்றலால் கிடைத்தவை யல்ல. அவன் அருளால் வந்தவை. என் தகுதி சிறிது. அவன் அருளின் பெருக்கம் பெரிது பெரிது. நான் உயர்ந்தால் போதுமா? கலியழிக! புவி வாழ்க! என் நாட்டின் அவலம் நான் அறிவேன்? அது நீங்கி என் நாடு வாழ்க. வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கண்ணன் - என் சீடன்

ஆசிரியப்பா

யானே யாகி என்னலாற் பிறவாய்
யாலும் அவையுமாய் இரண்டினும் வேருய்
யாதோ பொருளாம் மாயக் கண்ணன்,
என்னிலும் அறிவினிற் குறைந்தவன் போலவும்,
என்னைத் துணைக்கொண்டு, என்னுடை முயற்சி
[யால்
என்னிடை பழகலால் என்மொழி கேட்டலால்
மேம்பா டெய்த வேண்டினேன் போலவும்
யான் சொலுங் கவிதை என்மதி யளவை
இவற்றினைப் பெருமை யிலங்கின வென்று
கருதுவான் போலவும், கண்ணக் கள்வன்!

பொருள்: யானுகி நிற்பவனும் யானேயன்றிப் பிற வாய் நிற்பவனும் யானுமாய் அவையுமாய் நிற்பவனும் இரண்டிலும் வேருய் வேறுமாய் நிற்பவனுகிய மாயக் கண்ணன்.

என்னைவிடத் தான் அறிவிலே குறைவுடையவன் போலவும் என் துணையால் என் முயற்சியால் என்னோடு பழகுதலால் நான் கூறுவதைக் கேட்பதால் தான் மேன்மை யடைய விரும்பினவன் போலவும்.

யான் கூறும் கவிதை என் அறிவின் திறமை இவற்றில் பெருமையுள்ளனவென்று கருதுபவனைப்போலவும் கண்ணனும் கள்வன்.

விளக்கம்: கண்ணனே எல்லாம். அவனின்றி ஒரு பொருள் இல்லை. யானும் அவனே: பிறவும் அவனே இப்பெருநிலை; ஒரு பெரு மாயம். இத்தகைய பெருமை

யுடையோன், என்னிடம் அறிவுபெற. என்னால் மேம்பாடடையப், என் கவிதை, என் அறிவு இவற்றைப் பெருமையெனக் கருதினனே, இது எத்தகைய கள்ளம்.

சீடனு வந்தெனைச் சேர்ந்தனன் தெய்வமே!
பேதையேன் அவலவலைப் பின்னலில் வீழ்ந்து
பட்டன தொல்லை பலபெரும் பாரதம்;
உளத்தினை வென்றிடேன்; உலகினை வெல்லவும்
தாளைகஞ் சூடாதேன் பிறர்தமைத் தானெனும்
சிறுமையி னகற்றிச் சிவத்திலே நிறுத்தவும்
தன்னுள்ளே தெளிவும் சலிப்பிலா மகிழ்ச்சியும்
உற்றிடேன்; இந்தச் சகத்திலே யுள்ள
மாந்தர்க் குற்ற துயரெல்லாம் மாற்றி
இன்பந் திருத்தவும் எண்ணிய பிழைக்கெனைத்

பொருள்: எனது சீடனாக வந்து என்னை அடைந்தனன் இறைவா! பேதையேனாகிய நான் உலகப்பாச அலைப்பின்னலில் சிக்கிப் பட்ட துன்பமோ ஒரு பெரும் பாரதமளவு பெரிதாகும். என் உள்ளத்தை வெல்லாத வனாகிய நான், உலகை வென்றிடக் கருதுகின்றேன். தான் என்னும் மனத்தீமையைச் சுட்டெரிக்காத நான், மற்றையோருடைய தான் என்னும் அகங்காரத் தீமையை அகற்றவும் அவரைச் சிவத்திலே சேர்க்கவும் முயல்கின்றேன். மயக்கமற்ற தெளிந்த ஞானமும் சலிப்பற்ற ஆனந்தமுமாகிய பெருநிலையை நான் அடையவில்லை. ஆனால் உலகமாந்தரின் துன்பமெல்லாம் நீக்கி அவர்களை இன்ப வாழ்வில் இருத்த எண்ணிய என் பிழையினுக்கு.

விளக்கம்; தெய்வமே! இது என்ன விந்தை இத்தகைய பெரியோன் எனக்குச் சீடனாக வந்தானே. என் துன்பமோ பெரும் பாரதம். இத்தகைய என்னிடம் இவன் என்ன இன்பத்தைக் காணப் போகின்றான். உல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குக்கு உதவும் தகுதி எதுவும் என்னிடம் இல்லையே என் பிழையை நான் அறிவேன். மனம்போன போக்கெல்லாம் போகும் என் உள்ளத்தை வென்றிலேன். தான் எனும் ஆணவம் தள்ளாதவன் நான். தெளிவற்ற அறிவும் சலிப்பும் உடையவன் நான். இத்தகைய இழி நிலையில் உள்ள எனக்குப் பிறரை உயர்த்த வேண்டுமென்ற எண்ணம் வேறு. இதுவே நம்மிடம் உள்ள பெரும் பிழையாகும்.

தண்டனை புரிந்திடத் தானுளங் கொண்டு
 மாயக் கண்ணன் வலிந்தெனைச் சார்ந்து,
புகழ்ச்சிகள் கூறியும், புலமையை வியந்தும்
 பலவகை யால் அகப் பற்றுறச் செய்தான்,
வெறும்வாய் மெல்லுங் கிழவிக் கஃதோர்
 அவலாய் மூண்டது யானுமங் கவனை
உயர்நிலைப் படுத்தலில் ஊக்கமிக் கவனாய்;
 இன்னது செய்திடேல், இவரொடு பழகேல்,
இவ்வகை மொழிந்திடேல், இனையன விரும்பேல்,
 இன்னது கற்றிடேல், இன்ன நூல் கற்பாய்,
இன்னவ ருறவு கொள், இன்னவை விரும்புவாய்

பொருள்! என் பிழைக்கேற்ற தண்டனை தந்து திருத்த உளங் கொண்டு மாயம் வல்ல கண்ணபிரான், தானாக வந்து என்னைச் சேர்ந்து என்னைப்பற்றிப் பல புகழ்ச்சி மொழிகளைக் கூறியும், என் அறிவுமேம்பாட்டை வியந்து கூறியும், பல்வகைகளால் என் அகத்தில் அவனிடம் பற்று உண்டாகுமாறு செய்தான். அவனது இச்செயல் வெறும் வாயை மென்று சுவைப்பது போல் சுவைத்து நின்ற கிழவிக்கு அவல் கிடைத்ததுபோல அமைந்தது. நானும் அவனை உயர்வுபடுத்தலில் ஊக்கம் மிக்கவனானேன். இன்னது செய்யேல். இன்னாரின்னாரோடு பழகாதே, இங்ஙனம் பேசாதே, இவற்றை விரும்பாதே, இவற்றை விரும்பிக் கல்; இவரோடு உறவுகொள், இவற்றை விரும்புக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் : தண்டனை தந்தும் என்னைத் திருத்த விரும்பிய கண்ணன் நான் அழையாதிருப்பவும் தானாகவே என்னிடம் வந்தான். எப்படியோ என் அகம் அவனைப் பற்றுமாறு செய்துவிட்டான். வெறும்வாயை மெல்லும் கிழவிபோல உயர் குணங்கள் எதுவுமற்ற எனக்கு, தற்புகழ்ச்சி கொண்டிருந்த எனக்கு, அவன் கூறிய புகழுரைகள் அவலாய் இருந்தன. தகுதியற்ற நானும் உயர் நிலையில் இருந்த அவனை உயர்வுபடுத்துவதாகக் கருதிக் கொண்டு இவை இவை செய்யேல்; இவை இவை செய்யென உலகியல் நிலையில் நின்று உபதேசித்தேன்.

எனப்பல தருமம் எடுத்தெடுத் தோதி,
 ஓய்விலா தவனோ டுயிர்விட லானேன்,
கதையிலே கணவன் சொல்லினுக் கெல்லாம்
 எதிர் செயும் மனைவிபோல், இவனும் நான்
  [காட்டும்
நெறியினுக் கெல்லாம் நேரெதிர் நெறியே
 நடப்பா னாயினன். நானிலத் தவர்தம்
மதிப்பையும் புகழுறு வாழ்க்கையும் புகழையும்
 தெய்வமாகக் கொண்ட சிறுமதி யுடையேன்
கண்ணனு் சீடன், யான் காட்டிய வழியெலாம்
 விலகியே நடக்கும் விநோதமிங் கன்றியும்,
உலகினர் வெறுப்புறும் ஒழுக்கமத் தனையும்
 தனையாக் கொண்டு சார்பெலாம் பழிச் சொலும்
இகழுமிக் கவனாய் என்மனம் வருந்த
 நடந்திடல் கண்டேன் ; நாட்பட நாட்பட

பொருள் :- என்று பல தருமங்களை அவனுக்கு எடுத்துச் சொல்லி ஓய்வின்றி அவனோடு என் உயிரையே விடலானேன். கதையிலே கணவன் சொல்லுக்கு எதிராகச் செயற்படும் மனைவியைப் போல நான் காட்டிய வழியை விடுத்து எதிர் வழியிலேயே நடப்பானாயினன். நானே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தவர் தரும் மதிப்பையும் அவர் பார்வையிற் பொருந்தும் புகழ் வாழ்வையும் புகழ் மொழிகளையுமே தெய்வமெனக் கொண்டு போற்றும் அறியாமையுடையவன். ஆதலால், கண்ணனாஞ்சீடன், நான் காட்டிய வழியில் நடவாது விலகிச் செல்வதையும் உலகோர் வெறுப்பதையெல்லாம் விருப்பமாய்க்கொண்டு ஒழுகுவதையும் சென்ற இடமெல்லாம் பழியும் இகழ்ச்சியும் மிக்கவனாய் என் மனமானது வருத்தம் கொள்ள நடப்பதையும் கண்டேன்.

விளக்கம் :- அவனைத் திருத்திவிட வேண்டுமென்னும் ஊக்கத்தால் அவனோடேயே என் பொழுதெலாம் கழித்தேன். கணவன் சொல்லுக்கு எதிர் செய்யும் மனைவி உவமை. மனைவியின் கீழ்ப்படியின்மை கணவனை வருத்துதல்போல இவன் செயலும் வருத்திற்று. உலகவர் பார்வை வேறு. உயர்ந்தோர் பார்வை வேறு. என் பார்வையில் என் வழியில் விலகியே கண்ணன் நடந்தவன். உலகத்தவர் பார்வையில் வெறுப்புறும் ஒழுக்கங் கொண்டான் கண்ணன்.

கண்ணனும் தனது கழிபடு நடையில்
மிஞ்சலா னாகி வீதியிற் பெரியோர்
கிழவிய ரெல்லாம் கிறுக்கனென் றிவனை
இகழ்ச்சியோ டிரக்கமுற் றேளனம் புரியும்
நிலையும் வந்திட்டான் நெஞ்சிலே யெனக்குத்
தோன்றிய வருத்தஞ் சொல்லிடப் படாது
முத்தனுக் கிடநான் முயன்றதோர் இளைஞன்
பித்தனென் றுலகினர் பேசிய பேச்சென்
நெஞ்சினை அறுத்தது; நீதிகள் பலவும்
தந்திரம் பலவும் சாத்திரம் பலவும்
சொல்லி நான் கண்ணனைத் தொளைத்திடலாயினேன்.

பொருள் :- நான் ஆகஆகத் திருந்துவதற்குப் பதிலாக தன் பிழை படு நடைமுறையில் மேலோங்கி நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியிற் செல்லும் பெரியோரும் கிழவியரும்கூட இவன் ஒரு சிறுக்கன் என்று இகழ்ந்து இரங்கி, இழித்துரைக்கும் நிலையை அடைந்தனன். இதனால் என் நெஞ்சில் தோன்றிய வருத்தம் சொல்லில் அடங்காது. நான் முத்தனாக்க விரும்பிய இளைஞனைப் பார்த்து உலகினர் பித்தன் என்று இகழ்ந்து பேசலெல்லாம் என் நெஞ்சினை அறுத்தது. மனம் தாளாது அவனைத் திருத்த எண்ணி நீதிகள் பல சொன்னேன். தந்திரம் பல செய்தேன். சாத்திரம் பல சொன்னேன். சொல்லிச் சொல்லிக் கண்ணனைத் துளைத்தெடுத்தேன்.

விளக்கம் :- கண்ணன் செயல்கள் என் அளவில் நின்று விடாது வெளியிலும் சென்றன. வீதியில் உள்ளோரும் இவனை இகழ்ந்து பேசினர். இதுவே மிகப் பெருங்கவலையாயிற்று. முத்தனாக்கிட முயன்றேன். அவனோ எதிர்மாறாகப் பித்தனாகி வந்தனன். இருப்பினும் மனம் சலியாது அறம்கூறித் திருத்த முயன்றேன்.

தேவ நிலையிலே சேர்த்திடா விடினும்
மானுடந் தவறி மடிவுறா வண்ணம்
கண்ணனை நானும் காத்திட விரும்பித்
தீயெனக் கொதித்துச் சினமொழி யுரைத்தும்
சிரித்துரை கூறியும், செள்ளென வீழ்ந்தும்
கேலிகள் பேசிக் கிளறியும், இன்னும்
எத்தனை வகையிலோ என் வழிக் கவனைக்
கொணர்ந்திட முயன்றேன்; கொள்பய னொன்றிலை
கண்ணன் பித்தனாய்க் காட்டா னாகி.

பொருள் :- தெய்வீக நிலையையடையாவிட்டாலும் மனித இயல்பு தவறி அழியாவண்ணம் கண்ணனைக் காக்க விரும்பினேன், அதனால் தீபோலக் கொதித்துச் சினந்துரைத்தேன். சிரித்து உரைத்தேன். செள்ளெனக் கடிந்தேன். கேலிகள் பேசிக் கிளறினேன்; இன்னும் பல வழிகளால் அவனை என் வழிக்குக் கொண்டுவர முயன்றேன்; அதுவும் பயனின்றிக் கழிந்தது.

விளக்கம்: கண்ணனை உயர்த்த வேண்டுமென்று செய்த நயவழிகள் பயன்படா தொழியவே பயவழிகளை பின்பற்றினேன். பின் நயவழிகளையும் கலந்தேன். எதுவுமே பயன்தர வில்லை.

எவ்வகைத் தொழிலினும் எண்ண மற்றவனாய்,
எவ்வகைப் பயனிலும் கருத்திழந் தவனாய்,
குரங்காய்க் கரடியாய்க் கொம்புடைப் பிசாசாய்
யாதோ பொருளாய், எங்ஙனோ நின்றான்.
இதனால்
அகந்தையும் மமதையும் ஆயிரம் புண்ணுற,
யான் கடுஞ்சின முற்று எவ்வகை யானும்
கண்ணனை நேருறக் கண்டே தீர்ப்பேன்
எனப் பெருந் தாபம் எய்தினே னாகி,
எவ்வா றேனும் இவனையோர் தொழிலில்
ஓரிடந் தன்னில் ஒருவழி வலிய
நிறுத்துவோ மாயின் நேருற் றிடுவான்
என்றுளத் தெண்ணி இசைந் திடுஞ் சமயம்
காத்திருந் திட்டேன். ஒரு நாள் கண்ணனைத்
தனியே எனது விட்டினிற் கொண்டு

பொருள்: கண்ணன் வரவரப் பித்தனாகிவிட்டான், காட்டு மனிதனாய் எந்தத் தொழிலையும் செய்ய மன மற்றவனாய், எவ்வித பயனிலும் கருத்தற்றவனாய் குரங்கு போல கரடி போல கொம்புள்ள பிசாசு போல எப்பொருள் என்று கூறமுடியாததாய் எப்படியோ ஆகி நின்றான். இதனால் இவனது செயல் என் மனதில் அகங்காரத்தையும் மமகாரத்தையும் தூண்டிவிட அதனால் நெஞ்சம் ஆயிரம் புண்ணாகிற்று. நான் கடும் கோபம் கொண்டு, இவனை. கண்ணனை எப்படியாவது நேராக்கி- உயர்த்தி விடுவது என்று பெரிய ஏக்கம் அடைந்தவனாகி எப்படியாவது இவனை, ஒரு தொழிலில், ஏதாவது ஓரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்தில் கண்டித்தாவது நிறுத்தி வைத்தால் சீராகி விடுவான் என்று மனத்தில் எண்ணி அதற்கேற்ற சமயம் வரும்வரை காத்திருந்தேன்.

விளக்கம்: திருத்த எடுத்த நயவழிகள் பயவழிகள் எல்லாம் பயனற்றுப் போயின. கண்ணன் வரவரச் சீர்கெட்டே வந்தான். அவனைக் குரங்கென்பதா? கரடி என்பதா? கொம்புள்ள பிசாசென்பதா? விலங்கினத்தையும் சேராத ஒன்றென்பதா? முத்தருக்க எண்ணியேன் பித்தனாக மாறினன். இன்றுவிலங்கைகவிடக் கீழாக. என்ன வென்றே கூறமுடியாத ஒரு பொருளாக ஆகிவிட்டானே. அவன் நிலை சோர்வை உண்டாக்குவதற்குப் பதிலாக, இரக்கத்தை உண்டாக்குவற்குப் பதிலாக என் மனதில் அவனைத் திருத்துவேன் நான் என்றும், அவனைத் திருத்துவது என் உரிமை என்றும் மமதையையும் அகந்தையையும் தோற்றியது. இவற்றால் என் நெஞ்சில் ஆயிரம் புண்கள் தோன்றின. புண்பட்ட மனம் சினமுற்றது. சினத்தால் ஒரு முடிபு செய்தேன் "எப்படியும் இவனைத் திருத்துவது" என்பதே அம்முடிவு.

இது ஞானத்தின் முடிபல்ல. அகந்தையின் மமதையின் முடிபு.

"மகனே, என்பால் வரம்பிலா நேசமும்
அன்பும் நீயுடையை; அதனையான் நம்பி
நின்னிட மொன்று கேட்பேன் நீயது
செய்திடல் வேண்டும் சேர்க்கையின் படியே
மாந்தர்தஞ் செயலெலாம் வகுப்புறல் கண்டாய்
சாத்திர நாட்டமுந் தருக்கமும் கவிதையில்
மெய்ப்பொரு ளாய்வதில் மிஞ்சிய விழைவும்
கொண்டோர் தமையே அருகினிற் கொண்டு,
பொருளினுக் கலையும் நேரம் போக
மிஞ்சிய பொழுதெலாம் அவருடன் மேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திட லாகுமேல் எனக்கு நன் றுண்டாம்;
பொழுதெலாம் என்னுடன் போக்கிட விரும்பும்
அறிவுடை மகனிங் குனையலால் அறிந்திடேன்.
ஆதலால்.
என்பயன் கருதி, எனக்கொரு துணையாய்

பொருள் ; ஒருநாள் தனியாக கண்ணனை எனது வீட்டிற்கு அழைத்து, மகனே நீ என்னிடம் அளவற்ற பாசமும் அன்பும் உடையவன்; அதனை நம்பி உன்னிடம் ஒன்று கேட்பேன். நீ அதைச் செய்ய வேண்டும். நாம் யாரிடம் சேருகின்றோமோ அதற்கேற்பவே எமது ஒழுக்கமும் அமையும். கல்வியில் விருப்பம் நியாயம், கவிதை, உண்மை ஆய்வு இவற்றில் மிகுந்த விருப்பமும் உள்ளவர்களோடு சார்ந்து பொருள் தேடுவதற்குச் செலவழிக்கும் நேரம் போக எஞ்சிய நேரம் எல்லாம் அவருடனேயே இருத்தல் வேண்டும் அப்படியிருப்பின், என்றும் நன்மை உண்டாகும் பொழுதெல்லாம் என்னுடனேயே கழிக்க விரும்பும் அறிவுள்ள மகன் உன்னையல்லால் வேறு ஒருவரையும் காணேன். ஆதலால்

விளக்கம்: ஏற்ற சமயம் காத்திருந்த நான் அன்பான முறையில் ஒரு விண்ணப்பம் செய்தேன், குழலாலே ஒருவன் வாழ்வு பெரிதும் பாதிக்கப்படும என்னும் உண்மையைச் சொன்னேன், பொருள் தேடும் நேரம் போக எனைய நேரமெல்லாம் பெரியாரைத் துணைக் கொள்ள வேண்டும் என்று அறிவுரை வழங்கினேன்.

என்னுடன் சிலநாள் இருந்திட நின்னை
வேண்டி நிற்கின்றேன், வேண்டுதல் மறுத்தே
என்னை நீ துன்பம் எய்துவித் திடாமே,
இவ்வுரைக் கிணங்குவாய்" என்றேன், கண்ணனும்
"அங்ஙனே புரிவேன்" ஆயின் நின், னிடத்தே
தொழிலிலாது யாங்ஙனம் சோம்பரில் இருப்பது ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரிய மொன்று காட்டுவை யாயின்,
இருப்பேன்'' என்றான். இவனுடைய இயல்பையும்
திறனையுங் கருதி'', என் செய்யுளை யெல்லாம்
நல்லதோர் பிரதியில் நாடொறும் எழுதி

பொருள் : என்னுடைய நன்மை கருதி எனக்கு ஒரு துணையாக சிலநாள் என்னோடு நீ இருக்க வேண்டும். என் வேண்டுதலை மறுத்து என்னைத் துன்புறுத்தாதே என் வேண்டுகோளுக்கு இணங்குவாயாக என்று கூறினேன். கண்ணனும் அதற்கு இசைந்தனன். ஆனாலும் யாதொரு தொழிலும் இல்லாது சும்மா சோம்பியிருப்பது எங்ஙனம் காரியம் ஒன்று காட்டினால் இருப்பேன் என்றான். இவன் ஆற்றலை மனதிற் கொண்டு என் கவிதைகளை யெல்லாம் பிரதி எடுக்குமாறு கூறினேன்.

விளக்கம் : கண்ணனைத் திருத்த விரும்பிய நான் அவன் பயன் கருதியல்ல; என் பயன் கருதி எனக்குத் துணையாய் என்னுடன் இருக்கவேண்டும் என்று வேண்டினேன். நான் பெரியவன் என்றும் என் சேர்க்கையால் அவன் திருந்துவான் என்பதும் என் நினைப்பு. என் சொல்லுக் கிணங்கிய அவன் காரியம் செய்வதில் ஆர்வம் உடையவன் போல காரியம் ஒன்று காட்டு என்று கேட்டான்.

கொடுத்திடுந் தொழிலினைக் கொள்ளுதி என்றேன்
நன்றெனக் கூறியோர் நாழிகை யிருந்தான்;
'செல்வேன்' என்றான்; சினத்தொடு நானும்
பழங்கதை யெழுதிய பகுதியொன் றினையவன்
கையினிற் கொடுத்துக் கவினுற இதனை
எழுதுக என்றேன்; இணக்குவான் போன்றதைக்
கையிலே கொண்டு கணப்பொழு திருந்தான்;
'செல்வேன்' என்றான். சினந்தீ யாகினன்
''ஏதடா, சொன்ன சொல் அழித்துரைக்கின்றாய்;

பித்தனென் றுன்னை உலகினர் சொல்வது
பிழையில்லை போலும்'' என்றேன் அதற்கு,
''நாளைவந் திவ்வினை நடத்துவேன்'' என்றான்.
''இத்தொழி லிங்கே இப்பொழு தெடுத்துச்
செய்கின் றனையா? செய்குவ தில்லையா?
ஒருரை சொல்'' என் றுறுமினேன் கண்ணனும்.

பொருள்: நல்லது எழுதிக் கொடுக்கிறேன் என்று கூறி ஒரு நாழிகை யிருந்தான். பின்னர் செல்வேன் என்றான். கோபமுற்ற நான் பழங்கதை எழுதிய ஒரு பகுதியை அவனிடம் கொடுத்து இதனை அழகாக எழுது என்றேன். அதனைச் செய்வோன் போல் பெற்றுக்கொண்டு ஒரு நொடிப் பொழுது இருந்தான். பின்னர் மீண்டும் செல்வேன் என்றான். எனக்கு சினம் தீயாயிற்று. என்னடா சொன்ன சொல் மறுக்கின்றாய். பித்தன் என்று உன்னை உலகோர் சொல்வது சரிதான் என்றேன். அதற்கு நாளைக்கு வந்து இதனை செய்து தருவேன் என்றான். இதனை இப்பொழுது செய்கிறாயா இல்லையா என்று உறுமினேன்.

விளக்கம்: ஓரிடம் தன்னில் ஒரு வழி நிறுத்துவோம் ஆயின் நேருற்றிடுவான் என்று கருதி பிரதிபண்ணும் தொழிலைக் கொடுத்தேன். அவனால் ஓரிடம் தன்னில் ஒரு நாழிகை தானும் இருக்க முடியவில்லை. கவிதை எழுத மறுக்கின்றான். பழங்கதை எழுது என்றபொழுது இணங்குவான் போல் ஏற்றுக்கொண்டவன் ஓரிடம் தன்னில் ஒரு கணப்பொழுதும் இருக்க முடியாமல் செல்வேன் என்றான். வலிய நிறுத்துவோமாயின் தேரிட்டிடுவான் என்று எண்ணிய நான் வன்சொற்கள் கூறி உறுமினேன்.

''இல்லை'' யென் றொருசொல் இமைக்கு முன்
கூறினான்
வெடுக்கனச் சினத்தீ வெள்ளமாய்ப் பாய்ந்திடக்
கண்சிவந் திதழ்கள் துடித்திடக் கனன்றுநான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீச்சீ பேயே சிறிது போழ் தேனும்
இனியென் முகத்தின் எதிர் நின்றிடாதே;
என்றுமிவ் வுலகில் என்னிடத்தினி நீ
போந்திடல் வேண்டா போ போ போ என்று
இடியுறச் சொன்னேன். கண்ணனும் எழுந்து
செல்குவனாயினன், விழிநீர் சோர்ந்திட
மகனே போகுதி வாழ்க நீ; நின்னைத்
தேவர் காத்திடுக! நின்றனைச் செம்மை
செய்திடக் கருதி ஏதேதோ செய்தேன்.
தோற்றுவிட்டேனடா சூழ்ச்சிகள் அறிந்தேன்
மதித்தினி வாராய் செல்லுதி வாழி நீ
எனத்துயர் நீக்கி அமைதியோ டிசைத்தேன்,

பொருள்: என் உறுமலுக்கு அச்சம் இன்றி தயக்கமும் இன்றி இல்லை என்று சொன்னான். அஞ்சுவான் என்று எண்ணிய என்னால் இதனைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. சினத்தீ வெள்ளமாய்ப் பெருகிற்று என் கண்கள் சிவந்தன. இதழ்கள் துடித்தன. கோபத்தால் சீச் சீச் பேயே கொஞ்ச நேரமேனும் என் முகத்தின் எதிர் நிற்காதே. என்னிடம் நீ வராதே. எழுந்து போ! போ என்று இடிபடச் சொன்னேன். அவனும் எழுந்து செல்லத்தொடங்கினான். என் கோபம் எங்கு சென்றதோ என் கண்கள் குளமாயின. மகனே போ நீ வாழ்க! நின்னை காக்க நினைத்தேன் முடியவில்லை. நின்னைதேவர் காத்திடுக, உன்னைத் திருத்தலாம் என்று கருதி ஏதேதோ செய்தேன், நான் தோற்று விட்டேனடா. இதில் உள்ள சூழ்ச்சிகளை விளங்கிக்கொண்டேன், மீண்டும் நீ வரல் வேண்டாம் நீ சென்று வருக என்று சொல்லி துயரகற்றி அமைதியோடு இருந்தேன்.

விளக்கம்: அச்சப்படுவான் திருந்தி நடப்பான் என்று கருதிய நான் திடுக்கிட, இல்லை என்றான்; அச்சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் சினத்தைக் வெள்ளமாக்கிற்று கோபத்தின் மெய்ப்பாடுகள் எல்லாம் என்னிடம் தோன்றின. வெறுப் புற்ற நான் இவனைத் திருத்தவே முடியாது என்று கருதி இழித்துரைத்து வெளியே போகுமாறு இடியுறச் சொல் லித் துரத்தினேன். எனது கோபத்துக்குக் காரணம் என்ன? என் முயற்சியில் ஏற்பட்ட தோல்வி. அம்முயற்சிக்கு கார ணம் என்ன? அவனிடம் வைத்த அன்பு, அன்பு கோப மாக வெளிவந்து அதுவே கணப்பொழுதில் அழுகையாக மாறிற்று. போ போ என்றேன் போவான் என்ற கருத் தினால் அல்ல, அவன் எழுந்து செல்குவன் ஆயினன், இதனைத் தாங்க முடியாது அழுதேன். சினத் தீ எங்கு சென்றதோ தெரியவில்லை. சீச் சீச் எழுந்து போ என்ற வாய், மகனே வாழ்க நீ என்றது. என்செயல் என்று கருதினேன். இந்த ஆணவம் ஒழிந்தது உன்னைத் திருத்துவது என் கடமை என்று மமகாரம் கொண் டேன். அந்த மமகாரம் இன்று ஒழிந்தது. உன்னைத் தேவர் காத்திடுக; என் தோல்வியை ஒப்புக்கொள்கி றேன். மகனே தோற்றுவிட்டேனடா. என் முயற்சி யின் தோல்விக்கு காரணம் என்ன என்பதை அறிந்து கொண்டேன். சூழ்ச்சிகள் அறிந்தேன்; மாபெரும் முயற்சி மேற்கொண்டேன். மன அமைதியை இழந் தேன். தோல்வியின் பின் மன அமைதி கொள்கின்றேன்.

சென்றனன் கண்ணன் திரும்பியோர் கணத்தே
எங்கிருந்தோ நல்லெழுதுகோல் கொணர்ந்தான்
காட்டிய பகுதியைக் கவினுற வரைந்தான்.
ஐயனே நின்வழி யனைத்தையுங் கொள்ளுவேன்
தொழில் பல புரிவேன். துன்பமிங் கென்றும்
இனி நினக் கென்னால் எய்திடா தெனப்பல
நல்ல சொல்லுரைத்து நகைத்தனன் மறைந்தான்
மறைந்ததோர் கண்ணன் மறுகணத் தென்றன்
நெஞ்சிலே தோன்றி நிகழ்த்துவா னயினன்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : என்னை விட்டுச் சென்ற கண்ணன் ஒரு நொடியில் திரும்பி வந்தான். எங்கிருந்தோ நல்ல எழுது கோல் கொண்டு வந்தான். நான் எழுதுமாறு காட்டிய பகுதியை அழகாக. எழுதினான். ஐயனே நின் வழி நடப் பேன். நின்ஏவல் புரிவேன். இனி எத்துன்பமும் என்றால் உனக்கு எய்திடாது. என்று பல நல்லுரைகள் வழங்கி நகைத்தான். மறைந்தான். மறைந்த கண்ணன் மறுநொடியில் தோன்றி பின் வருமாறு உரைத்தனன்.

விளக்கம்: எதனைச் செய் செய் என நயந்து கூறியும் செய்ய மறுத்தானோ. அதனைச் செய்யவும் வேண்டாம். என் முகத்தின் எதிர்ந்திடவும் வேண்டாம். போ, போ என போக்கி, என் தோல்வியையும் ஒப்புக்கொண்ட பின் நான் வலிந்தும் நலிந்தும் செய்விக்க முடியாத செயலை அவனாகவே ஒரு கணத்தில் வந்து எங்கிருந்தோ நல் எழுதுகோல் கொணர்ந்து கவினுற வரைந்தான். வழிப் படுத்த முயன்றபோது எதிர் செய்யும் மனைவிபோல எதிர்த்தவன் என் தோல்வியை ஏற்றபின் ஐயனே! நின் வழியனைத்தும் கொள்ளுவேன் என்றான். தொழில் பல புரிவேன் என்றான். என்றால் துன்பம் எய்திடாதென்றான். அவன் செயல் என் அறியாமையை நீக்கிற்று.

" மகனே ஒன்றை யாக்குதல் மாற்றுதல்
அழித்திட லெல்லாம் நினசெய லன்று காண்
தோற்றேன் எனநீ உரைத்திடும் பொழுதிலே
வென்றாய், உலகினில் வேண்டிய தொழிலெலாம்
ஆசையும் தாபமும் அகற்றியே புரிந்து
வாழ்கநீ என்றான் வாழ்க மற் றவனே !

தாபம் — துன்பம்

பொருள்; மகனே, ஒன்றை ஆக்குதல் அதனை மற் றொன்றாக மாற்றுதல் அதனை முற்றாக அழித்தல் எல் லாம் நின் செயலன்று. தோற்றுவிட்டேனடா என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்ன போதே, வென்று விட்டாய். உலகினில் விரும்பிய தொழில்களெல்லாவற்றையும் ஆசையும் தாபமும் நீக்கிப் புரிந்து வாழ்க என்று கூறினேன். இங்ஙனம் கூறிய அவன் வாழ்க.

விளக்கம்: ஆக்கல், மாற்றுதல், அழித்திடல் எல்லாம் என் செயல் என்று எண்ணியிருந்தேன். இதனாலே சீடனைத் திருத்த முயன்றேன். திருத்த முனைந்தது தவறன்று. ஆசையும் தாபமும் கொண்டு திருத்த முனைந்தது தவறு. அதனாலேயே அகந்தையும் மமதையும் எழுந்தன. சினத்தீ வெள்ளமாய்ப் பெருகிற்று. சினத்தின் மெய்ப்பாடுகள் தோன்றின. பாவச் சொல்லும் செயலும் செயற்பட்டன தோற்றுவிட்டேனடா. சூழ்ச்சிகள் அறிந்தேன் என்னும்போது அகந்தையும் மமதையும் நீங்கிய நிலை தெளபடுகின்றது. அகந்தையின் தோல்வியே மமதையின் தோல்வியே வெற்றி. எனவே வேண்டிய தொழிலெல்லாம் புரிக. செயலற்ற நிலை பாப நிலையே. தொழில் புரிக; ஆசையும் தாபமும் அகற்றிப் புரிக. பற்றற்ற பணி என்னும் கீதையின் கருத்தே சொல்லப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கண்ணன் – எனது சற்குரு

புன்னாக வராளி — திஸ்ரஜாதி — ஏகதாளம்
ரசங்கள் — அற்புதம், பக்தி

சாத்திரங் கள் பல தேடினேன் — அங்கு
சங்கை யில் லாதன சங்கையாம் — பழங்
கோத்திரங்கள் சொல்லு மூடர்தம் — பொய்மைக்
கூடையில் உண்மை கிடைக்குமோ?—நெஞ்சில்
மாத்திரம் எந்த வகையிலும் — சக
மாயம் உணர்ந்திடல் வேண்டுமே — என்னும்
ஆத்திரம் நின்ற திதனிடை — நித்தம்
ஆயிரந் தொல்லைகள் சூழ்ந்தன.

பொருள் :- சாத்திரங்கள் பல்வற்றைத் தேடிக் கற்றேன். அங்கு பெருமையற்ற பல செய்திகள் பெருமையுற்றனவாகப் பேசப்பட்டுள்ளன. பழைய குலம் கோத்திரம் முதலியவற்றைப் புகழ்ந்து சொல்லும் மூடர்கள் இயற்றிய பொய்மைகளே நிறைந்துள்ள பொய்க் கூட்டத்தில் உண்மைச் செய்திகள் கிடைக்குமோ? இந்நிலையில் என் உள்ளத்தில் எப்படியாவது இவ்வுலகத்தின் உண்மை நிலையை உணர்ந்திடல் வேண்டுமென்னும் ஆத்திர உணர்ச்சி குன்றாது நின்றது. ஆனால் அதனை அடைவதற்கு ஆயிரக்கணக்கான தொல்லைகள் என்னைச் சூழ்ந்து வருத்தின.

விளக்கம் :- உண்மை காணும் ஆவலால் சாத்திரங்களைத் தேறிக் கற்றேன், அங்கு உண்மைக்குப் பதிலாக சங்கையற்றன வெல்லாம் சங்கையுள்ளனவாகப் பேசப்பட்டன. அவை சாத்திரங்களல்ல. அவை பொய்மைக் கூடைகள். உலக வாழ்வின் உண்மைகளே — சகமாயம் எனக் கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு முழுதிலுஞ் சுற்றினான் — பல
நாட்கள் அலைந்திடும் போதினில் — நிறைந்
தோடும் யமுனைக் கரையிலே — தடி
ஊன்றிச் சென்றோரோர் கிழவனார் — ஒளி
கூடுமுகமும், தெளிவுதான் — குடி
கொண்ட விழியும், சடைகளும் — வெள்ளைத்
தாடியும் கண்டு வணங்கியே — பல
சங்கதி பேசி வருகையில்,

பொருள் :- சகமாயத்தை அறிந்துகொள்ள நான் நாடெல்லாம் சுற்றித்திரிந்தேன். அப்போது நீர் நிறைந்தோடும் யமுனைக் கரையிலே கையில் தடியூன்றியபடி ஒளிவிளங்கும் முகமும் தெளிவுற்ற கண்களும் சடைகளும் வெண்தாடியும் உடைய ஒரு கிழவனாரைக் கண்டு வணங்கினேன். அவருடன் பல சங்கதிகள் பேசினேன்.

என்னுளத் தாசை யறிந்தவர் — மிக
இன்புற் றுரைத்திட லாயினர் — "தம்பி,
நின்னுளத் திற்குத் தகுந்தவன், — சுடர்
நித்திய மோனத் திருப்பவன் — உயர்
மன்னர் குலத்தில் பிறந்தவன், — வட
மாமதுரைப் பதி யாள்கின்றான் — கண்ணன்
தன்னைச் சரணென்று போவையேல் — அவன்
சத்தியங் கூறுவன் என்றனர்.

பொருள் :- என்னுள்ளத்தில் இருந்த சகமாயையைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்னும் ஆசையை யறிந்த அம் முதியவர் மிக மகிழ்ந்து பின்வருமாறு கூறினார். உள்ளத்தாசையை நிறைவேற்றத் தகுந்தவனும் நிலைத்த மௌனத்தில் வீற்றிருப்பவனும் மன்னர் குலத்தில் பிறந்தவனும் வடமாமதுரையை யாள்பவனும் ஆகிய கண்ணனே ஆவான். அவனே அடைக்கல மென்று அவனிடம் போவாயானால் அவன் உண்மையிது வெனக் கூறுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் :- மோனமே ஞானவரம்பு ஆதலால் நித்திய மோனம் இறைவனின் இயல்பாகக் கூறப்பட்டது. உனது வினவிற்கு விடைகூற வல்லவன் ஞானவரம்பினை ஞகிய மோனநிலையில் உள்ளவனே. அவனே மன்னர் குலத்தில் பிறந்து வடமதுரை யாள்கிருன் யாவரும் கண்ணுற் காண.

மாமது ரைப் பதி சென்று நான் - அங்கு
வாழ்கின்ற கண்ணனைப் போற்றியே — என்தன்
நாமமும் ஊரும் கருத்துமே — சொல்லி
நன்மை தருகென வேண்டினன்; — அவன்
காமனைப் போன்ற வடிவமும் — இளங்
காளையர் நட்பும் பழக்கமும் — கெட்ட
பூமியைக் காக்குந் தொழிலே — எந்தப்
போதும் செலுத்திடுஞ் சிந்தையும்.

பொருள் :- வடமாமதுரைக்குச் சென்று கண்ணனைக் கண்டு வணங்கிப் போற்றி, என் பெயர், என் ஊர், நான் சென்ற நோக்கம் எல்லாவற்றையும் சொல்லி என் ஐயத்தைத் தீர்க்க வேண்டினேன். அவனது காமனைப் போன்ற அழகும் இளைய மகளிரோடு நட்புக் கொண்டு பழகுவதும் புவிகாக்கும் கீழான தொழிலிலேயே எந்நேரமும் தன்னை ஈடுபடுத்தியிருப்பதும்.

விளக்கம் :- கண்ணன் தோற்றம் மோனத்திருக்கும் ஞானியைப் போன்று இல்லை. தோற்றந்தான் இல்லையென்ருலும் அவன் பழகுவதோ இளங்காளையருடன், இங்கு காளையர் என்றது காளைப்பருவத்துக் கன்னியரை. உள்ளத்தில் ஞானமில்லாவிட்டாலும் தோற்றத்தில் ஞானி வேடம் போட்டு வெளிப்படையாகப் பெரியோரிடம் உறவு கொண்டுள்ளதாகக் காட்டி நடிக்கவாவது தெரிய வேண்டாமா? தோற்றமும் பழக்கமும் இவையென்ருல். ஞான நூல்களைக் கையிலே வைத்திருந்து அவற்றைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பதுபோல் பாசாங்காவது செய்யவேண்டாமா? தன் பொழுதெல்லாம் ஞான நூல்களைக் கற்பதிலேயே செல வழிக்கின்ருன் என்று மற்றவரை நினைக்கச் செய்யலாமே. ஆனல் கண்ணனே எப்போதும் அரசியலிலேயே தன் கவனத்தைச் செலுத்துகின்ருன். எனவே இவன் எப்படி ஒரு ஞானியாக இருக்க முடியும் மேலும்.

ஆடலும் பாடலும் கண்டுநான் — 'முன்னர்
 ஆற்றங் கரையினில் கண்டதோர் — முனி
வேடந் தரித்த கிழவனைக் — கொல்ல
 வேண்டு' மென் றுள்ளத்தில் எண்ணினேன்
 — 'சிறு
நாடு புரந்திடு மன்னவன் — கண்ணன்
 நாளுங் கவலையில் மூழ்கிறேன்; — தவப்
பாடு' பட்டோர்க்கும் விளங்கிடா — உண்மை
 பார்த்திவன் எங்ஙனம் கூறுவான்?"

பொருள் :- எந்நேரமும் பாட்டும் கூத்தும்தான்; இவற்றையெல்லாம் கண்ட நான் யமுனை ஆற்றங்கரை யிலே முனிவன் வேடத்தில் இருந்த கிழவனைக் கொல்ல வேண்டுமென மனத்தில் எண்ணிக் கொண்டேன். இந்தச் சிறிய நாட்டை ஆளும் கண்ணன் எந்நேரமும் உலகக் கவலைகளிலேயே மூழ்கியிருப்பவன். கடுந்தவம் செய் தோர்க்கும் விளங்காத உண்மைகளை அறிந்து இவன் எங் ஙனம் விளக்குவான்.

விளக்கம் :- இவனது களியாட்டங்களைக் கண்டபோது, உண்மை ஞானவாமென்னும் ஆவலோடுவந்த எனக்கு ஏமாற்றமாயிருந்தது. அதனுல் ஆத்திரம் மேலிட்டது. என்னை இங்கு செல்ல வழிகாட்டிய அந்தக் கிழவன் மேல் ஆத்திரம் சென்றது: அவனைக் கொல்லவேண்டும் போல் இருந்தது. ஞானக் கவலையில்லாதவன், ஞானச் சூழல்தானும் இல்லாத இவனுக்கு ஞானம் எங்ஙனம்வரும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கருதி யிருந்திட்டேன்; — பின்னர்
என்னைத் தனியிடங் கொண்டுபோய் — "நினை
நன்று மருவுக! மைந்தனே! — பர
ஞான முரைத்திடக் கேட்பைநீ; — நெஞ்சில்
ஒன்றுங் கவலையி லாமலே — சிந்தை
ஊன்ற நிறுத்திக் களிப்புற்றே — தன்னை
வென்று மறந்திடும் போழ்தினில் — அங்கு
விண்ணை யளக்கும் அறிவு தான்!

பொருள் :- என்று எண்ணினேன். கண்ணன் என்னைத் தனியிடத்துக்கு அழைத்துச் சென்று, உன்னை நீயே உணர்ந்துகொள்! மகனே, மேலான ஞானம் இதுவென உரைப்பேன் கேட்பாயாக. நெஞ்சில் உள்ள கவலைகளை யெல்லாம் நீக்கிவிட்டு மனம் சிதறாமல் ஒருமைப்படுத்தி உண்டாகும் ஆனந்தக் களிப்பில், தான் என்பது தோற்று நிற்கும் வேளையில் விண்ணையும் அளக்கக்கூடிய அறிவு— ஞானம் தோன்றும்.

விளக்கம் :- "தன்னையுணர்வதே தத்துவம்". நான் ஆர்' என்பதே ஆராய்ச்சி. "தன்னை யறிந்து இன்பமுறுதலே இன்பம்" தன்னையறிந்தவன் தலைவனை யறிந்தவன். இதனையே, நினை நன்று மருவுக" என்றார். புற நினைப்பை முற்றாக நீக்கி மனத்தைச் சூனியமாக்கி இறைவனிடம் உளத்தை ஒன்ற வைத்தலே சிந்தை ஊன்ற நிறுத்தலாகும். "தான்" என்னும் அகந்தை வெற்றி கொள்ளப்பட்ட இடத்தில் ஞானம் தோன்றும். அது விண்ணையும் அளக்கும். அது எல்லையற்றது.

சந்திரன் சோதி யுடையதாம்; — அது
சத்திய நித்திய வஸ்துவாம்; — அதைச்
சிந்திக்கும் போதினில் வந்துதான் — நினைச்
சேர்ந்து தழுவி அருள் செயும் — அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரத் தாலிவ் வுல கெலாம் — வந்த
    மாயக் களிப் பெருங் கூத்து க்காண் இதைச்
சந் ததம் பொய்யென் றுரைத்திடும் — மடச்
    சாத்திரம் பொய் யென்று தள்ளடா!

பொருள் :- அது சந்திரன் போலும் குளிர் சோதி யுடையது. அது சத்தியமானது. நித்தியமானது. அதனை மனதில் சிந்தை செய்தால் அது உன்னைச் சேர்ந்து அருள் செய்யும். இவ்வுலகின் தோற்றம், நிலை, அழிவு ஒரு மாயப் பெருங் கூத்து. இக்கூத்தைச் செய்வது அவ் வருளே. இவ்வுண்மையைப் பொய் யென்று சொல்லும் சாத்திரத்தைப் பொய்யென்று தள்ளிவிடுக.

சத்தியம் — உண்மை, நித்தியம் — நிலைத்தது.

விளக்கம் :- விண்ணையளக்கும் அறிவாக நிற்கும் அறிவே தெய்வம். அது சத்திய நித்தியப் பொருள். அதுவே அருள் செய்யும். இவ்வுலக இயக்கம் அதன் கூத்து; இவ்வுண்மையினை உண்மை யெனக் கொள்க.

ஆதித் தனிப்பொரு ளாகுமோர் — கடல்
    ஆருங் குமிழி உயிர்களாம்; — அந்தச்
சோதி யறிவென்னும் ஞாயிறு — தன்னைச்
    சூழ்ந்த கதிர்கள் உயிர்களாம்; — இங்கு
மீதிப் பொருள்கள் எவையுமே — அதன்
    மேனியில் தோன்றிடும் வண்ணங்கள்-வண்ண
நீதி யறிந்தின்பம் எய் தியே — ஒரு
    நேர்மைத் தொழிலில் இயங்குவார்;

பொருள் :- தொடக்கம் அற்றதும் உயர்ந்ததுமாகிய இறைவன் என்னும் கடலில் தோன்றும் குமிழிகள் போன்றனவே உயிர்கள். இறைவன் என்னும் ஞானசூரியனைச் சூழ்ந்துள்ள கதிர்கள் போன்றனவே உயிர்கள். இறை வனும் உயிர்களும் தவிர்ந்த ஏனைய பொருள்கள் எல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் அப்பரம் பொருளின் மேனியில் தோன்றிடும் வண்ண பேதங்களாம். இவ்வியப்பினை உணர்ந்து ஆனந்தம் உற்றுத் தம்கடமையைச் செய்வார் ஞானியர்.

விளக்கம் :- சகமாயம் இதுதான். கடல் சூரியன் இரண்டும் இறைவனுக்கு உவமைகளாகின. குமிழிகளும் கதிர்களும் உயிர்களுக்கு உவமைகளாகின. ஏனைய சடப் பொருள்கள் எல்லாம் இறைமையின் வண்ணங்களாகக் கூறப்பட்டன. முப்பொருள் என்பது தோற்ற வேறுபாடே. உள்பொருள் ஒன்று என்பது கருத்து. கடல் வேறு குமிழி வேறன்று. ஞாயிறு வேறு அதன் கதிர் வேறன்று. ஒரு பொருளும் அதன் வண்ணங்களும் வெவ்வேறல்ல. எல்லாம் ஒன்றே. அத்துவைத தத்துவமே இங்கே கூறப்பட்டுள்ளது. எனவே நாம் தெய்வக்கடலின் குமிழிகள், தெய்வ ஞாயிற்றின் கதிர்கள். இந்த உண்மையை யறிந்தால் துன்பம்போம் என்றும் இன்பமே சூழும்.

சித்தத்தி லேசிவம் நாடுவார், — இங்கு
சேர்ந்து களித்துல காளுவார்; நல்ல
மத்த மதவெங் களிறுபோல் — நடை
வாய்ந்திறு மாந்து திரிகுவார்; இங்கு
நித்தம் நிகழ்வ தனைத்துமே — எந்தை
நீண்ட திருவரு ளால்வரும் — இன்பம்
சுத்த சுகந் தனி யாநந்தம்? — எனச்
சூழ்ந்து கவலைகள் தள்ளியே.

பொருள் :- தன்னுள்ளேயே இறைவனைக் காணும் தகுதியுடையவர். இங்கு மகிழ்ந்து உலகினை யாளுவர். மத்தகமும் மதமும் உடைய நல்ல யானையைப்போல இறுமாந்து திரிவர். இவ்வுலகில் நடைபெறுவனவெல்லாம் இறையருளால் நடைபெறுவதாகும். உலகியல் இன்பம் மோட்ச சுகம் ஒப்பற்ற பேரானந்தம் என்பவற்றை அனுபவித்துக் கவலைகளை நீக்கி வாழ்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் :- இறைவனை எங்கெல்லாமோ தேடுவோம்; "அவன் மனத்தகத்தான்" "தேடித் தேடொணாத் தேவனை என்உள்ளே தேடிக் கண்டு கொண்டேன்" என்றனர் ஞானியர். இதையே சித்தத்தில் சிவமநாடுதல் என்றார். அன்னோர் உலகில் அருளாட்சி புரிவர். அச்சமற்றுக் களிறுபோல் திரிவர். இன்பம் சுத்தசுகம், தனியானந்தம் இவையெல்லாம் அவரைச் சூழ்ந்துவரும்.

"சோதி அறிவில் விளங்கவும் — உயர்
சூழ்ச்சி மதியில் விளங்கவும் — அற
நீதி முறைவழு வாமலே — எந்த
நேரமும் பூமித் தொழில்செய்து — கலை
ஓதிப் பொருளியல் கண்டுதாம் — பிறர்
உற்றிடுந் தொல்லைகள் மாற்றியே — இன்பம்
மோதி விழிக்கும் விழியினார் — பெண்மை
மோகத்தில், செல்வத்தில், கீர்த்தியில்,

பொருள் :- அறிவின் சோதி விளங்கவும் உயர்வான சூழ்ச்சித்திறன் புத்தியில் விளங்கவும் அறநீதிமுறை வழுவாமல் எந்நேரமும் உலகவர்க்காய்த் தொழில் புரிந்து கலைகளைப் பயின்று பொருள் சேர்க்கும் பணிபுரிந்து, பிறர் கவலைகளை நீக்கி இன்ப உணர்வு மிக்குமோதி விழிக்கும் விழிகளையுடைய மகளிரது பெண்மை மோகத்திலும், பொருட் செல்வத்திலும், புகழிலும் திளைத்து.

விளக்கம் :- ஞானியரது அறிவின் சோதி தெளிவுடையது; அவரது புத்தி உயர்வான சூழ்ச்சித் திறன் மிக்கது. சாதாரண மக்களினது அறிவு சூழ்ச்சி இவற்றினின்று வேறுபட்டது. உலகவர்க்காய்த் தொழில் புரியும் அவர் அறநீதியில் இருந்து வழுவார். உலகியலிலிருந்து ஓதுங்காது கலைகளைக்கற்றும் பொருளியல் தெரிந்தும் நமக்கென்ன? அவர்விதி அதுஎன ஓதுங்காது பிறர்துயர் துடைத்தும் மகளிரோடு ஆடிக்களித்தும் செல்வத்தில் தோய்ந்தும் புகழில் திளைத்தும் வாழ்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுதல், பாடுதல், சித்திரம் — கவி
யாதி யினைய கலைகளில் — உள்ளம்
ஈடு பட் டென்றும் நடப்பவர் — பிறர்
ஈன நிலைகண்டு துள்ளுவார் — அவர்
நாடும் பொருள்கள் அனைத்தையும் — சில
நாளினில் எய்தப் பெறுகுவார் — அவர்
காடு புதரில் வளரினும் — தெய்வக்
காவனம் என்றதைப் போற்றலாம்.

பொருள் :- நடனம் இசை, ஓவியம், கவிதை ஆகிய கலைகளில் உள்ளம் ஈடுபட்டு வாழ்வர். பிறரது துன்ப நிலைகண்டு அதுதீர்க்கத் துடிப்பர். அவர் விரும்பிய பொருள்கள் அனைத்தையும் சில நாட்களில் அடையப் பெறுவர். அன்னோர் காடுகளில் புதர்களில் வாழ்ந்தாலும் அவர் வாழும் இடம் தெய்வ சந்நிதியாகப் போற்றப்படும்.

விளக்கம் :- ஞானியர், நடனம் முதலிய கலைகளில் ஈடுபடக்கூடாது என்ற கருத்தைப் பாரதியார் புறம் கணிக்கின்றார். உண்மை ஞானியர் இவற்றில் உள்ளம் ஈடுபட்டு வாழ்வர். கலைகளைச் சுவைக்கும் கனிந்த நெஞ்சத்து ஞானியர், பிறர் துயர் கண்டால் அது துடைக்கத் துடிப்பர். அவர் எங்கிருப்பினும் அவ்விடம் தெய்வச் சூழலாய் விளங்கும்.

ஞானியர் தம்மியல் கூறினேன் — அந்த
ஞானம் விரைவினில் எய்துவாய்'' — எனத்
தேனினினிய குரலிலே — கண்ணன்
செப்பவும் உண்மை நிலைகண்டேன் — பண்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈன மனிதக் கனவெலாம் — எங்ஙன்
ஏகி மறைந்தது கண்டிலேன்! — அறி
வான தனிச் சுடர் நான் கண்டேன்! — அதை
ஆட லுலகென நான் கண்டேன்!

பொருள் :- ஞானியரது இயல்புகள் இவை எனக்கூறினன். அவ்வியல்பினை நீயும் விரைவில் பெறுவாயாக' என்று தேனிலும் இனிய குரலிலே கண்ணன் செப்பினன். நான் உண்மையினை உணர்ந்து கொண்டேன். பண்டைக் காலத்தில் ஈனமனிதர்கள், கூறிய ஞானியர் இயல்புகளாக யான் நினைத்திருந்தவை யெல்லாம் எங்கோ சென்று மறைந்தன. அறிவாம் ஒரு பேரொளியை நான் தரிசித்தேன். அவ்வொளியே இவ்வுலகு என நான் உணர்ந்து கொண்டேன்.

விளக்கம் :- உண்மை ஞானியரது இயல்புகள் இவையேயாகும். உலக வாழ்வைப் புறக்கணிப்பது அல்ல. பண்டைக் காலத்தில் ஞானிகள் இயல்புகளாகக் கூறப்பட்டவற்றிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டதாகும். அது கனவாகப் போயிற்று. புதிய ஒளி பெற்றேன் என்பது கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கண்ணம்மா - என் குழந்தை

பராசக்தியைக் குழந்தையாகக் கண்டு சொல்லிய பாட்டு

1. சின்னஞ் சிறு கிளியே — கண்ணம்மா!
 செல்வக் களஞ்சியமே!
என்னைக் கலி தீர்த்தே — உலகில்
 ஏற்றம் புரிய வந்தாய்!

பொருள் : செல்வக்களஞ்சியம் — செல்வமெல்லாம் சேர்த்துப் பூட்டிவைத்திருக்கும் பொட்டகம். கலி — பேராசை, ஏற்றம் புரிதல் — உயர்வுபெற வைத்தல்.

விளக்கம் : குழந்தை ஒரு கிளி, சின்னஞ்சிறு கிளி மனிதன் அனுபவிக்கவேண்டிய எல்லாச் செல்வங்களுள்ளும் சிறந்த செல்வம் குழந்தைச் செல்வம். அதனிடம் எல்லாம் நிறைந்திருக்கிறது. நிறைத்துப் பூட்டப்பட்டுள்ள ஒரு களஞ்சிய அறை. அக்களஞ்சியத்தைத் திறக்கும் முறையறிந்து பயன்கொள்ளவேண்டும். செல்வத்தைத் துய்ப்பதற்கும் ஒரு பக்குவம்வேண்டுமல்லவா? இது செல்வமல்ல; செல்வக்களஞ்சியம் "தம் பொருள் என்ப தம்மக்கள்" என்பர் வள்ளுவர். உடலின்கலி, உள்ளத்தின்கலி எல்லாம் பிள்ளை பெற்று வளர்ப்பதினால் தீர்கின்றன. பிள்ளையின்மை சாதாரண குறையல்ல. அது கலி. அக்கலி தீர்க்கப் பிள்ளை ஒன்றினாலேயே முடியும். தன் மகன் சான்றோன் எனக் கேட்டு உயர்வடையும் பெற்றோர் ஒருபுறமிருக்க, மலடி என்ற பழிச்சொல் நீக்கி ஏற்றம் தந்ததே பெரிதாகும்.

2. பிள்ளைக் கனியமுதே — கண்ணம்மா
 பேசும் பொற் சித்திரமே!
அள்ளி யணைத்திடவே — என் முன்னே
 ஆடி வருந்தேனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: பிள்ளைக் கனி அமுதம் — இன்சுவைக் கனிச் சாறு கூட்டி ஆக்கப்பெற்ற அமுதமே பிள்ளை. பேசும் பொன் சித்திரம் — பொன் சிலை பேசாது. இது பேசும் பொன்சிலை.

விளக்கம்: குழந்தையின் உடலெல்லாம் இன்சுவைக் கனி; சித்திரம் வாய்திறந்து பேசுவதில்லை. பொற் சித்திரம்கூட வாய்திறந்து பேசாது. ஆ, இது வாய்திறந்து பேசும் பொற்சித்திரம். குழந்தைத் தேன், தெவிட்டாத தேன். அது விளையாடி வருகிறதேன். அதனை இரு கைகளாலும் அள்ளி அணைக்கும்போது அப்பப்பா! எத்தனை சுவை! என்னசுகம்! தெவிக்கின்றது!

3. ஓடி வருகையிலே — கண்ணம்மா!
உள்ளங் குளிரு தடீ!
ஆடித்திரிதல் கண்டால் — உன்னைப்போய்
ஆவி தழுவு தடீ!

பொருள்: ஆடித்திரிதல் — விளையாடித் திரிதல். ஆவி — உயிர்.

விளக்கம்: என்னைக் கண்டவுடன் மகிழ்ச்சியினால் என்னிடம் ஓடோடி வருவாள் கண்ணம்மா. என் உடம்பல்ல என் உள்ளமெல்லாம் குளிர்ந்து போகிறதே. அவள் விளையாடித் திரியும்போது அவள் விழுந்து விட்டாலோ, என்று என் ஆவி அவளைச்சென்று அணைத்துக்கொள்கிறது.

4. உச்சி தனை முகந்தால் — கருவம்
ஓங்கி வளரு தடீ!
மெச்சி யுனையூரார் — புகழ்ந்தால்
மேனி சிலிர்க்கு தடீ!

பொருள்: முகந்தால் — முத்தமிட்டால், கருவம் — கர்வம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் : கண்ணம்மாவின் உச்சியில் மோந்து முத்தமிட்டால், இத்தகைய அறிவும் அழகும் உடைய பிள்ளை என்னுடையதே எனக் கர்வம் ஓங்குகிறது. அவளின் சிறப்பை ஊரார் புகழக் கேட்டால் என் உடலெல்லாம் சிலிர்த்துப் போகிறது.

5. கன்னத்தில் முத்தமிட்டால் — உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடீ !
உன்னைத் தழுவிடிலோ — கண்ணம்மா !
உன் மத்த மாகுதடீ !

பொருள் : கள்வெறி — கள்ளுண்டால் உண்டாகும் வெறியுணர்ச்சி உன் மத்தம் — பயித்தியம்.

விளக்கம் : குழந்தையின் முத்தம் அறிவை மயக்குகிறது. கள்போல வெறி உண்டாக்குகிறது. அவளைத் தழுவினால் பயித்தியமே பிடித்துவிடுகிறது. முத்தம் அறிவை மயக்குகிறது. தழுவுதலோ அறிவை அளித்தே விடுகிறது. அறிவு மயங்கிய நிலையும் அறிவு அழிந்த நிலையும் இன்ப நிலைகளில் ஒன்று. அறிவு மயங்கிய இன்பத்துக்கே மாந்தர் கள்ளுண்டு களிப்பர். பயித்திய நிலையிலும் மனம் கவலையற்று இன்பத்திலேயே மூழ்கிக் கிடக்கிறது. அவ்வித இன்பத்தைக் குழந்தையை முத்தமிட்டும் தழுவியும் பெற்றோர் பெறுகின்றனர்.

6. சற்றுன் முகஞ் சிவந்தால் — மனது
சஞ்சல மாகு தடீ !
நெற்றி சுருங்கக் கண்டால் — எனக்கு
நெஞ்சம் பதைக்கு தடீ

பொருள்: சஞ்சலம் — துன்பம். நெற்றி சுருங்குதல் — சிறு துன்பம்.

விளக்கம் : என்ன காரணத்தாலேனும் கண்ணம்மாவின் முகம் சிவந்தால் என் நெஞ்சு பொறுக்குதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவோ, ஏதோ என்று நெஞ்சம் பதறுகிறது. அவளின் நெற்றி சுருங்கினால் அவள் சிணுங்கினால்கூட என் நெஞ்சு பதைத்துப்போகிறது. எத்தனை அன்பு அவளிடம் எனக்கு. இது எப்படி வந்தது.

7. உன் கண்ணில் நீர்வழிந்தால் — என்னெஞ்சில்
உதிரங் கொட்டுதடீ !
என் கண்ணிற் பாவையன்றோ? கண்ணம்மா!
என்னுயிர் நின்ன தன்றோ ?

பொருள் : உதிரம் — இரத்தம். கண்ணில் பாவை — கண்ணில் உள்ள பாவை.

விளக்கம் : கண்ணம்மாவின் கண்ணீர் என் நெஞ்சைப் பிளக்கிறது. இரத்தம் பீறிட்டுப் பாய்கிறது. அவள் துன்பத்தை நான் சகியேன். என் கண்ணின் கருமணியிற் பாவையைவிட அவள் மேலானவள். என்னுயிர் என்னதல்ல அவளது. அவள் கையிலேயே இருக்கிறது. அவளுக்கு ஏதும் வந்துவிட்டால், என்னுயிர் தங்காது பிரிந்துவிடும்.

8. சொல்லு மழலையிலே — கண்ணம்மா
துன்பங்கள் தீர்த்திடுவாய்;
முல்லைச் சிரிப்பாலே — எனது
மூர்க்கந் தவிர்த்திடுவாய்.

பொருள் : வெளிப்படை

விளக்கம் : பெற்றோருடைய துன்பங்கள் மிகப்பல. அவையெல்லாம் பிள்ளைகளின் மழலை மொழியாலே தீர்ந்து போகின்றன. பெற்றோரது மூர்க்கக் குணங்கள் நீங்கிக் பொறுமைக் குணம் வளர்ப்பவர் பிள்ளைகளே.

9. இன்பக் கதைக ளெல்லாம் — உன்னைப்போல்
ஏடுகள் சொல்வ துண்டோ ?
அன்பு தருவதிலே — உனைநேர்
ஆகுமோர் தெய்வ முண்டோ ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : நேர் ஆகும் — ஒப்பாகும்

விளக்கம் : கதைகள் படிப்பதில் கேட்பதில், மனிதர்க்கு இயற்கையாகவே விருப்பம் உண்டு. குழந்தைகளின் செயல்களெல்லாமே கதைகள்தாம். அவர்கள் மழலை மொழியும் கதைதான், இன்பக் கதைதான்; அன்பைத் தவிர வேறெதும் உணராதவர் குழந்தைகள். அவர் பெறுவதும் தருவதும் அன்பே.

10. மார்பில் அணிவதற்கே — உன்னைப்போல்
வைர மணிகளுண்டோ?
சீர்பெற்று வாழ்வதற்கே — உன்னைப்போல்
செல்வம் பிறிது முண்டோ?

பொருள் : வெளிப்படை.

விளக்கம் : மார்போடணைத்துக் கொண்டால் அதை விடச் சிறந்த அணி, பெற்றோருக்கு இருக்க முடியுமா? சீர்பெற்ற வாழ்வு ஏனைச் செல்வங்களால் வருமா குழந்தை இல்லாவிடில் - குழந்தையே எல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜயந்தசுரம்

9. கண்ணன் - என் விளையாட்டுப் பிள்ளை

ராகங்கள் — அற்புதம், சிருங்காரம்

1. தீராத விளையாட்டுப் பிள்ளை — கண்ணன்
தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை
(தீராத)

தின்னப் பழங்கொண்டு தருவான்; — பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்;
என்னப்பன் என்னையன் என்றால் — அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்
(தீராத)

ஐயன் — தலைவன்

விளக்கம் :- கண்ணக் குழந்தையின் விளையாட்டுக் குறும்புகள் விவரிக்கப்படுகின்றன. உணர்வின் உச்சக் கட்டத்தில் நின்று சுவைக்கவேண்டியவை இப்பாடல்கள். பாடிப்பாடி இசையினால் அள்ளிச் சுவைக்கவேண்டியவை.

அவனுக்கு எல்லாமே விளையாட்டு. நாம் கேளாதிருக்கக் கனிகள் தருவான். ஆசையோடு அவற்றை உண்ணும் போது பைக் கென்று தட்டிப்பறித்து விடுவான். கேட்டு வாங்கும் பழக்கமேயில்லை. பறித்தவன் தான் உண்ணலாமே. அதுதான் இல்லை; அதனை எச்சிலாக்கிவிட்டுத் தருவான். இச்செயலை என்னவென்று சொல்லுவது. தீய செயலாகப் படும் இது. அவனுக்கு விளையாட்டுச் செயல். அவன் ஒரு தீராத விளையாட்டுப்பிள்ளை.

2. தேனொத்த பண்டங்கள் கொண்டு — என்ன
செய்தாலும் எட்டாத உயரத்தில் வைப்பான்;
மானொத்த பெண்ணடி என்பான் — சற்று
மனமகிழும் நேரத்திலே கிள்ளி விடுவான்
(தீராத)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் :- இனிய உணவுப் பண்டங்களைக் கொண்டு வருவான். எனக்குத்தான் தரப்போகிறான் என்று நான் காத்திருப்பேன். ஆனால் அவன் அவற்றை எனக்கு எட்டாத உயரத்தில் எடுக்கமுடியாதபடி வைத்துவிடுவான். என் அழகை வருணிப்பான். அது கசக்குமா என்ன? மனம் மகிழ்ந்திருப்பேன். அப்பா! கிள்ளி விடுவான். எப்படி நோகும் தெரியுமா? அவனுக்கென்ன? அவன் ஒரு தீராத விளையாட்டுப்பிள்ளை.

3. அழகுள்ள மலர் கொண்டு வந்தே — என்னை
அழ அழச் செய்துபின், 'கண்ணை மூடிக்கொள்;
குழலிலே சூட்டுவேன்' என்பான் — என்னைக்
குருடாக்கி மலரினைத் தோழிக்கு வைப்பான்
(தீராத)

விளக்கம் :- மிக்க அழகுள்ள மலர்களையெல்லாம் எங்கிருந்தோ கொண்டு வருவான். எனக்குத்தான் தரப்போகிறான் என்று ஆவலோடு அதனைக் கேட்பேன். தருவதாகச் சொல்லிச் சொல்லி ஏமாற்றுவான், என்னை அழவே வைத்துவிடுவான். நான் அழுவதில் அவனுக்கு அத்தனை மகிழ்ச்சி! பின்பு கண்களை மூடிக்கொள் கூந்தலில் சூட்டுவேன் என்பான், நானும் மகிழ்ச்சியோடு கண்ணை மூடிக்கொண்டு தயாராக நிற்பேன். ஆனால் அவனோ என்னைக் குருடாக்கி விட்டு மலர்களைத் தோழிக்குச் சூட்டி விடுவான். அவனுக்கென்ன? அவன் ஒரு தீராத விளையாட்டுப் பிள்ளை.

4. பின்னலைப் பின்னின் றிழுப்பான்; — தலை
பின்னே திரும்புமுன் னேசென்று மறைவான்;
வன்னப் புதுச்சேலை தனிலே — புழுதி
வாரிச் சொரிந்தே வருத்திக் குலைப்பான்.
(தீராத)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் :- அழகாக வாரிவிட்ட பின்னலைப் பின்புறமாக நின்று இழுப்பான், எப்படி நோகும் தெரியுமா? யாருக்குத் தெரியும் அவன் பின்னே நின்று இழுப்பான் என்று; யார்? அது இழுத்ததென்று திரும்புமுன்னே, ஆளைக்காண முடியாது. எப்படியோ ஒளித்து விடுவான்; அவனுக்கென்ன? அவன் ஒரு தீராத விளையாட்டுப் பிள்ளை.

5. புல்லாங் குழல்கொண்டு வருவான் — அமுது
  பொங்கித் ததும்புநற் கீதம் படிப்பான்;
 கள்ளால் மயங்குவது போலே — அதைக்
  கண்மூடி வாய்திறந் தேகேட் டிருப்போம்.
(தீராத)

6. அங்காந் திருக்கும்வாய் தனிலே — கண்ணன்
  ஆறேழு கட்டெறும் பைப்போட்டு விடுவான்;
 எங்காகிலும் பார்த்த துண்டோ — கண்ணன்
  எங்களைச் செய்கின்ற வேடிக்கை யொன்றோ?
(தீராத)

விளக்கம் :- அமுதமே பொங்கித் ததும்புகின்றதோ என்னும்படி புல்லாங் குழலின் கானம் இசைப்பான். அவன் இசை, கள் வெறிபோல எம்மை மயக்கும். அம்மயக்கில் கண்கள் செருகிக்கொள்ளும். வாயினாலும் பருகுவதுபோல வாய் திறந்திருக்கும். (அங்காந்து ... திறந்து)

வாய்திறந்து கண்மூடி இசையில் மூழ்கியிருக்கும்போது ஆறேழு கட்டெறும்பை வாயினுள் போட்டு விடுவான். இப்படிச் செய்கிறவனை எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா? அவன் செய்கிற வேடிக்கை ஒன்றா இரண்டா? அவனுக்கென்ன? அவன் ஒரு தீராத விளையாட்டுப் பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. விளையாட வாவென் றழைப்பான் .... வீட்டில்
வேலையென் றாலதைக் கேளா திழுப்பான்,
இளையாரோ டாடிக் குதிப்பான்; எம்மை
இடையிற் பிரிந்துபோய் வீட்டிலே சொல்வான்
(தீராத)

விளக்கம் :- இப்படித் தொந்தரவு செய்கிறானே என்று நான் ஒதுங்கிக்கொண்டால், தானாக வலிய வந்து விளையாட வா என்று அழைப்பான். வீட்டில் வேலையிருக்கிறது என்று சொன்னாலும் கேளாது கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய்விடுவான். எல்லாரோடும் சேர்ந்து கூட்டமாக விளையாடுவான். பிறகு தான்மட்டும் நல்ல பிள்ளை மாதிரி எங்களை விட்டுவிட்டு வீட்டுக்குப்போய், நாங்கள் எல்லாம் விளையாடிக்கொண்டிருப்பதாகச் சொல்வான். எங்கள் பெற்றோர்கள் எங்களைக் கோபிக்கட்டும் என்பது அவன் எண்ணம். அவனுக்கென்ன? அவன் ஒரு தீராத விளையாட்டுப் பிள்ளை.

8. அம்மைக்கு நல்லவன், கண்டீர்! ... மூளி
அத்தைக்கு நல்லவன், தந்தைக்கு மஃதே,
எம்மைத் துயர் செய்யும் பெரியோர் — வீட்டில்
யாவர்க்கும் நல்லவன் போல் நடப்பான்.
(தீராத)

9. கோளுக்கு மிகவுஞ் சமர்த்தன்; — பொய்மை
சூத்திரம் பழி சொலக் கூசாச் சழக்கன்;
ஆளுக் கிசைந்தபடி பேசித் — தெருவில்
அத்தனை பெண்களையும் ஆகா தடிப்பான்.
(தீராத)

விளக்கம் :- இவ்வளவும் செய்துவிட்டுத் தான் மாத்திரம் எல்லோருக்கும் நல்லவன்போல நடப்பான். என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவுக்கும் நல்லவன், விதவையாயிருக்கிறளே என் மாமி, அவளுக்கும் நல்லவன். என் தந்தைக்கும் நல்லவன். கோள் சொல்வதிலே அவனுக்கு நிகர் அவன்தான், குத்திரம் — வஞ்சகம். பொய், வஞ்சகம், பழி சொல்வதிலே கொஞ்சமும் கூச்சம் கிடையாது; ஆளுக்குத் தக்க மாதிரிப் பேசி எங்கள் பக்கத்தில் வாழும் அத்தனை பெண்களையும் ஏமாற்றி விடுவான். அவனுக்கென்ன? அவன் ஒரு நிராத விளையாட்டுப் பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. கண்ணன் - என் காதலன் 1

சிருங்காரரசம்

1. தூண்டிற் புழுவினைப்போல் - வெளியே
   சுடர் விளக்கினைப் போல்
   நீண்ட பொழுதாக – எனது
   நெஞ்சம் துடித்த தடீ
   கூண்டுக் கிளியினைப் போல் தனிமை
   கொண்டு மிகவும் நொந்தேன்
   வேண்டும் பொருளை யெல்லாம் - மனது
   வெறுத்து விட்ட தடீ!

பொருள்: தூண்டிற் புழு - மீன்பிடிப்பதற்காக இரையாகத் தூண்டிலில் கோக்கப்பட்ட புழு.

வெளியே சுடர் விளக்கு - மறைப்பற்ற வெளியிடத்தில் ஏற்றி வைக்கப்பட்டுக் காற்றால் அலைக்கப்படும் விளக்கின் சுடர்.

விளக்கம்: தூண்டிலில் இரையாக இடப்பட்ட புழுவின் உடலூடே ஊசிபாய்ந்திருக்கும். அப்புழுவின் துடிப்பு எத்தகையது? அதுபோன்றது இத்தலைவியின் மனத்துடிப்பு. காற்றால் அலைக்கப்படும் வெளியிடத்து ஏற்றிய விளக்கின் சுடர் மற்றொரு உவமை. அதன் படபடப்பு எத்தகையது அத்தகையது இத்தலைவியின் படபடப்பு. எந்நேரம் சுடர் அணையுமோ தெரியாது. ஆம் இவளும் அவன் பிரிவால் இறந்து படினும்படும். தோழியரே, உங்கள் எல்லாரோடும் தான் நான் இருக்கின்றேன். ஆனால் கூண்டுக்கிளி போலச் சுதந்திரமற்றுத் தனிமையில் இருப்பது போலவே இருக்கிறது. அவரில்லாதபோது யாரிருந்தாலும் எனக்குத் தனிமையே. ஒரு காலத்தில் எதையெதையெல்லாம் மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக விரும்பினேனே அவைற்றையெல்லாம் என் மனம் வெறுக்கிறது. இன்று எனக்கு வேண்டும் பொருள் அவர்தானடி.

2. பாயின் மிசை நானும் – தனியே
படுத்திருக்கையிலே
தாயினைக் கண்டாலும் – சகியே!
சலிப்பு வந்ததடீ!
வாயினில் வந்த தெல்லாம் – சகியே!
வளர்த்துப் பேசிடுவீர்.
நோயினைப் போலஞ்சினேன் – சகியே!
நுங்கள் உறவையெல்லாம்.

பொருள்: வெளிப்படை

விளக்கம்: பெற்ற தாயை வெறுக்கமுடியாது. அவளைக் கண்டாலும், இன்றைய என் மனநிலையில் சலிப்புவருகிறது; பிரிவினால் வருந்தும் என்னருகேயிருந்து எதை எதையோ எல்லாம் வளர்த்து வளர்த்துப் பேசுகிறீர்கள்; நோய்க்கு நான் அஞ்சுவதுபோல உங்கள் உறவுக்கும் நான் அஞ்சுகின்றேன். ஒரு காலத்தில் இன்பமாயிருந்த அவர்கள் பேச்சும் உறவும இன்று நோய்போல வருந்துகின்றன தலைவியை.

3. உணவு செல்லவில்லை – சகியே!
உறக்கம் கொள்ளவில்லை
மணம் விரும்பவில்லை – சகியே!
மலர் பிடிக்கவில்லை
குண முறுதியில்லை – எதிலும்
குழப்பம் வந்ததடீ!
கணமும் உள்ளத்திலே – சுகமே
காணக் கிடைக்கவில்லை

பொருள்: மணம்–நறுமணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்: உண்ணுதல், உறங்குதலாகிய அத்தியாவசியத் தேவைகளைக்கூட அவள் விரும்பவில்லை. வரவர நோய் முற்றுகிறது. நறுமணப் பொருள்களையோ மலர்களையோ மனம் விரும்பவில்லை. மிக்ககாமத்தால் புலன்கள் ஒவ்வொன்றாகச் செயல் இழக்கின்றன. குண இயல்புகள் மாறுகின்றன. முன்னைப்போல இல்லை; பிடி தளர்கிறது. எல்லாவற்றிலும் ஒரே குழப்பமாக இருக்கிறது. ஒரு நொடிகூட மனத்தில் சுக உணர்வு இருப்பதில்லை. ஒரே வேதனை.

4. பாலுங் கசந்ததடீ! சகியே!
படுக்கை நொந்த தடீ!
கோலக் கிளி மொழியும் - செவியில்
குத்த லெடுத்த தடீ!
நாலு வயித்தியரும் - இனிமேல்
நம்புதற் கில்லை யென்றார்
பாலத்துச் சோசியனும் - கிரகம்
படுத்து மென்று விட்டான்.

பொருள்: நாலு வயித்தியர்:- இவள் நோயைக் காட்டிய நான்கு வைத்தியர். பாலத்துச் சோசியன் — பாலத்துக்குக் கிட்டக் குடியிருந்த சோதிடன். கிரகம் படுத்தும்—இவளுடைய கிரகநிலை சரியாக இல்லாத காரணத்தால், அவை இவளைத் துன்பப்படுத்தும்.

விளக்கம்: இனிய பாலும் கசக்குமளவுக்கு உடம்பில் பித்தம் ஏற்றம் கொண்டுள்ளது. கிளியின்மொழி. செவியைக்குடைகிறது. இது என்ன நோய் என்று தெரியாமல் ஒரு வயித்தியரிடமல்ல, பல வயித்தியரிடம் காட்டிய போது. இது கொடிய நோய், பிழைப்பது அரிது. பிழைக்க மாட்டாள், நம்ப முடியாது என்று கூறிவிட்டனர். பாரதியார் குடியிருந்த வீட்டிற்குச் சற்றுத் தொலைவில் ஒரு பாலம் கட்டப்பட்டிருந்தது. அதனருகில் குடியிருந்தவன் ஒரு சோதிடன். அவனைப் பாலத்தடிச் சோதிடன் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுவது வழக்கம். மருந்துக்குக் கட்டுப்படாதது நோவேனை சோதிடத்துக்குக் கட்டுப்படுமோ என்று சோதிடனிடம் கேட்டபோது அவனும் இவளது கிரகம் கூடாது. கஷ்டப்படுத்தும் என்று கூறிவிட்டான்.

5. கனவு கண்டதிலே ஒருநாள்
 கண்ணுக்குத் தோன்றாமல்
இனம் விளங்க வில்லை – எவனோ
 என்னகம் தொட்டு விட்டான்
வினவக் கண் விழித்தேன் – சகியே!
 மேனி மறைந்து விட்டான்
மனதில் மட்டிலுமே – புதிதோர்
 மகிழ்ச்சி கண்டதடீ!

பொருள்: அகம்—மனம், மேனி—உடம்பு.

விளக்கம் பிரிவுத்துயரால் வருந்தும்போது ஒரு நாள் சிறிது தூங்கினேன். அப்போது ஒரு கனவு கண்டேன். அக்கனவில் ஒருவன் வந்தான். வந்தவன் இன்னார் என்று இன்னும் விளங்கவில்லை. என் நெஞ்சைத் தொட்டுவிட்டான். நீங்கள் யார் என்று கேட்கலாமென நினைத்துக் கண் விழித்துப் பார்த்தேன். தோழியே! அவன் மறைந்து விட்டான். அந்தக் கனவு கண்டபின் முன்பு இருந்த கவலைகள் எல்லாம் போயின. புதிய மகிழ்ச்சி ஒன்று என் மனதில் குடிகொண்டுவிட்டது.

6. உச்சி குளிர்ந்ததடீ – சகியே!
 உடம்பு நேராச்சு
மச்சிலும் வீடுமெல்லாம் முன்னைப்போல்
 மணத்துக் கொத்ததடீ!
இச்சை பிறந்ததடீ – எதிலும்
 இன்பம் விளைந்ததடீ!
அச்சம் மொழிந்ததடீ சகியே!
 அழகு வந்ததடீ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: மச்சு — வீட்டின் மேல்மாடி.

விளக்கம்: இப்போது முன்னைய நோய்களெல்லாம் நீங்கின. முன்பு மனத்துக்கு ஒவ்வாதிருந்தவையெல்லாம் இப்போது மனத்துக்கு ஒத்தவை. வெறுப்பு நீங்கி எதிலும் விருப்பு வந்தது. துன்பமாயிருந்தவையெல்லாம் இன்பம் தருகின்றன. மனத்தில் இருந்த ஒருவித அச்சமும் அகன்றது. பிரிவாற் பிரிந்த அழகு மீண்டும் வந்தது. இவையெல்லாம் அவள் கண்ட கனவால் வந்தன. அந்த இன்பக் கனவில் வந்தவன் அவள் உள்ளத்தை மெல்லெனத் தொட்டான். அதனால் எல்லாத் துன்பமும் நீங்கின.

7. என்றும் பொழுதி லெல்லாம் — அவன்கை
இட்ட விடத்தி னிலே
தண்ணென் றிருந்த தடீ! — புதிதோர்
சாந்தி பிறந்ததடீ!
எண்ணி யெண்ணிப் பார்த்தேன் அவன் — தான்
யாரெனச் சிந்தை செய்தேன்
கண்ணன் திருவுருவம் — அங்ஙனே
கண்ணின் முன் நின்றதடீ!

பொருள்: கை இட்ட இடம் — கை பட்ட இடம்

விளக்கம்: அவன் எங்கு எங்கு எல்லாம் என்னைத் தொட்டான் என்று எண்ணி எண்ணிப் பார்க்கின்றேன்; அவன் கைப்பட்ட இடமெல்லாம் 'தண்' என்று குளிர்ச்சியாக இருக்கிறது. எல்லா இடங்களிலும் அவன் கைபட்டால் எல்லா இடங்களும் குளிர்ச்சியாயிருக்குமே. இதனால் முன்பில்லாத புதிய அமைதி பிறந்திருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று எண்ணி எண்ணிப் பார்க்கின்றேன். இங்ஙனம் செய்தவன் யாவன் என எண்ணி எண்ணிப் பார்க்கின்றேன் அவன் வேறுயாருமல்ல கண்ணன்தான். அவன் திருவுருவம் என் கண்முன்னே அப்படியே கொஞ்சமும் மாறுபடாமல் நின்றது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கண்ணன் - என் காதலன் 2

உறக்கமும் விழிப்பும்

நேரம் மிகுந்த இன்னும் நித்திரையின்றி — உங்கள்
　நினைப்புத் தெரியவில்லை. கூத்தடிக்கிறீர்
சோரன் உறங்கிவிழும் நள்ளிரவிலே — என்ன
　தூளிபடுகுதடி இவ்விடத்திலே ?
ஊரை யெழுப்பிவிட நிச்சயங் கொண்டீர் - அன்னை
　ஒருத்தி யுண்டென்பதையும் மறந்து விட்டீர்
சாரம் மிகுந்ததென்று வார்த்தை சொல்கிறீர்
— மிகச்
　சலிப்புத் தருகுதடி சகிப் பெண்களே !

பொருள் : தூளிபடுகுதடி -- புழுதிபறக்குதடி

விளக்கம் : நேரம் அதிகமாகிவிட்டது. சோரனும் உறக்கத்தால் வீழும் நள்ளிரவாகி விட்டது. இன்னமும் நித்திரையின்றிக் கும்மாளம் கொட்டுகின்றீர்களே, உங்கள் கூத்தால் உவ்விடம் தூளி பறக்கிறது" எனத் தலைவன் பிரிவால் வருந்தும் தலைவி தோழியரிடம் கூறுகின்றான். என்ன ஊரையே எழுப்ப முடிவு கட்டிவிட்டீர்களா ? நீங்கள் போடும் கும்மாளம் ஊரையே எழுப்பி விடும்போலிருக்கிறதே. அன்னை அறிந்தால் என்ன செய்வான் என்பது தெரியும்தானே. அவளை மறந்து விட்டீர்களா ? ஏதோ பெரிய விஷயம் சொல்லப் போவதாகச் சொல்லுகிறீர்கள். ஒரு சாரமும் இல்லை. எல்லாம் சக்கைதான். உங்கள் வார்த்தை எனக்கு சலிப்புத் தருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் பலதினங்கள் பொறுத்திருந்தேன்—இது
நாளுக்கு நாளதி கமாகி விட்டதே
கூனனொருவன் வந்திந் நாணியின் கையைக்
கொண்டை மலர்சிதற நின்றிழுத்ததும்
ஆனைமதம் பிடித்திவ் வஞ்சி யம்மையின்
அருகினி லோட இவள் மூர்ச்சை யுற்றதும்
பானையில் வெண்ணெயை முற்றும் தின்றுவிட்டதால்
பாங்கி யுரோகிணிக்கு நோவு கண்டதும்

பொருள்: இ+நாணி இந்த நாணமுடையவள்.
வஞ்சி அம்மை உரோகிணி என்பன பெண்பாற் பெயர்கள்

விளக்கம்: பெண்கள் கதையளக்கிறார்கள் அதனைக் கேட்டுச் சலிப்புற்ற தலைவி, நான் ஒரு நாளல்ல, பல நாட்கள் பொறுத்துவிட்டேன். இந்தக் கதையளப்புக் குறைந்த பாடாயில்லை. கூனன் ஒருவன் நாணம் மிக வுடைய இவள் பின்னலை இழுத்தானாம். அதனால் அவள் கொண்டை மலர் சிதறிற்றும். ஆனை ஒன்று மதம் பிடித்து இந்த வஞ்சி அம்மையின் அருகில் ஓடியதாம். அதனால் இவள் மயக்கம் அடைந்து விழுந்தாளாம், பானையில் இருந்த வெண்ணெய் முழுவதையும் யாரோ தின்று விட்டதால் தோழி ரோகிணிக்கு மிக வருத்தம் உண்டானதாம்.

பத்தினி யானையொரு பண்ணை வெளியில்
பத்துச்சிறுவர் வந்து முத்தமிட்டதும்
நித்தி மகளினுக்கோர் சோதிடர் வந்து
நாற்ப தரசர் தம்மை வாக்களித்தும்
கொத்துக் கனல் விழியக் கோவினிப் பெண்ணைக்
கொங்கத்து மூளிகள் கொக்கரித்ததும்
வித்தைப் பெயருடைய வீணியவளும்
மேற்குத்திசை மொழிகள் கற்று வந்ததும்

பொருள்: நந்திமகள்—நாத்தனார் மகள், நாத்தனார்—மாமா. கொத்து கனல் விழி—தீ, கொத்துக் கொத்தாக எரிவது போன்ற கண்கள். கொங்கத்து மூளி—கொங்கு தேசத்து விதவை. வீணி—பெண்பாற் பெயர்.

விளக்கம்: பத்தினிப் பெண் ஒருத்தியைத் வயல் வெளியிலே வைத்து பத்துப் பொடியன் முத்தமிட்டார்களாம், ஒரு சோதிடன் வந்து மாமா மகளைத் திருமணம் செய்ய நாற்பது மன்னர் நான், நீ என்று வாக்குக் கொடுத்தார்களாம். கோவினி இருக்கிறாளே, அவளுடைய கண்கள் ஒவ்வொன்றும் கனல் கொத்துத்தான். அவளைப் பார்த்து இந்தக் கொங்கத்து மூளி கோபித்தளாம். இந்த வீணி இருக்கிறாளே. அவள் பெயரைப் பார்த்தாயா? வீணியாம். புதுமையாயில்லையா? வேடிக்கைப் பெயர். வித்தைப் பெயர். அவளுக்குப் பல மேற்கு நாட்டு மொழிகள் தெரியும். எல்லாம் கற்றுக் கொண்டாளாம்.

எத்தனை பொய்களடி என்ன கதைகள்!
என்னை உறக்கமின்றி இன்னல் செய்கிறீர்
சத்தமிடுங் குழல்கள் வீணைக ளெல்லாம்
தாளங்க ளோடுகட்டி மூடிவைத் தங்கே
மெத்த வெளிச்சமின்றி ஒற்றை விளக்கை
மேற்குச் சுவரருகில் வைத்ததன் பின்னர்
நித்திரை கொள்ள எனைத் தனியில் விட்டே
நீங்க ளெல்லோரு முங்கள் வீடு செல்லுவீர்.

பொருள்: இன்னல்—துன்பம்

விளக்கம்: இப்படி, இப்படி எத்தனை பொய்கள்! எத்தனை கதைகள்! சொல்கிறீர்கள், என்னை நித்திரை கொள்ளவிடாது இடர் செய்கிறீர்கள். தயவு செய்து சத்தம் போடும் புல்லாங்குழல், வீணை தாளம் எல்லாவற்றையும் மூடி வையுங்கள். அந்த ஒற்றை விளக்கைக் குறைத்து மேற்குப் பக்கச் சுவரருகில் வைத்து, என்னைத் தனியாக நித்திரை கொள்ள விட்டுவிட்டு நீங்கள் எல்லாரும் உங்கள் வீட்டுக்குப் போங்கள். பெண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதும் இல்லாததுமாகிய பல கதைகளைப் பேசிக் கும்மாளம் கொட்டினர். தலைவிக்கு இந்தக் கதைகளில் எல்லாம் சுவையில்லை. அவள் பிரிவுத் துயராய வருந்துகிறாள். யாழ் இனிது. குழல் இனிது எல்லாம். அவளுக்கு வெறும் சத்தங்களாகவே இருக்கின்றன. அந்தச் சத்தத்தை மூடிவிடச் சொல்லிவிட்டாள். 'கூட்டத்தை அவள் விரும்பவில்லை. அவள் உள்ளம் தனிமையை நாடிற்று. மெத்த வெளிச்சமும் பிடிக்கவில்லை. எல்லாரையும் அவரவர் வீட்டுக்கு அனுப்பி விட்டாள்.

பாங்கியர் போனபின்பு தனியிருந்து சொல்லுதல்

கண்கள் உறங்க வொரு காரணமுண்டோ
　　கண்ணனை இன்றிரவு காண்பதன் முன்னே
பெண்களெல் லோருமவர் வீடுசென் றிட்டார்
　　பிரிய மிகுந்த கண்ணன் காத்திருக்கின்றான்
வெண்கல வாணிகரின் வீதி முனையில்
　　வேலிப் புறத்திலெனைக் காணடி யென்றான்
கண்கள் உறங்கலெனுங் காரியமுண்டோ
　　கண்ணனைக் கையிரண்டுங் கட்ட லின்றியே.

பொருள்: வெண்கல வாணிகர்—வெண்கலப் பாத்திரம் வைத்து விற்கும் வியாபாரிகள்.

விளக்கம்: கும்மாளம் கொட்டிய பெண்கள் போய் விட்டார்கள். அவர்களால் தான் தூக்கம் கெட்டது. இனி வருமோ? வராது. கண்ணன் எனக்காகக் காத்திருக்கின்றான். அவன் இரவுக் குறியாகச் சொன்ன இடமெது? வெண்கல வியாபாரிகளின் தெருக் கடைசியில் உள்ள வேலிக்குப் பக்கம். அங்கேதான் நான் அவனைக் காண வேண்டும். அவனைக் காணாமல் என் கண்கள் உறங்க ஒரு காரணமுமில்லை. காணும் காரணத்தாலேயே என் கண்கள் உறங்கும். கண்கள் உறங்கல் என்னும் காரியம் நடைபெறுமா? நடைபெற வேண்டுமானால் கண்ணனை என் கைகள் இரண்டாலும் கட்டி அணைக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. கண்ணன் - என் காதலன் 3

காட்டிலே தேடுதல்

திக்குத் தெரியாத காட்டில் – உனைத்
தேடித் தேடி இளைத்தேனே

1. மிக்க நலமுடைய மரங்கள் – பல
விந்தைச் சுவையுடைய கனிகள் – எந்தப்
பக்கத்தையும் மறைக்கும் வரைகள் – அங்கு
பாடி நகர்ந்துவரு நதிகள் – ஒரு (திக்குத்)

2. நெஞ்சில் கனல் மணக்கும் பூக்கள் – எங்கும்
நீளக் கிடக்குமலைக் கடல்கள் – மதி
வஞ்சித் திடுமகழிச் சுனைகள் – முட்கள்
மண்டித் துயர்கொடுக்கும் புதர்கள் – ஒரு (திக்)

பொருள்: வரைகள் - மலைகள். கனல் - கானல். மலைக் கடல் - கடல்போன்ற மலைக்கூட்டம். மதி வஞ்சித்திடும் அகழி – புத்தியைப் பேதலிக்கச் செய்யும் அகழிகள். சுனைகள் - ஏரிகள். மண்டி – நிறைந்து

3. ஆசை பெறவிழிக்கும் மான்கள் – உள்ளம்
அஞ்சக் குரல்பழகும் புலிகள் – நல்ல
நேசக் கவிதை சொல்லும் பறவை – அங்கு
நீண்டே படுத்திருக்கும் பாம்பு – ஒரு (திக்குத்)

4, தன்னிச்சை கொண்டலையும் சிங்கம் – அதன்
சத்தத்திற் கலங்கும் யானை – அதன்
முன்னின் றோடுமிள மான்கள் – இவை
முட்டா தயல்பதுங்கும் தவளை – ஒரு (திக்குத்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் :- ஆசை பெறவிழிக்கும் மான்கள் - கண்டார்க்கு ஆசை உண்டாகுமாறு பார்க்கும் மான்கள். நேசக் கவிதை - இனிய பாடல்போல இசைக்கும் பறவைக்குரல்.

5. கால்கை சோர்ந்துவிழ லானேன் - இரு
கண்ணும் துயில்படர லானேன் - ஒரு
வேல்கைக் கொண்டுகொலை வேடன் - உள்ளம்
வெட்கங் கொண்டொழிய விழித்தான் - ஒரு
(திக்குத்)

6. பெண்ணே உனதழகைக் கண்டு - மனம்
பித்தங் கொள்ளு தென்று நகைத்தான் - அடி
கண்ணே எனதிருகண் மணியே - உனைக்
கட்டித் தழுவமனங் கொண்டேன் (திக்குத்)

விளக்கம் :- காட்டின் கொடுமை வருணிக்கப்பட்டுள்ளது. அத்தகைய காட்டில் தலைவி காதலனைத் தேடி அலைகிறாள். காலும் கையும் சோர்வடைகின்றன. கண்ணும் சுழல்கின்றது அவ்வேளையில் கொலைவேடன் ஒருவன் பார்த்தான். அவன் பார்வை கொல்லும்தன்மையுடையதல்ல. வெட்கம் கொள்ளச் செய்தது. கொடிய காட்டில் அழகி ஒருத்தியைக் கண்டவன் திக்குத் தெரியாது திகைத்துச் சோர்ந்து நிற்கும் அவள் நிலைக்கு இரங்காது, எடுத்த எடுப்பிலேயே பெண்ணே... மனம் பித்தங் கொண்டது என்று நகைத்தான். கட்டித் தழுவ மனம் கொண்டேன் என்றான். மேலும்

7. சோர்ந்தே படுத்திருக்க லாமோ? - நல்ல
துண்டக் கறிசமைத்துத் தின்போம் - சுவை
தேர்ந்தே கனிகள்கொண்டு வருவேன் - நல்ல
தேன்கள் உண்டினிது களிப்போம் (திக்குத்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. என்றே கொடியவிழி வேடன் உயிர்
இற்றுப் போகவிழித் துரைத்தான் — தனி
நின்றே இருகரமும் குவித்து — அந்த
நீசன் முன்னர் இவை சொல்வேன் (இக்குத்)

விளக்கம் :- சோர்வு ஏன்? துண்டக்கறியுண்போம், கனியுண்போம் என்று சொன்னான். அவன்பார்வை என் உயிரையே அழித்துவிடும்போலிருந்தது.

9. அண்ணா உனை கடியில் வீழ்வேன் — என்னை
அஞ்சக் கொடுமை சொல்ல வேண்டா — பிறன்
கண்ணாலஞ் செய்துவிட்ட பெண்ணை — உன்தன்
கண்ணாற் பார்த்திடவுந் தகுமோ?

10. ஏடி, சாத்திரங்கள் வேண்டேன் — நின
தின்பம் வேண்டுமடி கனியே! — நின்தன்
மோடி கிறுக்குதடி தலையை — நல்ல
மொந்தைப் பழையகள்ளைப் போல

பொருள் :- மோடி-மோகம், மொந்தை-பானை.

விளக்கம் :- காதல் உணர்வு மிக மென்மையானது. நாசூக்காகத் தெரிவிக்கவேண்டிய அதனை, வேடன் தனக்கே யுரிய முரட்டுப்பாஷையில் தெரிவித்தான். "மலரினும் மெல்லிது காமம். சிலர் அதன் செவ்வி தலைப்படுவார்" என்பது திருக்குறள். இந்த வேடன் அந்தச் சிலருள் ஒருவனுகான். வேடபாஷையில் பேசியவனுக்குத் தலைவி கூறிய பதில் இது. அவன் பெண்ணே! என்று ஆரம்பித்தான். பித்தங்கொள்ளுது. கட்டித்தழுவ மனங்கொண்டேன் என்றான். பெண்ணே என்ற அவனிடம், இவள் அண்ணே என்றாள். அஞ்சக் கொடுமை சொல்ல வேண்டாம் என்றாள். நான் கல்யாணம் செய்து விட்டவள் என்றாள். இந்த இன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகளும் அறிவுரைகளும் வேடர் காதில் ஏறுவதில்லையே. அவன் சாத்திரங்கள் வேண்டாம் என்றான். வேண்டியது இன்பமடி என்றான். உன்றன் மோடி, தலையைக் கிறுக்குதடி என்றான். அவன் அனுபவத்தில் பழங்கள்ளு நினைவு வருகிறது. மொந்தை மொந்தையாக உள்ளே தள்ளிய புளித்த கள்ளுப் போதை நினைவு வருகிறது. அது போலக் கிறுக்குதடி என்றான். அது கள்ளு வெறி. இது காமவெறி.

11\. காதா லிந்தவுரை கேட்டேன் – அட
கண்ணா வென்றலறி வீழ்ந்தேன் – மிக
போதாக விங்கியிதற் குள்ளே – என்றன்
போதந் தெளியநினைக் கண்டேன்

12\. கண்ணா வேடனெங்கு போனான் – உனைக்
கண்டே யலறி விழுந்தானோ – மணி
வண்ணா எனதபயக்குரலில் – எனை
வாழ்விக்க வந்த அருள் வாழி

விளக்கம் :- வேடனுரை கேட்ட தலைவி செய்வதறியாது மயங்கி வீழ்ந்தாள். அதற்குள்ளே கண்ணன் காட்சி தந்தான். எனை வாழ்விக்க வந்த அருளே! வேடனெங்கே? அலறி வீழ்ந்தானோ? என்று கேட்டாள்.

R. Chandrakumar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. கண்ணன் - என் காதலன் 4

பாங்கியைத் தூது விடுத்தல்

ரசங்கள்—சிருங்காரம், ரௌத்ரம்

1. கண்ணன் மனநிலையைத் தங்கமே தங்கம்
(அடி தங்கமே தங்கம்)
கண்டுவர வேணுமடி தங்கமே தங்கம்
எண்ண முரைத்துவிடில் தங்கமே தங்கம்—
பின்னர்
ஏதெனிலுஞ் செய்வமடி தங்கமே தங்கம்

2. கன்னிகை யாயிருந்து தங்கமே தங்கம்—
நாங்கள்
காலங் கழிப்பமடி தங்கமே தங்கம்
அன்னிய மன்னர் மக்கள் பூமியிலுண்டாம்—
என்னும்
அதனையுஞ் சொல்லிடடி தங்கமே தங்கம்.

விளக்கம்: தலைவனிடம் தோழியைத் தூதுவிட்ட தலைவி, கண்ணனுடைய மனநிலைதான் உண்மையிலே என்ன? என்னிடம் உண்மையான காதல் அவனுக்கு உண்டா? என்னைத் திருமணம் புரிந்து கொள்ளும் எண்ணம் அவனுக்கு உண்டா? இவற்றையெல்லாம் கண்டுவா. அவனது உண்மையான எண்ணத்தை எங்களுக்குச் சொல்லி விட்டால், பிறகு நாம் ஏதும் செய்து கொள்ளுவோம்.

அவன் என்னை ஏற்றுக்கொள்ளாவிட்டால், கன்னிகையாகவே காலத்தைக் கழிப்போம் என்று சொல். அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லாவிட்டால் வேறுமன்னர்கள், மனிதர்களும் தான் மணந்து கொள்ளுவதற்கு இருக்கிறார்கள் என்பதையும் சொல்லிவிடு.

'ஏதெனினும் செய்வமடி' என்று பொதுவாகச்சொன் னவள் விளக்கமாக 'கன்னிகையாயிருந்து காலங்கழிப்ப மடி' என்றுவள் அதற்கு மாறாக்கத் தலைவனுக்குச் சிறிது உறைக்கும்படியாக அன்னிய மன்னர் மக்கள் பூமியிலுண் டாம் என்றும் சொல்லிவிடடி தங்கமே தங்கம் என்றாள்.

3. சொன்ன மொழிதவறும் மன்னவ னுக்கே—
எங்கும்
தோழமை யில்லையடி தங்கமே தங்கம்
என்ன பிழைகளிங்கு கண்டிருக்கிறான்—அவை
யாவும் தெளிவுபெறக் கேட்டுவிடடீ

4. மையல் கொடுத்துவிட்டுத் தங்கமே தங்கம்—
தலை
மறைந்து திரிபவர்க்கு மானமுமுண்டோ?
பொய்யை யுருவமெனக் கொண்டவனென்றே
—கிழப்
பொன்னி யுரைத்ததுண்டு தங்கமே தங்கம்

விளக்கம்: வருவதாகச் சொன்ன கண்ணன் வரவில்லை. மொழி தவறிவிட்டான். அவனோடு இனி என்ன நட்பு. அப்படி என்ன பிழைகளை என்னிடம் கண்டு விட்டான். நான் ஏதும் செய்யவில்லையே.

நான் பேதை. என் மனத்தில் மையல் ஊட்டியது யார்? கண்ணன் தானே. ஊட்டி விட்டுத் தலைமறைவாகத் திரிகிறானே. பொய்யின் உருவம் கண்ணன் என்று கிழப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னி சொன்னாள். நான் தான் அதைப் புறக்கணித்து மையல் கொண்டேன்.

5. ஆற்றங் கரையதனில் முன்ன மொருநாள் —
என்னை
அழைத்துத் தனியிடத்தில் பேசியதெல்லாம்
தூற்றி நகர்முரசு சாற்றுவனென்றே
சொல்லி வருவையடி தங்கமே தங்கமே

6. சோர மிழைத்திடையர் பெண்களுடனே —
அவன்
சூழ்ச்சித் திறமை பலகாட்டுவ தெல்லாம்
வீரமறக்குலத்து மாதரிடத்தே
வேண்டிய தில்லையென்று சொல்லி விடடீ.

விளக்கம்: அமைதியாகப் பேசிய தலைவி சிறிது ஆத்திரத்தோடு சொல்கிறாள். என்னைத் தனியிடத்தில் பேசியதை, ஊர் முழுவதும் சொல்லித் தூற்றுவேன் என்கிறாள். ஆசைக்கு அகப்படாதவனை, அச்சங்காட்டி அகப்படுத்தலாமென்பது கருத்து. அதேமுறையில் இடைப்பெண்கள் அப்பாவிகள். அவர்களிடம் காட்டியதை மறக்குலத்து மங்கையிடமா காட்டுவது என்கிறாள்.

7. பெண்ணென்று பூமிதனில் பிறந்துவிட்டால் —
மிகப்
பீழையிருக்குதடி தங்கமே தங்கம்
பண்ணொன்று வேய்ங்குழலில் ஊதிவந்
திட்டான் — அதைப்
பற்றிமறக்குதில்லை பஞ்சை யுள்ளமே

8. நேரமுழுதிலுமப் பாவிதன்னையே—உள்ளம்
நினைத்து மறுகுதடி தங்கமே தங்கம்
தீர ஒருசொலின்று கேட்டு வந்திட்டால்-பின்பு
தெய்வ மிருக்குதடி தங்கமே தங்கம்

விளக்கம்: கண்ணனைக் கோபித்து என்ன பயன் என்று உணர்ந்த தலைவி, தன்னையே நொந்து கொள்கிறாள். பெண் பிறவியே துன்பம் என்கிறாள். அவன் எது வேண்டுமானாலும் செய்யட்டும் அவன் வேய்ங்குழலிசையை மறக்க முடியவில்லையே. அவனை மறக்கலாமென்று நினைத்தால் அவனைத் தவிர வேறெதையும் நினைக்க முடியவில்லையே. எதற்கும் முடிவாகக் கேட்டு வந்து விடு. பின்னர் தெய்வம் விட்ட வழி என்று மன ஆறுதல் அடைகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. கண்ணன் - என் காதலன் 5

பிரிவாற்றாமை

1. ஆசை முகமறந்து போச்சே — இதை
    ஆரிடம் சொல்வேனடி தோழி
நேச மறக்கவில்லை நெஞ்சம் — எனில்
    நினைவு முகமறக்க லாமோ ?

2. கண்ணில் தெரியுதொரு தோற்றம் — அதில்
    கண்ண னழகுமுழு தில்லை.
நண்ணு முகவடிவு காணில் — அந்த
    நல்ல மலர்ச்சிரிப்பைக் காணோம்.

3. ஓய்வு மொழி தலுமில்லாமல் — அவன்
    உறவை நினைத்திருக்கும் உள்ளம்
வாயு முரைப்பதுண்டு கண்டாய் — அந்த
    மாயன் புகழினையெப் போதும்

4. கண்கள் புரிந்துவிட்ட பாவம் — உயிர்க்
    கண்ண னுரு மறக்கலாச்சு ;
பெண்களினத்திலிது போல — ஒரு
    பேதையை முன்பு கண்டதுண்டோ ?

5. தேனை மறந்திருக்கும் வண்டும் — ஒளிச்
    சிறப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும் — இந்த
    வையம் முழுதுமில்லை தோழி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6\. கண்ணன் முகமறந்துபோனால்—இந்தக்
கண்களிருந் துபய னுண்டோ?
வண்ணப் படமுமில்லை கண்டாய்—இனி
வாழும் வழியென்னடி தோழி?

விளக்கம்: தலைவனைப் பிரிந்த நிலையில் தலைவியின் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகள் கவிதை வடிவமெடுத்துள்ளன. கண்ணன் பிரிவுத்துயரால், அவனது ஆசைமுகத்தையும் மறந்து விட்டேன். ஆனால் என் நெஞ்சம் அவனிடம் வைத்துள்ள அன்பை மறக்கவில்லை. அவனது உருவம் தெரிகிறது. அது கண்ணனைப்போலவே தெரிகிறது. ஆனால் அதில் கண்ணன் அழகில்லை. அந்த மலர்ச்சிரிப்பை அந்த முகத்தில் காணவில்லை. ஓய்வின்றி அவன் உறவையே என் நெஞ்சு நினைக்கிறது. அவன் புகழையன்றி என் வாய் வேறு எதனையும் உரைப்பதில்லை. ஆனால் என் கண்கள் என்ன பாவம் செய்தனவோ? கண்ணன் உருவத்தை மறந்து விட்டனவே. பெண்களுக்குள் என்னைப் போல ஒரு பேதையை இதுவரை கண்டதுண்டோ? தேனைமறந்தவண்டு, வண்ணபேதங்களற்ற மலர், வானை மறந்த பயிர் இவை இவ்வுலகில் எங்கேனும் உண்டோ? ஆனால் என் கண்களோ ஆசை முகம்மறந்து போக்க கண்ணன் உரு மறக்கலாச்சு.

கண்ணன் முகம்மறந்தபின் இந்தக் கண்களால் என்ன பயன். அவனை நினைவு கொள்ள அவன் உருப் பொறித்த படமுமில்லையே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. கண்ணன் - என் காந்தன்

சிருங்கார ரசம்

1. கனிகள் கொண்டுதரும் — கண்ணன்
   கற்கண்டு போலினிதாய்
   பனிசெய் சந்தனமும் — பின்னும்
   பல்வகை அத்தர்களும்
   குனியும் வாள்முகத்தான் — கண்ணன்
   குலவி நெற்றியிலே
   இனிய பொட்டிடவே - வண்ணம்
   இயன்ற சவ்வாதும்

2. கொண்டை முடிப்பதற்கே — மணங்
   கூடு தயிலங்களும்
   வண்டு விழியினுக்கே — கண்ணன்
   மையுங் கொண்டுதரும்
   தண்டைப் பதங்களுக்கே — செம்மை
   சார்த்துசெம் பஞ்சுதரும்
   பெண்டிர் தமக்கெல்லாம் — கண்ணன்
   பேசருந் தெய்வமடி.

3. குங்குமங் கொண்டுவரும் — கண்ணன்
   குழைத்து மார் பெழுத
   சங்கையி லாதபணம் — தந்தே
   தழுவி மையல் செய்யும்
   பங்கமொன் றில்லாமல் முகம்
   பார்த்திருந் தாற்போதும்
   மங்கள மாகுமடீ — பின்னோர்
   வருத்த மில்லையடீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்: தலைவி தன்னிடம் தன் காந்தனாகிய கண்ணனுக்குள்ள காதற் பெருக்கைச் சொல்கிறாள்: அதனை வெளிப்படுத்த அவனது அன்புச் செய்கைகளை நினைவு கூருகின்றாள்; கற்கண்டு போன்ற கனிகளைக் கொண்டு வந்து தருவான். குளிர் சந்தனமும் அத்தர்களுமாகிய வாசனைப் பொருட்களைத் தருவான். நெற்றியில் இடப் பொட்டும் தருவான் மணங் கூடு தைலங்களும் கண்மையும் காலணி அணிந்த பாதங்களுக்கு; செம்பஞ்சுக் குழம்பும் தருவான்; மார்பில் பூசக் குங்குமம் தருவான். வேண்டிய பொருள் எல்லாம் தருவான். அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும். எவ்வித வருத்தமும் தோன்றாது. தலைவிக்கு விருப்பமான பொருள்கள் எவை எவையென நினைந்து அவற்றை அன்போடு வழங்கும் காதல் பெருக்கைத் தலைவி தோழிக்குக் கூறி இன்பம் அடைகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கண்ணம்மா - என் காதலி 1

காட்சி வியப்பு

1. சுட்டும் விழிச்சுடர்தான் — கண்ணம்மா!
சூரிய சந்திரரோ
வட்டக் கரியவிழி — கண்ணம்மா
வானக் கருமை கொல்லோ?
பட்டுக் கருநீலப் — புடவை
பதித்த நல் வயிரம்
நட்ட நடு நிசியில் — தெரியும்
நட்சத்திரங்க ளடி!

2. சோலை மல ரொளியோ — உனது
சுந்தரப் புன்னகை தான்
நீலக் கடலலையோ — உனது
நெஞ்சி லலைக ளடி!
கோலக் குயி லோசை — உனது
குரலி னிமை யடி
வாலைக் குமரி யடீ — கண்ணம்மா!
மருவக் காதல் கொண்டேன்.

3 சாத்திரம் பேசுகிறாய் — கண்ணம்மா!
சாத்திர மேதுக் கடீ!
ஆத்திரங் கொண்டவர்க்கே — கண்ணம்மா!
சாத்திர முண்டோ டீ!
மூத்தவர் சம்மதியில் — வதுவை
முறைகள் பின்பு செய்வோம்
காத்திருப் பேனோ டீ? — இதுபார்
கன்னத்து முத்த மொன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்: கண்ணம்மாவைக் காதலியாகக்கொண்டு சிருங்கார ரசம் பொங்க அவள் அழகின் அற்புதம் தோன்றப் பாடப்பட்டுள்ளது.

முதலில் தன்னைக் கவர்ந்த கண்ணம்மாவின் கண்ணழகின் சிருங்காரமும் அற்புதமும் பேசப்படுகின்றன. அவள் விழிப்பார்வை சூரிய சந்திரர்போல் சுடர்விடுகின்றது; வானக் கருமைபோன்ற கருவிழிகள். அணிந்திருந்த கருநீலப் பட்டில் பதித்திருந்த நல் வயிரங்கள் நடுநிசியில் தெரியும் நட்சத்திரங்கள்போல ஒளிவிடுகின்றன. கருநீலப் புடவை நடுநிசிக்கும், வயிரங்கள் நட்சத்திரங்களுக்கும் உவமையாயின. உவமையில் தோன்றும் அற்புதத்தாலும் சிருங்கார ரசமே பெறப்பட்டது.

அடுத்துத் தோன்றுவது அவள் மாயப் புன்னகை. அது சூளிர சோலை மலரை நினைவுபடுத்துகிறது. அவளது நெஞ்சின் நினைவலைகள் ஒன்றன்பின் ஒன்றாகப் பெரிதும் சிறிதுமாக வந்து மோதுவது நீலக் கடலலைகளை நினைவு படுத்துகின்றது. குரலினிமையின் அற்புதமும் சிருங்காரமும் குயில்தான். சிருங்காரம் உச்சக்கட்டத்தையடைந்து விட்டது; தாங்கமுடியாத உணர்ச்சி; வாய்விட்டே சொல்லி விடுகிறான். வாலைக்குமரி! உன்னை மருவக் காதல் கொண்டேன் என்றான்.

உணர்வின் உச்சத்தில் நிற்பவனுக்குச் சாத்திரம் புரியுமோ? சாத்திரம் எதற்கு? சாத்திர முறைப்படி திருமணத்தைப் பின்னர் செய்வோம்; அதுவரை காத்திருக்க முடியுமா? இதோ பார் "இச்"; ஆம் அது முத்தத்தின் ஒலி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. கண்ணம்மா - என் காதலி 2

பின்னே வந்து நின்று கண் மறைத்தல்.

சிருங்கார ரசம்

1. மாலைப் பொழுதிலொரு மேடை மிசையே
வானையும் கடலையும் நோக்கி யிருந்தேன்
மூலைக் கடலினையவ் வான வளையம்
முத்தமிட்டேதழுவிமுகிழ்த்தல் கண்டேன்
நீல நெருக்கிடையில் நெஞ்சு செலுத்தி
நேரங் கழிவதிலும் நினைப்பின்றியே
சாலப் பலபலநற் பகற் கனவில்
தன்னை மறந்த லயந் தன்னில் இருந்தேன்.

2. ஆங்கப் பொழுதிலென் பின்பு றத்திலே
ஆள் வந்து நின்றெனது கண்மறைக்கவே
பாங்கினிற் கையிரண்டும் தீண்டி யறிந்தேன்
பட்டுடை வீசுகமழ் தன்னி லறிந்தேன்
ஓங்கி வருமுவகை யூற்றி லறிந்தேன்
ஒட்டு மிரண்டுளத்தின் தட்டி லறிந்தேன்.
வாங்கி விடடிகையை யேடி கண்ணம்மா!
மாய மெவரிடத்தில் என்று மொழிந்தேன்

விளக்கம்: நேரம் மாலை; இடம் ஒரு மேடை; தலைவன் வானையும் கடலையும் நோக்கி அவற்றின் அழகை ரசித்துக் கொண்டிருந்தான்; அப்போது கடலின் ஒரு மூலையை வானம் தழுவி முத்தமிட்டது. சரிய அவ்வேளையின் நெருக்கத்தில் மனதைச் செலுத்திப் பார்த்தான். நேரம் போகும் நினைப்பின்றி பகற்கனவில் தன்னை மறந்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது யாரோ ஒருவர் பின்புறமாக வந்து கண்ணைப் பொத்தினர். பொத்திய பாங்கில் கைகளைத் தீண்டி யார் என்பதையறிந்தேன். பட்டுடையின் நறுமணத்திலிருந்தும் யாரென்று தெரிந்துகொண்டேன். ஊற்றெடுத்து ஓங்கி வந்த மகிழ்ச்சியில், இணைந்துவிட்ட எம் இருவர் உள்ளத்திலும் எழுந்த உணர்வின் ஒன்றிப்பில், அவன் யார் என்பதை அறிந்தான், அவன் வேறுயாருமல்ல. கண்ணம்மா தான். மாயம் எவரிடத்திலடி, கையை வாங்கிவிடடி என்றான்.

18. கண்ணம்மா - என் காதலி 3

(முகத்திரை களைதல்)

சிருங்காரசம்

தில்லித் துருக்கர் செய்த வழக்கமடீ! — பெண்கள்
திரையிட்டு முகமலர் மறைத்து வைத்தல
வல்லி யிடையினையும் ஓங்கி முன்னிற்கும் — இந்த
மார்பையும் மூடுவது சாத்திரங் கண்டாய்
வல்லி யிடையினையும் மார்பிரண்டையும் — துணி
மறைத்ததனால் அழகு மறைந்த தில்லை
சொல்லத் தெரிவதில்லை மன்மதக்கலை — முகச்
சோதி மறைத்துமொரு காதலிங் குண்டோ?

ஆரியர் முன்னெறிகள் மேன்மையென்கிறாய் — பண்டை
ஆரியப் பெண்களுக்குத் திரைகள் உண்டோ?
ஓரிரு முறைகண்டு பழகியபின் வெறும்
ஒப்புக்குக் காட்டுவதிந் நாண மென்னடீ
யாரிருந் தென்னையிங்கு தடுத்திடுவார் வலு
வாக முகத்திரையை அகற்றி விட்டால்
காரியமில்லையடி வீண்பசப்பில் — கனி
கண்டவன் தோலுரிக்கக் காத்திருப்பானோ?

விளக்கம் : திரையிட்டு முகம் மறைத்து நின்ற தலைவியை நோக்கித் தலைவன் கூறுவது இது திரையிடும் இவ்வழக்

கம் டெல்லிமாநகரை முஸ்லிம்கள் ஆண்டகாலத்தில் ஏற்பட்டதாகும்; முகத்திற்குத் திரையிடும் இவ்வழக்கம் நாட்டின் ஏனைய இடங்களிலும் பரவிவிட்டது. இவ்வழக்கத்தை நீக்கவேண்டுமென்றும் கருத்துடையவர் பாரதியார். இதனை மறைமுகமாக கண்டிக்கின்றார். மறைக்க வேண்டியது முகமல்ல. வல்லிக்கொடி போன்ற இடையும் மார்புமே மறைக்கப்பட வேண்டியன. இவற்றை மறைப்பதினால் அழகு குறைவதில்லை. அது சிறந்து காணப்படும். எனவே அவற்றை மறையாமல் அழகு போய் ஆபாசம் தோன்றும் என்பது கருத்து. காதல் உணர்வு கண்ணோடு கண் இணைநோக்கு ஒத்தலிலேயே அரும்புகிறது. அவ்வுணர்வு தோன்றுதற்கு முகத்தை மறைக்கும் வழக்கம் தடையாயிருக்கிறது. எனவே முகச்சோதி மறைத்துமொரு காதலிங்குண்டோ என்றார்.

பழகியவர்களுக்குள் நாணம் ஏது? முகம் மூடுதல் ஒப்புக்கு நாணம் உள்ளதென்று காட்டுவதாகும் அன்றிப் பிறிதில்லை. எப்படிக் கூறியும் திரையகன்றாக தலைவியைப் பார்த்து முகத்திரையை விலந்து பறித்தால் என்னையார் தடுப்பார்? கனிபோன்ற உன்னைக் கண்டவன் அதனையுண்பதற்குத் தடையாயிருக்கும் தோல் போன்ற முகத்திரையைக் களையாதிருப்பானோ?

19. கண்ணம்மா - என் காதலி 4

நாணிக்கண் புதைத்தல்

சிருங்காரசம்

1. மன்னர் குலத்தினிடைப் பிறந்தவளை — இவன்
 மருவ நிகழ்ந்ததென்று நாண முற்றதோ?
சின்னஞ் சிறு குழந்தை யென்ற கருத்தோ — இங்கு
 செய்யத் தகாத செய்கை செய்தவருண்டோ?
வன்ன முகத்திரையைக் களைந்திடென்றேன் — நின்றன்
 மதங்கண்டு துகிலினை வலிதுரிந்தேன்
என்ன கருத்திலடி கண்புதைக்கிறாய் — எனக்
 கெண்ணப் படுவதில்லை யேடி கண்ணம்மா!

2. கன்னி வயதிலுனைக் கண்டதில்லையோ — கன்னங்
 கன்றிச் சிவக்க முத்தமிட்டதில்லையோ?
அன்னிய மாகநம்முள் எண்ணுவதில்லை — இரண்
 டாவியுமொன் றாகுமெனக் கொண்டதில்லை
 யோ?
பன்னிப் பலவுரைகள் சொல்லுவதென்னே? துகில்
 பறித்தவன் கைபறிக்கப் பயங்கொள்வானோ
என்னைப் புறமெனவுங் கருதுவதோ? — கண்கள்
 இரண்டினில் ஒன்றை யொன்று கண்டு
 வெள்குமோ?

விளக்கம்: முகத்திரையைக் களையென்றான் தலைவன் தலைவி நாணத்தால் கண்புதைத்தாள். இந்த நாணத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கு என்ன கருத்து. மன்னர் குலத்தானை, இடையர் குலத்து இவன் மருவநேர்ந்ததே என்ற நாணமோ? இன்றும் சின்னப் பெண் என்ற நினைப்பா? அப்படி என்னத்தைச் செய்து விட்டேன் முகத்திரையைக் களையென்றேன். களையாது மறுக்காட்டினாய். துகிலையே உரிந்துவிட்டேன் என்ன கருத்தில் கண்புதைக்கிறாயோ? அதன் காரணம் என்னால் அறியக்கூட வில்லையே என்றான்.

நீ கன்னியாயிருக்கும் போது நான் உன்னைக் கண்டதில்லையா? உன் கன்னம் சிவக்க முத்தமிட்டதில்லையா ஒருவரை யொருவர் வெவ்வேறாக எண்ணுவதில்லை யென்றும் ஒருயிர் ஆவதென்றும் நாம் கருதவில்லையா? இத்துணையின்பின் பல கூறுவானேன் கண்களில் ஒன்று மற்றதைக்கண்டு வெட்கப்படுமா? எனவே நீ என்னைக் கண்டு வெட்கப்படலாமா?

3. நாட்டுனித் பெண்களுக்கு நாயகர் சொல்லும் — சுவை

நைந்த பழங்கதைகள் நானுரைப்பதோ?
பாட்டுஞ் சுதியு மொன்று கலந்திருந்தால்-தம்முள்
பன்னி உபசாரனே பேசுவதுண்டோ?
நீட்டுங் கதிர்களொடு நிலவு வந்தே — விண்ணை
நின்று புகழ்ந்து விட்டுப் பின்மருவுமோ?
மூட்டும் விறகினையச் சோதிகவ்வுங்கால்—அவை
முன்னுப சாரவகை மொழிந்திடுமோ?

விளக்கம்: பொதுவாகப் மனைவிமார்க்கு அவர் கணவன்மார் கூறும் சுவையற்ற பழங்கதைகளை நான் உனக்குக் கூறுவேனா? பாட்டும், சுதியும் இணையும் போது அவற்றுள் ஒன்றையொன்று உபசாரம் செய்வதுண்டா? அவை இணைவது இயல்பானதல்லவா? கதிர் நீட்டிவரும் நிலவு விண்ணைப் புகழ்ந்துவிட்டுத்தான் மருவுமோ? விற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனை நெருப்புக்கவ்வி எரிக்கும் போது ஏ, விறகே நான் உன்னை எரிக்கப் போகிறேன். நீ அழாதே என்று உபசாரம் பேசிவிட்டா எரிக்கும். அதுபோல நானும் நீயும் இணைவது இயல்பான செயல்தானே? இதில் என்ன உபசாரம்? என்ன நாணம்? என்ன கண்புதைப்பு?

4. சாத்திரக்காரரிடம் கேட்டு வந்திட்டேன்—அவர்
சாத்திரஞ் சொல்லியதை நினைக்குரைப்பேன்
நேற்று முன்னாளில் வந்த உறவன்றடீ! — மிக
நெடும் பண்டைக்கால முதல் நேர்ந்து வந்ததாம்
போற்றுமி ராமனெனமுன்புதித்தனை — அங்கு
பொன்மிதிலைக் கரசன் பூமடந்தை நான்
ஊற்றமுதென்ன வொரு வேய்ங்குழல் கொண்டேன் —கண்ணன்
உருவம் நினைக்கையைப் பார்த்தன் அங்கு நான்

5. முன்னை மிகப்பழமை இரணியனும் —எந்தை
மூர்க்கந் தவிர்க்க வந்த நரசிங்கன் நீ
பின்னையோர் புத்தனென நான் வளர்ந்திட்டேன் — ஒளிப்
பெண்மை அசோதரையென் றுன்னை யெய்தினேன்
சொன்னவர் சாத்திரத்தில் மிகவல்லர்காண் — அவர்
சொல்லிற் பழுத்திருக்கக் காரணமில்லை
இன்னுங் கடைசிவரை ஒட்டிருக்குமாம் —இதில்
ஏதுக்கு நாண முற்றுக் கண்புதைப்பதே?

விளக்கம் : ஏதோ, நானும் நீயும் பதியவர்போல எண்ணுகிறுயே! நான் சொல்வதை நம்பாவிட்டால் ஒரு

சாத்திரக்காரன் கூறியதைச் சொல்லுகிறேன் கேள்: எனக்கும் உனக்கும் உள்ள உறவு நேற்று முந்தநாள் ஏற்பட்டதல்ல வாம் மிகப்பழங்காலம் முதற் கொண்ட தொடர்பாம்.

நீ முன்பு இராமனாகப் பிறந்திருந்தாயாம். நான் மிதிலை மன்னன் மகள் சீதையாகப் பிறந்திருந்தேனாம்.

அதன்பின்பு வேயங்குழற் கண்ணனாக நீ பிறந்திருந்தாயாம். நான் அருச்சுனனாகப் பிறந்திருந்தேனாம்;

அதற்குப் பிறகு எந்தையின் மூர்க்கக் குணத்தை நீக்க நீ நரசிங்க அவதாரமெடுத்தாயாம், நான் இரணியன் மகன் பிரகலாதனாயப் பிறந்திருந்தேனாம் கடைசியாகப் புத்தனாக நான் பிறந்தேன், பின்னர் யசோதரையாகப் பிறந்த உன்னை அடைந்தேன். அதலால் நமது உறவு நெடும் பண்டைக் காலம் முதல் நேர்ந்து வந்ததாம். இப்படிச் சொன்ன சாத்திரி. சாதாரணமானவன் அல்லன் மிகவல்லவர். மேலும் எம் இருவர் நட்பும் இப்பிறவியின் மட்டுமல்ல வரும் பிறவிகளில் ஒட்டியிருக்கும் பிறகேன் வெட்கப்படுகிறாய்? கண்புதைக்கிறாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. கண்ணம்மா - என் காதலி 5

குறிப்பிடம் தவறியது

சிருங்கார ரசம்

தீர்த்தக் கரையினிலே—தெற்கு மூலையில்
செண்பகத் தோட்டத்திலே
பார்த்திருந்தால் வருவேன்—வெண்ணிலாவிலே
பாங்கியோ டென்று சொன்னாய்
வார்த்தை தவறிவிட்டாய்—அடி கண்ணம்மா!
மார்பு துடிக்குதடீ!
பார்த்தவிடத்தே யெல்லாம்—உன்னைப் போலவே
பாவை தெரியுதடீ

மேனி கொதிக்குதடீ—தலை சுற்றியே
வேதனை செய்குதடீ
வானி லிடத்தை யெல்லாம்—இந்த வெண்ணிலா
வந்து தழுவுது பார்!
மோனத்திருக்கு தடீ! இந்தவையகம்
மூழ்கித் துயிலினிலே
நானொருவன் மட்டிலும்—பிரிவென்பதோர்
நரகத் துழலுவதோ?

விளக்கம்: தலைவி தன்னைச் சந்திக்குமாறு குறிப்பிட்ட இடத்தில் தலைவன் வந்து காத்திருக்கிறான். தலைவி வரவில்லை. அவள் குறிப்பிட்ட இடம் தீர்த்தக்கரையின் தெற்கு மூலையிலேயுள்ள செண்பகத் தோட்டம். வரச் சொன்ன நேரம், இரவு வெண்ணிலா புறப்பட்ட பின்பு தலைவன் காத்திருக்கின்றான் தலைவியைக் காணாத தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன் வார்த்தை தவறாதவன், தவறி விட்டானே என்று வருந்துகின்றான்? அவன் நினைவாகவேநிற்கும் அவனுக்கு பார்க்கும் பொருளெல்லாம் அவளாகவே தோன்றுகின்றன.

மேனி சொதித்துத் தலை சுற்றி வேதனையுற்ற தலைவன் வானத்தை வெண்ணிலாவு வந்து தழுவுவதைப் பார்க்கிருன். அதனுல் விரசதாபம் மேலோங்குகிறது. இந்த வையம் துயிலில் மூழ்கிக்கிடக்கிறது. எத்தகை மோனம்! இதுவல்லவோ காவலர்க்கேற்ற நேரம்! இந்த நேரம் வீணாய்க் கழிகின்றதே. இயற்கை ஒன்றை ஒன்று தழுவிக்கொண்டது. எனக்கு மட்டும் நான் மட்டும் நரகத்தில் கிடந்து வேதனைப்படுவதா? ஆம் பிரிவு ஒரு நரகம்தான்

கடுமையுடை யதடீ!—எந்தநேரமும்
காவலுன் மாளிகையில்
அடிமை புகுந்த பின்னும் எண்ணும்போது நான்
அங்கு வருதற்கில்லை
கொடுமை பொறுக்கவில்லையே—கட்டுங் காவலும்
கூடிக் கிடக்கு தங்கே
கடுமையரசியவள்—எதற்காகவோ
நாணிக் குலைந்திடுவாள்

கூடிப் பிரியாமலே ஓரி—ராவெலாம்
கொஞ்சிக்குலவி யங்கே
ஆடிவிளையாடியே—உன்றன் மேனியை
ஆயிரங்கோடி முறை
நாடித்தழுவி மனக்—குறை தீர்ந்து நான்
நல்ல களி யெய்தியே
பாடிப் பரவசமாய்—நிற்கவே—தவம்
பண்ணிய தில்லையடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்: உன் மாளிகையிலேயே வந்து நான் உன்னைச் சந்திகாலாமென்றால் காவலாளியின் கடுமையைக் கடப்பது எங்ஙனம்? கட்டுக்காவலுள் கிடக்கும் உன்நிலையை என்னால் பொறுக்க முடியவில்லை.

உன்னை விட்டுப் பிரியாமல் இரவிரவாக உன்னோடு கொஞ்சிக்குலவ வேண்டும். உன்மேனியை ஆயிரங்கோடி முறை தழுவ வேண்டும் என்று என் மனம் துடிக்கின்றது இதனால் என்மனக்குறை தீரும் உண்மையான. மகிழ்ச்சியடைவேன். ஆனால் அதற்கு நான் தவம் செய்யவில்லையே!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. கண்ணம்மா — என் காதலி 6

யோகம்

1. பாயு மொழி நீ யெனக்கு, பார்க்கும் விழி நானுனக்கு;
தோயும் மது நீயெனக்கு, பார்க்கும் விழி நானுனக்கு;
வாயுரைக்க வருகுதில்லை, வாழி நின்றன் மேன்மையெல்லாம்;
தூயசுடர் வானொளியே! சூறையமுதே! கண்ணம்மா!

2. வீணையடி நீ யெனக்கு, மேவும் விரல் நானுனக்கு;
பூணும் வடம் நீயெனக்கு, புது வயிரம் நானுனக்கு
காணுமிடந்தோறு நின்றன் கண்ணி னொளி வீசுதடி!
மாணுடைய பேரரசே! வாழ்வு நிலையே! கண்ணம்மா;

3. வான மழை நீயெனக்கு, வண்ண மயில் நானுனக்கு
பான மடி நீ யெனக்கு, பாண்டமடி நானுனக்கு
ஞான வொளி வீசுதடி, நங்கை நின்றன் சோதிமுகம்
ஊனமறு நல்லழகே! ஊறுசுவையே! கண்ணம்மா!

4. வெண்ணிலவு நீ யெனக்கு, மேவுகடல் நானுனக்கு;
பண்ணு சுதி நீ யெனக்கு; பாட்டினிமை நானுனக்கு;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணியெண்ணிப் பார்த்திடிலோர் எண்ண
மிலை நின்சுவைக்கே;
கண்ணின் மணி போன்றவளே! கட்டியமுதே!
கண்ணம்மா!

5. வீசு கமழ் நீயெனக்கு. விரியுமலர் நானுனக்கு;
பேசு பொருள் நீயெனக்கு. பேணுமொழி நா
னுனக்கு;
நேசமுள்ள வான்சுடரே! நின்னழகை யெது
ரைப்பேன்
ஆசை மதுவே! கனியே! அள்ளு சுவையே கண்
ணம்மா!

6. காதலடி நீயெனக்கு காந்தமடி நானுனக்கு
வேதமடி நீயெனக்கு விந்தையடி நானுனக்கு
போதமுற்ற போதினிலே பொங்கி வருந் தீஞ்
சுவையே
நாதவடிவானவளே நல்ல உயிரே கண்ணம்மா

7. நல்லவுயிர் நீ யெனக்கு. நாடியடி நானுனக்கு;
செல்வமடி நீ யெனக்கு, சேம நிதி நானுனக்கு
எல்லையற்ற பேரழகே! எங்கும் நிறை பொற்
சுடரே!
முல்லை நிகர் புன்னகையாய்! மோதுமின்பமே!
கண்ணம்மா!

8. தாரையடி நீ யெனக்கு, தண்மதியம் நானுன
க்கு;
வீரமடி நீ யெனக்கு, வெற்றியடி நானுனக்கு
தாரணியில் வானுலகில் சார்ந்திருக்கும் இன்ப
மெல்லாம்
ஓருருவமாய்ச் சமைந்தாய்! உள்ளமுதே கண்ண
ம்மா

விளக்கம் : யோகம் என்பது ஒருமையடைதலாகும்; ஆன்மா, இறைவனோடு ஒன்றுதலாகும். ஓருருவமாய்ச் சமைதல் என்று இதனைப் பாரதியார் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் காதலியாகிய கண்ணம்மாவும் நானும் வேறல்லர்; பாயும் ஒளியாக நிற்கின்றாள் கண்ணம்மா, நான் அந்த ஒளி தரும் வழியாக நிற்கின்றேன். நீ எனக்கு வீணை: ஆம், நல்லதோர் வீணை; அவ்வீணையில் இனிய நாதத்தை இசையின் வண்ண பேதங்களை மீட்டும் விரல்கள் எவை? நான் நான், கழுத்திற் பூணும் வயிர வடம் நீ, அதிற் பதித்த வயிரமே நான். மழைக்கும் மயிலுக்குமுள்ள உறவு தெரியும்தானே. மழைபோல வந்து என்னைக் குளிர்விப்பாய். நான் அந்தக் குதூகலத்தில் மயில்போல ஆடிவருவேன். நீ இனிய பானம், அதனை ஏந்தி நிற்கும் கிண்ணம் நானே. கடலுக்கும் நிலவுக்கும் எவ்வளவு பொருத்தம்! நிலவு கண்டு கடல் பொங்குகிறது. உன்னைக் கண்டவுடன் என் உள்ளமும் மகிழ்ச்சியால் பொங்குகிறது. சுதியில்லாமல் பாட்டுண்டோ? நீயில்லாமல் நான் உண்டோ? நீ தரும் இன்பத்தை எண்ணக் கூடுமோ? நான் மலராக நிற்கின்றேன். நீயோ அதன் நறுமணமாக வீசுகின்றாய். நீ இல்லையானால் நான் மணமற்ற மலராகி விடுவேன். கருத்தும் சொல்லும் பொருத்தமுறப் பின்னிப் பிணைவதல்லவா? மொழி. நீ இல்லையானால் பொருளற்ற சொல்லாய்ப் பொலிவிழந்து விடுவேன் நான்.

காதல் உணர்வு எனக்குத் தனியானதல்ல; உன் உருவமே அதுதான். அந்தக் காதலைத்தரும் காந்த சக்தி நானல்லவா? வேதமும் அது உணர்த்தும் ஞானமுமாக நீயும் நானும் நிற்கின்றோம். உயிரின் இயக்கத்தை யுணர்த்துவது நாடித் துடிப்பல்லவா நீயில்லையானால் இந்த நாடி துடிப்பதெங்கே? உன்னையன்றி வேறு செல்வம் எனக்கு இல்லை.

நானே சேர்த்து வைத்த செல்வமாக இருக்கின்றேன். எந்நேரமும் குறைவற எடுத்து நீ அனுபவிக்கலாம். இயற்கை ஒளியுள்ள நட்சத்திரமே. உன் நடுவுள் நான் இருக்கின்றேன். என்னைச் சூழ்ந்து நீ நிற்கின்றாய். கண்ணம்மா! வீரமின்றி வெற்றியுண்டா? வீரம் தருபவள் நீயே, இவ்வுலகில் வானுலகில் சார்ந்திருக்கும் இன்பமெல்லாம் ஒன்றாய் நீயாய்ச் சமைந்தாய். நீ அன்றி இவ்வுலகில் ஏதும் இல்லை - அந்த நீயும் நானும் வெவ்வேறா? ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. கண்ணன் - என் ஆண்டான்

ரசங்கள் : அற்புதம், கருணை

1. தஞ்ச முலகினில் எங்கணு மின்றித்
   தவித்துத் தடுமாறி
பஞ்சைப் பறையன் அடிமைப் புகுந்தேன்,
   பார முனக் காண்டே!
ஆண்டே! பாரமுனக் காண்டே!

2. துன்பமும் நோயும் மிடிமையுந் தீர்த்துச்
   சுகமருளல் வேண்டும்
அன்புடன் நின்புகழ் பாடிக்குதித்து நின்
   ஆணை வழி நடப்பேன்;
ஆண்டே! ஆணைவழி நடப்பேன்.

3. சேரி முழுதும் பறையடித் தேயருட்
   சீர்த்திகள் பாடிடுவேன்?
பேரிகை கொட்டித் திசைகளதிர நின்
   பெயர் முழக்கிடுவேன்.
ஆண்டே! - பெயர் முழக்கிடுவேன்.

4. பண்ணைப் பறையர் தங் கூட்டத்தி லேயிவன்
   பாக்கிய மோங்கி விட்டான் ;
கண்ண னடிமை யிவனெனுங் கீர்த்தியில்
   காதலுற் றிங்கு வந்தேன் ;
ஆண்டே! – காதலுற் றிங்கு வந்தேன்;

5. காடு கழனிகள் காத்திடுவேன், நின்றன்
   காலிகள் மேய்த் திடுவேன்
பாடுபடச் சொல்லிப் பார்த்ததன் பின்னரென்
   பக்குவஞ் சொல்லாண்டே!
ஆண்டே! பக்குவஞ் சொல்லாண்டே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தோட்டங்கள் கொத்திச் செடி வளர்க்கச் சொல்லி
   சோதனை போட்டாண்டே!
காட்டு மழைக்குறி தம்பிச்சொன்னு லெனைக்
   கட்டியடி யாண்டே
ஆண்டே! – கட்டியடியாண்டே!

7. பெண்டு குழந்தைகள் கஞ்சி குடித்துப்
   பிழைத்திட வேண்டுமையே!
அண்டை யயலுக்கென் னுபகாரங்கள்
   உபகாரங்கள் - ஆகிட வேண்டுமையே!

8. மானத்தைக் காக்கவோர் நாலு முழத்துணி
   வாங்கித் தரவேணும்;
தானத்துக்குச் சில வேட்டிகள் வாங்கித்
   தரவுங் கடனுண்டே!
சில வேட்டி – தரவுங் கடனுண்டே!

9. ஒன்பது வாயிற் குடிலினைச் சுற்றி
   யொருசில பேய்கள் வந்தே
துன்பப் படுத்துது மந்திரஞ் செய்து
   தொலைத்திட வேண்டுமையே!

10. பேயும் பிசாசுந் திருட்டு மென்றன்
   பெயரினைக் கேட்டளவில்,
வாயிங் கையுங்கட்டி அஞ்சி நடக்க
   வழிசெய்ய வேண்டுமையே!
தொல்லை தீரும் – வழிசெய்ய வேண்டுமையே!

விளக்கம்: கண்ணனை ஆண்டாளாகவும் தன்னை அடிமையாகவும் கற்பனை செய்து பாடப்பட்டது. ஆண்டாளிடம் முற்றாகத் தன்னை அடிமைப்படுத்தத் தன்வயம் எதுவுமின்றிச் சரணாகதியடைந்த நிலையை இங்கு காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறையடித்துப் பாடுவேன் என்றும் எல்லாத் திசைகளிலும் பேரிகை கொட்டி அவன் புகழ் பரப்புவேன் என்றும் சொல்கிறான்.

கண்ணனுக்கு அடிமை என்ற புகழே போதும் இதனாற் பறையருக்குள்ளே இவன் பாக்கியம் செய்தவன் என்ற நிலையே போதும். அடிமை என்ற வகையில் எந்த வேலையையும் செய்யச் சித்தமாயுள்ளதன் நிலையை வயற்காடு, தோட்டங்களை வளஞ்செய்வேன். மாடுகளை மேய்ப்பேன். என் வேலைத்திறனைப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள் என்றான். ஒருமுறை தோட்டங்களைக் கொத்திச் செடி கொடி நடச் செய்து சோதித்துப் பாருங்கள்; மழை வரும் என்று சொன்னால் மழைவரும். அவ்வளவு அனுபவம் உள்ளவன் நான். அது தவறினால் என்னைக் கட்டிப்போட்டு அடியுங்கள்.

எதுவும் செய்ய நான் தயாராக இருக்கிறேன். எனக்காக அல்ல, என் பெண்டு பிள்ளைகள் கஞ்சி குடித்துப் பிழைக்க ஆண்டை ஐயனுக்கு உபகாரம் செய்ய கூலியாக நான் அதிகம் கேட்கவில்லை. மானம் மறைக்கத் துணி, ஒரு நாலு முழம். மற்றவர்களுக்கும் கொடுக்கச் சில வேட்டிகள்.

ஒன்பது வாசலையுடைய குடிலாகிய இவ்வுடம்பைச் சுற்றி சுற்றிச் சில தனைப் பேய்கள் வந்து துன்பப்படுத்துகின்றன. அதை உன் மந்திரத்தால் தொலைத்துவிட வேண்டும். பேய், பிசாசு, திருடர்கூட என் பெயரைக் கேட்டவுடன் வாயும் பொத்திக் கையுங் கட்டி அஞ்சி நடக்க வழிசெய்ய வேண்டுமையா.

ஆண்டே! ஆண்டே! எனப் பலமுறை அழைத்துத் தன் அடிமைப் பணிவையும் தஞ்சம் தனக்கு நீயன்றி வேறு யாருமில்லை எனத் தன் நிர்க்கதியையும் கூறினன். மனத்துயர், உடல்நோய், வறுமைஇடர் இவை தீர்க்க வேண்டும். ஆண்டவன் புகழ் பாடுதல், அவன் ஆணை வழி நடத்தலே தன்வேலை என்கின்றான். அதனை இன்னும் விளக்கமாக, சேரிமுழுதும் ஆண்டவன் புகழை

☆

23. கண்ணம்மா - எனது குலதெய்வம்

பல்லவி

நின்னைச் சரணடைந்தேன் — கண்ணம்மா!
நின்னைச் சரணடைந்தேன்!

சரணங்கள்

1. பொன்னை உயர்வைப் புகழை விரும்பிடும்
என்னைக் கவலைகள் தின்னத் தகாதென்று
(நின்னை)

2. மிடிமையும் அச்சமும் மேவியென் நெஞ்சில்
குடிமை புகுந்தன, கொன்றவை போக்கென்று
(நின்)

3. தன்செய லெண்ணித் தவிப்பது தீர்ந்திங்கு
நின்செயல் செய்து நிறைவு பெறும் வண்ணம்
(நின்னை)

4. துன்ப மினியில்லை. சோர்வில்லை. தோற்பில்லை,
அன்பு நெறியில் அறங்கள் வளர்ந்திட (நின்னை)

5. நல்லது தீயது நாமறியோம், அன்னை
நல்லது நாட்டுக! தீமையை ஓட்டுக! (நின்னை)

விளக்கம்: கண்ணம்மாவாகிய தன்குல தெய்வத்தி டம் சரணடைந்த பக்தன், தன் குறைகளைச் சொல்லி அருள்வேண்டும முறையில் அமைந்தது இப்பகுதி.

பொன்னையும், உயர் வாழ்வையும், புகழையும் விரும் பும் என்னைக் கவலைகள் தின்னாது அருள்க. வறுமையும் அச்சமும் என்நெஞ்சில் குடியாக இருக்கப் புகுந்தன. அவற்றைக் கொன்று போக்கி அருள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் என் செயல் என்னும் ஆணவம் தீர்த்
எல்லாம் நின் செயல் என்று எண்ணி நிறைவு வெ
அருள்க;

துன்பம், சோர்வு, தோல்வி அற்று அன்பு வழிய
அறங்கள் வளர்த்திட அருள்க.

நன்மை தீமை நாமறியோம் நன்மையைத்
யென்றும் தீமையை நன்மை யென்றும் மயங்குவோ
தாயே நன்மை இது வென அருள். தீமை இது எ
அருள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கூட்டுறவு அச்சகம்,
யாழ்ப்பாணம்.

விலை
4/25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org